www.tamilarangam.net


# களத்தில்

ஒரு பலம்வாய்ந்த சர்வதேச சக்தியாக அணிதிரண்டு எமது மக்களின் விடிவுக்காக உலகத் தமிழினம் உரிமைக்குரல் எழுப்ப வேண்டும்.
- தமிழீழத் தேசியத் தலைவர்

(21.10. 1998 ) தாயகத்தின் உண்மை நிகழ்வுகளைத் தாங்கி வரும் செய்தித் தாள் (172) அன்பளிப்பு: 60 p


## தமிழ் மக்களின்
# நீதி - சமாதானம் - பாதுகாப்பு
### ஆய்வுக் கருத்தரங்கு
### அனைத்துலக விவகாரங்களுக்கான றோயல் நிறுவனமும் அனைத்துலக தமிழர் சம்மேளனமும் இணைந்து ஏற்பாடு

15–10–98இல் இலண்டனில் அனைத்துலக விவகாரங்களுக்கான றோயல் நிறுவனமும்



அனைத்துலக தமிழர் சம்மேளனமும் இணைந்து தமிழ் மக்களின் நீதி– சமாதானம்– பாதுகாப்பு என்னும் தலைப்பில் ஆய்வு செய்யும் கருத்தரங்கு ஒன்றை ஏற்பாடு செய்தனர். இக்கருத்தரங்கில் இருநூறுக்கும் மேற்பட்ட பிரித்தானிய மக்கள் கலந்து கொண்டனர். இதே மண்டபத்தில் ஆறு மாதங்களுக்கு முன்னதாக சிறிலங்கா வெளி விவகார அமைச்சர் கலந்து கொண்ட கருத்தரங்கில் பங்கேற்றவர்களின் எண்ணிக்கையை விட மேற்படி கருத்தரங்கில் அதிகளவிலான மக்கள் கலந்து கொண்டதை றோயல் நிறுவனத்தினரால் சுட்டிக்காட்டப் பட்டது குறிப்பிடத்தக்கது. இதன்போது பிரதம பேச்சாளர்களாக பிரித்தானிய பாராளுமன்ற உறுப்பினர் திரு. Barry Gardner, விடுதலைப் புலிகளின் சர்வதேச சட்ட நிபுணர்





திரு.வி.உருத்திரகுமாரன் (அமெரிக்கா), டாக்டர்.என்.எதிர் வீரசிங்கம், சட்டத்தரணி திரு. குமார் பொன்னம்பலம் (இலங்கை) ஆகியோர் பங்கு கொண்டனர். இக்கருத்தரங்கில் சிறிலங்கா அரசு தமிழர் தாயகத்தில் மேற்கொண்டு வருகின்ற இன அழிப்பு நடவடிக்கைகள், இராணுவ ஆக்கிரமிப்புக்கள், மனித உரிமை மீறல்கள் என்பவை விரிவாக எடுத்துரைக்கப்பட்டது.

டாக்கடர் என்.எதிர்வீரசிங்கம் அவர்கள் அண்மையில் வன்னிக்கும், தமிழீழத்தின் ஏனைய பகுதிகளுக்கும் நேரடியாகச் சென்று கண்டறிந்த உண்மைகளை ஆதாரங்களுடன் எடுத்துரைத்தார்.

சட்டத்தரணி குமார் பொன்னம்பலம் அவர்கள் சிறிலங்கா அரசு தீர்வுத் திட்டம் என்ற போர்வையில் ஆடும் நாடகங்களையும், இராணுவத் தீர்வையும் திணிப்பதற்கு அரசு செய்யும் முயற்சிகளையும் அம்பலப்படுத்தினார்.

விடுதலைப் புலிகளின் சர்வதேச சட்ட நிபுணர் திரு. உருத்திரகுமாரன் அவர்கள் தமிழீழ தேசிய விடுதலைப் போராட்டத்தை சட்ட ரீதியாக நியாயப்படுத்தும் விவாதங்களையும் அரசியல்



தீர்வுக்கான நிலைப்பாடுகளை உலகில் நடந்துகொண்டிருக்கும் பல்வேறு உதாரணங்களுடன் ஆய்வு செய்தார். ❇

## கவசவாகனம் கடலில் பாய்ந்தது 40 இராணுவம் சேர்ந்து செத்தது

லங்கா முடித்த என்ற சரக்கு கப்பலில் சிறிலங்கா இராணுவத்தினர் தாம் புதிதாக வாங்கிய அதி நவீன கவசவாகனம் ஒன்றை திருகோணமலையிலிருந்து பருத்தித்துறைக்கு எடுத்துச் சென்ற வேளை பருத்தித்துறையிலிருந்து ஐம்பது கடல்மைல் தொலைவில் கவசவாகனத்தை பிணைத்திருந்த சங்கிலி அறுந்து அது கடலுள் பாய்ந்தது எனவும் இச் சம்பவத்தில் அச்சமயம் கப்பலில் இருந்த படையினரில் நாற்பது படையினர் உயிரிழந்ததாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

சரக்கு கப்பல்களை சிறிலங்கா இராணுவத்தினரையும் இராணுவத் தளபாடங்களையும் ஏற்றி இறக்கப் பயன்படுத்துவதாக தமிழீழ விடுதலைப் புலிகள் தெரிவித்த குற்றச் சாட்டு இச்சம்பவத்தினால் ஆதார பூர்வமாக உலகிற்குத் தெரிய வந்துள்ளது.

## நாசகார வேலைக்கு துணைபோகாதீர் !

*❇ விடுதலைப் புலிகளின் யாழ் மாவட்ட அரசியல் பிரிவினால் யாழ் பல்கலைக்கழக மாணவர்களுக்கு விடுக்கப்பட்ட துண்டுப்பிரசுரம்*

யாழ் குடா நாட்டில், பல்கலைக்கழக மாணவர்களுக்கோர் பகிரங்க வேண்டுகோள் என்ற தலைப்பில், விடுதலைப் புலிகளின் யாழ் மாவட்ட அரசியல் பிரிவு துண்டுப் பிரசுரம் ஒன்றை வெளியிட்டுள்ளது. இராணுவ ரீதியாக தமிழரின் போராட்டத்தை நசுக்க முடியாது திண்டாடும் இனவாத அரசு, குடா நாட்டில் நுட்பமான நாசகார வேலைகளைப் புரிந்து வருவதாக அதில் குறிப்பிட ப்பட்டுள்ளது. மக்களின் போராட்ட உணர்வு, உயர் கலாச்சாரப் பண்புகள், தனித் துவாழும் வாழ்க்கைப் பண்பு கள் ஆகியவற்றைச் சிதைக்க சிறிலங்கா அரசு திட்டமிட்டு நடவடிக்கைகளை மேற் கொள்வதாக சுட்டிக் காட்டும் அவ்வறிக்கை, நீலப்படம், மஞ்சள் புத்தகம், பாலியல் புகைப்படங்கள், போதை வஸ்த்துக்க்ள் என்பவற்றைப் பரப்பி எம்மக்களின் கலாச் சாரத்தை சீரழிப்பதுடன் எமது வாழ்க்கையோடு பின்னிப் பிணைந்த கல்வி வளத்தையும் எதிரியானவன் அழித்து வரு கிறான் எனவும் சுட்டிக் காட்டியுள்ளது.

போராளிகளின் தியாகத்தாலும் மக்களின் அர்ப்பணிப்புக்க ளாலும் உருப்பெற்று வருகின்ற தமிழீழம் நாளை இருண்ட தாகிவிடக்கூடாது எனவும், தமிழீழத்தை வளம்கொழிக்கும் பூமியாக மாற்ற வேண்டிய, உருவாக்க வேண்டிய பொறு ப்பும் கடமையும் இன்றைய மாணவர்களாகிய உங்களையே சாரும் எனவும் அவ்வறிக்கை குறிப்பிட்டுள்ளது. ❇

### ஓயாத அலைகள் - 2 ஒளிநாடா உலா வருகிறது

மகத்தான மாபெரும் வெற்றித் தாக்குதலான, ஓயாத அலைகள் இரண்டு இராணுவ நடவடிக்கையின் வீடியோப் பிரதிகள் தற்பொழுது சிறிலங்காவின் தலைநகர் கொழும்புவரை சென்றுள்ளது. முக்கியமான செய்தி முகவர்களுக்கு இவ் வீடியோப் பிரதிகளை விடுதலைப் புலிகள் அனுப்பி வைத்துள்ளனர். சிறிலங்கா அரசு பெரு முயற்சி எடுத்து மறைக்க முனைந்த பல விடயங்கள், தற்போது வீடியோப் பதிவுகளாகி வெளிநாட்டுச் செய்தியாளர்களைச் சென்றடைந்தது.

## செம்மணி புதைகுழிகள் அட்டூழியம் தமிழ்நாட்டில் மக்கள் கொதிப்பு

செம்மணிப் புதைகுழிகள் அட்டூழியம் குறித்து தமிழ் நாட்டில் மக்கள் இடை இனமான உணர்வும் சகோதர பாசமும் வீறு கொண்டெழுந்துள்ளமையை தமிழ் நாட்டில் பரவாலாக இடம்பெற்ற கொடும்பாவி எதிர்ப்புப் போராட்டங்கள் உலகிற்கு எடுத்துக் காட்டியுள்ளன.

மதுரை விழுப்புரம் சென்னை வேலூர் பட்டுக்கோட்டை ஈரோடு திருச்சி தெனி தஞ்சை நெல்லை தூத்துக்குடி விருதுநகர் புதுக் கோட்டை திருப்புறைப்பூண்டி போன்ற இடங்களில் ஐம்பதுக்கும் மேற்பட்ட கட்சிகளைச் சேர்ந்த தமிழ் மக்கள் ஆயிரக்கணக்கில் இந்த சந்திரிகா கொடும்பாவி எதிர்ப்புப் போராட்டங்களில் கலந்து கொண்டனர். கொலைகாரச் சந்திரிகாவின் கொடும்பாவி எரிப்புப் போராட்டம் என நடத்தப்பட்ட இப்போராட்டங்கள் தமிழீழ விடுதலை ஆதரவாளர் ஒருங்கிணைப்புக் குழுவால் நடாத்தப்பட்டது. இப்போராட்டத்தில் கலந்து கொண்டவர்களில் 2000 பேர் வரை கைது செய்யப்பட்ட போதிலும் கூட மக்கள் இன உணர்வுடன் வீறு கொண்டெழுந்து தங்கள் தமிழீழச் சகோதரர்களுக்காக ஆர்வமுடன் போராட்டத்தில் குதித்தமை குறிப்பிடத்தக்கது

## புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்

www.tamilarangam.net




வன்னியில் மக்கள் உணவு கேட்டு வாழும் உரிமை கேட்டு தொடங்கிய சாத்வீகப் போராட்டம், இம்மாதம் 22 யுடன் 50வது நாளை அடைகின்றது. இந்த மக்கள் போராட்டம் தமிழ் மக்களின் வாழ்வுக்கான போராட்டமாக மட்டும் அமையாது இன்றைய உலகின் அரசியல் தத்துவங்களின்–சர்வதேச நிறுவனங்களின் எதிர் காலத்தை நிர்ணயிக்க கூடிய தன்மை வாய்ந்ததாகவும் காணப்படுகின்றது.

இனஅழிப்பு எங்கு எந்த வகையில் இடம்பெற்றாலும் அதனைத் தடுக்க வேண்டிய பொறுப்பு உலக மன்றமாகிய ஐக்கிய நாடுகள் சபையினுடையது. இலங்கைத் தீவில் தமிழீழ மக்களை மையப்படுத்திய இனஅழிப்பு நோக்கிலான சட்டங்களும் ஆயுத அடக்கு முறைகளும் சிங்களப் பெரும்பான்மை அரசாங்கங்களால் திட்டமிட்ட வகையில் நடாத்தப்பட்டு வந்தன– வருகின்றன. இவை யுத்தத்தால் மட்டும் தோற்று விக்கப்பட்ட விளைவு அல்ல.

காலனித்துவ விலகல் ஏற்பட்டதன் பின் தமிழ்ப் பகுதிகளுக்கான கைத்தொழில் பொருளதார திட்டங்கள் அப்பகுதிகளைச் சுரண்டும் தன்மை வாய்ந்தனவாக மாற்றப்பட்டு தமிழர் பகுதிகளின் பொருளாதார முயற்சிகள் முடமாக்கப்பட்டன. பரந்தன் இரசாயன ஆலை காங்கேசன்துறை சீமேந்து ஆலை கந்தளாய் சீனித் தொழிற்சாலை திருகோணமலை இல்மனைட் அகழ்வு எல்லாமே தமிழர் தாயகத்தின் இயற்கை வளத்தை அழித்து சிங்களப் பெரும்பான்மை அர சாங்கத்திற்கு அந்நியச் செலாவணியை மிச்சப்படுத்தல், சிங்களக் குடியேற்றங்களை தமிழ்ப்பகுதிகளில் ஏற்படுத்தி தமிழ் மக்களின் பிரதிநிதித்துவ விகிதாசாரத்தைக் குறைத்து அவர்களின் ஜனநாயக ரீதியிலான பங்களிப்புக்களை மட்டுப்படுத்தல் என்ற அரசியல் நோக்கங்களில் செயற்படுத்தப்பட்டன. அதே வேளை வரண்ட நிலப் பரப்பைக் கொண்ட தமிழர்கள் தங்கள் பகுதிகளில் விவசாய மீன்பிடி கைத்தொழில் முயற்சிகளை வளர்த்து தொழில் வாய்ப்புக்களைப் பெறுவதற்கான பாரிய திட்டங்கள் யாவும் அரசாங்க நிலைகளில் மட்டுமல்ல தனியார் திட்டங்களாக கூட சிங்களப் பெரும்பான்மை அரசாங்கங்களால் அனு மதிக்கப்படவில்லை. இந்நிலையில் தமிழ் மக்கள் தமது பொருளாதாரத்திற்கு உயர்கல்வியிலும் அரசாங்கத் தனியார் நிறுவனங்களின் நிர்வாக பதவிகளிலும் உள்ளூர் வர்த்தகத்திலும் தங்கி நிற்க வேண்டிய நிலை தோற்றுவிக்கப்பட்டது. இதனையும் முடமாக்க 1956ல் தமிழ் மக்கள் மீதான பொருளாதாரத் தடை சிங்களம் மட்டும் சட்டத்தால் பண்டாரநாயக்காவால் திட்டமிட்ட வகையில் ஆரம்பிக்கப்பட்டது. 1958ல் இனஅழிப்பால் தமிழ் மக்களின் கைத்தொழில் வர்த்தக முயற்சிகள் முடமாக்கப்பட்டன. 1970களில் சிறிமாவோ பண்டாரநாயக்காவால் தரப்படுத்தல் மூலம் தமிழ் மக்களின் அடிப்படை மனித உரிமையான உயர்கல்வி மறுக்கப்பட்டது. இவ்வாறாக தமிழ் மக்களின் வாழ்வை அழிப்பதன் மூலம் இனஅழிப்பு நடாத்தப்பட்டு அதன் உச்சக்கட்டமாகவே தமிழ்த்தேச இனமும் சிங்களத் தேச இனமும் சேர்ந்து வாழ்வதற்கு காலனித்துவ பிரித்தானிய அரசாங்கம் விதித்த அரசியல் அமைப்பு நிபந்தனைகளை மீறி சிறிலங்கா என்னும் அந்நிய அரசை சிங்களப் பெரும்பான்மை அரசாங்கம் தமிழ் மக்கள் மீது 1972ல் சட்டவிரோதமாகத் திணித்தது. தம்மை அரசற்ற தேச இனமாக்கி எல்லா வழிகளிலும் தமது வாழும் உரிமையை மறுத்த சிறிலங்கா என்னும் சட்டவிரோத அந்நிய ஆக்கிரமிப்பு அரசாங்கத்தை ஏற்க மறுத்த தமிழ் மக்கள், தமது சுயநிர்ணய உரிமையைப் பயன்படுத்தி தமது வரலாற்றுத் தாயகமும் தனியான அரசுமான தமிழீழத் தேசத்தை மீள அமைக்கப் புறப்பட்டமை சர்வதேச சட்டங்களுக்கு அமைவான அரசியல் நடவடிக்கை. இதனை சிறிலங்கா 1960ம் ஆண்டின் சுயநிர்ணயப் பிரயோகங்களுக்கான ஐக்கிய நாடுகளின் சட்டங்களுக்கு விரோதமான முறையில் தமிழீழ மக்கள் மீதான யுத்தம், தமிழீழத் தேசம் மீதான ஆக்கிரமிப்பு என்பவற்றால் தடுத்து நிற்பதே தமிழீழ மக்களின் பிரச்சினையாகும்.

இலங்கைத்தீவில் தமிழ் மக்கள் இன்றைய யுத்தம் தொடங்குவதற்கு முன்பிருந்தே சிங்களப் பெரும்பான்மை அரசாங்கங்களால் உள்ளக இடப்பெயர்வுக்கு உள்ளாக்கப்பட்டு வருகின்றனர். 1957–58ல் உள்ளக அகதிகளாக 12,000 பேரும் 1983ல் 35000 பேரும் வாழ்ந்ததை யாராலும் மறுக்க முடியாது. இந்த தமிழர்களை அவர்களது தாயகத்திலேயே ஆதர வற்றவர்களாக்கும் போக்கை சிறிலங்கா தமிழர் மேல் யுத்தத்தை திணிப்பதன் மூலம் மேலும் வேகப்படுத்தி



## பதில் கூற வைப்போம்

வருகின்றது. 1986ல் 205,0000 ஆகவும் 1994ல் 525,000 ஆகவும் 1995ல் 768,356 ஆகவும் 1998 ல் ஒரு மில்லியனாகவும் தமிழர்கள் ஆதரவற்றவர்கள் ஆக்கப்பட்டுள்ளனர் என்பது ஆதாரபூர்வமான உண்மை. ஆதலால் தமிழ் மக்களை ஆதரவற்றவர்களாக்குதல் என்பது யுத்தத்தின் விளைவு அல்ல. உண்மையில் யுத்தமே அதன் விளைவு. ஆகவே உணவுத்தடை மருந்துத் தடை என்பன யுத்தத்தை நெறி ப்படுத்துவதற்கான பாதுகாப்பு நடவடிக்கை என்னும் சிறிலங்காவின் கூற்று அப்பட்டமான பொய். மாறாக தமிழ் மக்களை ஆதரவற்றவர்களாக்கி இனஅழிப்பு செய்தல் என்ற சிங்களப் பெரும்பான்மை இனவெறி நோக்கின் அரசியல் செயற்திட்டத்தின் வடிவம் என்பதே உண்மை. இந்நிலையில் தமிழ் மக்கள் மீதான உணவுத்தடை மருந்துத் தடை என்பன உணவை மருந்தை ஆயுதமாக்கும் சர்வதேசக் குற்றச் செயலாக மட்டுமல்ல இனஅழிப்பு என்னும் பயங்கர மனிதாயத்திற்கு எதிரான குற்றச் செயலாகவும் உள்ளது. இதனால் தான் அந்த சிறிலங்காவின் அரசியல் திட்டத்தை வெளிப்படுத்தவும் சர்வதேச நிறுவனங்கள் இனஅழிப்பை தடுத்து நிறுத்துவதற்கான தமது கடமையில் தவறுவதை சுட்டிக்காட்டவும் தமிழ் மக்கள் வன்னியில் சாத்வீக வழியிலான போராட்டங்களில் இறங்கியுள்ளனர்.

ஜயநாயம் என்பதை சாகடித்து இராணுவ நெருக்கத்திற்கும் அஞ்சாது தமிழ் மக்கள் வாக்களிக்க மறுத்து தங்கள் பொதுச்சித்தம் மூலம் சிறிலங்காவை நிராகரித்த நிலையில் எட்டு வாக்கும் பத்து வாக்கும் பெற்றவர்களை தமிழ் மக்களின் பிரதிநிதிகளென உலக மன்றங்களுக்கு காட்டியும் தமிழர் தாயகத்துடனோ தமிழ் மக்களுடனோ தொடர்பேயில்லாத பெயரில் மட்டும் தமிழ் பெயர் கொண்ட வெளிவிவகார அமைச்சர் ஒருவரை உருவாக்கி உலக உலாவுக்கு அனுப்பியும் சந்திரிகா அரசாங்கம் தமிழ் மக்களின் ஜனநாயக உரிமைகளை பகிரங்கமாக வன்முறைப்படுத்திய நிலையிலும் சர்வதேச நிறுவனங்கள் உண்மையைக் கண்டறிவதில் காட்டும் அலட்சியம் ஒரு தேச இனமொன்று இனஅழிப்பு செய்யப்படுவதற்கு ஒப்புதல் வழ ங்கும் தன்மையானதாக மாறி சர்வதேச நிறுவனங்கள் மீதான நம்பிக்கை செயற்திறன் என்பற்றின் மீதான அவநம்பிக்கையை உலக மக்களிடை வளரவைக்கின்றது.

சர்வசதேச நிறுவனங்களின் அலட்சியம் தரும் துணிவிலேயே தென்னாபிரிக்காவில் தொலைக்காட்சிக்கு அளித்த பேட்டியில் சிறிலங்கா ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா நாட்டுக்கு சொந்தமே இல்லாத வர்களான சிறுபான்மையினர் தனியான அரசு கோருகின்றார்களெனத் தமிழ் மக்களைக் குறிப்பிட்டு முழுப் பூசணிக்காயை சோற்றுக்குள் புதைத்தார். இதன் மூலம் அவர் தான் பிரதிநிதித்துவப்படுத்துவது சிங்களவர்களையே எனக் கூறி, தமிழீழ மக்களை அவர் பிரதிநிதித்துவப்படுத்தவில்லை அவரைப் பொறுத்தவர்கள் அவர்கள் இன்னொரு நாட்டவர் எனத் தெளிவு படுத்தியுள்ளார். சிறிலங்காவின் புத்திஜீவிகளில் ஒருவரான சிறிலங்காவின் முன்னாள் நிதியமைச்சர் ரொனில் டீ மெல் கிளிநொச்சியில் சிறிலங்கா சந்தித்த படுதோல்வியினை வர்ணிக்குகையில் அதனை சோழர்களிடம் அனுராதபுரியில் தோல்வி கண்டதன் பின்னர் சிங்கள இனத்திற்கு ஏற்பட்ட மிகப்பெரிய தோல்வி எனக் கூறி சந்திரிகா தென்னாபிரிக்காவில் கூறிய அதே கருத்தை – அதாவது தமிழர்கள் நாட்டுக்குச் சொந்தமற்றவர்கள் என்ற சிங்களப்பேரின வாதக் கருத்தை உறுதிப்படுத்தியுள்ளார். இந்நிலையில் தமிழீழ மக்களை சிறிலங்கா இன்னொரு நாட்டவராகவே கருதுகின்றது என்பது தெட்டத் தெளிவாகின்றது. அதனால் தான் நேற்று யாழ்ப்பாணத்தில் பொட்டல் வெளியில் கொடியேற்றிவிட்டு கொழும்பில் வெற்றிவிழாக் கொண்டாடி தங்கப் பேழையில் சரணாகதிப் பத்திரம் ஏற்று மகிழ்ந்த சந்திரிகா அந்தக் கனவு கலைந்து விட்டதை உணர்ந்த பின்னர் இன்று மாங்குளத்தில் ஏதோ வெற்றிவாகை சூடியது போல வெளிநாட்டில் இருந்து வாழ்த்து அனுப்பி மகிழ்கின்றார். இவை எல்லாம் தமிழ் மக்களின் அரசாக சிறிலங்கா தன்னைக் கருதவில்லை என்பதன் நடை முறை உதாரணங்கள். ஆதலால் தான் வன்னி மக்களின் உணவுக்குரலுக்கும் மருந்துத் தேவைக்கும் சிறிலங்கா செவிகொடுக்காது உள்ளது. இந்நிலையில் தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை ஏற்று அதற்கு பதில் கொடுக்க வேண்டியவர்கள். அவர்களைப் பதில் கொடுக்க வைக்க வேண்டியவர்கள் நாங்கள். ரோம் எரியும் பொழுது பிடில் வாசித்த மன்னர் போல் வாழாது எமது வரலாற்றின் எமது தேசத்தின் வரலாற்றின் அதிமுக்கிய கேள்வியை– அரசற்ற தேச இனமான தமிழீழ மக்களின் உயிருக்கும் உடலுக்கும் வாழ்வுக்கும் யார் பாதுகாப்பு? என்ற கேள்வியை வன்னி மக்கள் சாத்வீகப் போராட்டத்தால் உலக மக்கள் முன்பாக எழுப்பி உள்ள இந்நேரத்தில் அதற்கு உரிய பதில் கிடைக்க நாம் வாழும் நாடுகளில் எல்லாம் எம்மாலான அழுத்தங்களை கொடுக்க வேண்டிய கடமை எம்முடையது.

அதே போல இன்றைய தேச அரசுக்கள் எல்லாம் பெரும்பாலும் யுத்தத்தால் தோன்றியவையே. அதாவது யுத்தத்தை எதிர்கொள்வதற்கான இராணுவ முன்தயாரிப்பு நிலை தேச அரசு ஒன்றுக்கான முன்நிபந்தனையாகவும் உள்ளது. இதனை மறவாது தமிழீழ மக்கள் அவர்களது சாத்வீகப் போராட்டத்தில் வெல்வதற்கும் அவர்களது அரசு நோக்கிய அரசான தமிழீழ விடுதலைப்புலிகளது பாதுகாப்பு வழங்கும் ஆற்றலை பெருக்க மதியும் நிதியும் வழங்க வேண்டிய கடமையும் எமக்குண்டு.

இந்த இரண்டிலும் நாம் அளிக்கப் போகும் பங்களிப்பிலேயே எமது மக்கள் உடைய பட்டினி நிலைமட்டுமல்ல சர்வதேச தொடர்புகள் சர்வதேச அமைப்புக்களின் பொறுப்புக்கள் என்பவை குறித்தும் தெளிவுபிறக்கச் செய்யலாம். ❆

## புலம் பெயர்ந்த மண்ணில் விடுதலைப்பயிர் வளர்க்க வலம் வந்த மாவீரர்கள்

இரண்டாம் ஆண்டு வீரவணக்கம் 26 – 10 – 1998



லெப். கேணல்
நாதன்

நெஞ்சில்
முள்தைத்த மாதிரியாய்
நின்று வலிக்கின்ற நினைவுகளின்
துடிப்பெமக்கு.

இரண்டாண்டுகாலம் உருண்டோடி
மறைந்தாலும்
நேற்றுப்போல் யாவும் நினைவில்
விரிகிறது.
இருள்கவிந்த ஓர்பொழுதில்
உமை இழந்த நினைவுகளோ
துயர்காவி இன்றும் நெஞ்சில்
துடிக்கிறது.

ஒளிதேடி அலைந்த விடுதலைக்
குழந்தைகளை
இருள்அரக்கப் போர்வையுள்ளே
எங்கோ தொலைத்துவிட்டோம்.

நீர்தேடி நீண்ட வேரின் வீரியத்தை
இடைவழியில் எங்கோ
தவறவிட்டோம்.

நேற்றுத்தான் எம்மோடு
கதைத்துச் சிரித்தவரின்
உடல்சுமந்த பொழுதுகள்
இன்றுபோல்
எம்முள் நின்று வலிக்கிறது.

அன்றுபோல் எம்மோடு
ஆனந்தம்கொண்டு ஆரத்தழுவுதற்கும்
அன்பொழுகச் சிரிப்பதற்கும்
கூடிப்பலகதைகள் கூட்டமாய்க்
கதைத்து – அதைச்
செய்து முடிப்பதற்கும்
இன்று எம்மிடையே நீங்களில்லை.

ஆயிரந்தான் கைகள் ஆற்றும்
பணியினிலும்
உம்பங்கில் எப்போதும்
இடைவெளிதான்.
ஆற்றல் மிகுந்தோரை
இழந்துவிட்டோம்
அவ்விடத்தை மீண்டு நிரப்புதற்கு
மீண்டிடுக!!

– ஜெயா –



கப்டன்
கஜன்

www.tamilarangam.net



# கிளிநொச்சி நகர் மீட்கப்பட கொடுத்த அடி

## இராணுவ ரீதியில் மகத்தான சாதனையாகும்

கிளிநொச்சி நகரைக் கைப்பற்றியதன் மூலம் விடுதலைப் புலிகள் மிகப்பெரும் இராணுவ வெற்றி ஒன்றை ஈட்டியுள்ளனர். இவ் வெற்றியானது இன்றைய இராணுவ அரசியல் போக்கை தீர்மானிக்க வல்லது என்று கூறினால்கூட அது மிகையாகாது. கிளிநொச்சி நகரானது வன்னிப் பிரதேசத்தில் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்ததொன்றாகும். ஒருபுறம் வன்னிப் பிரதேசத்தில் உள்ள பெரிய நகரம் என்ற ரீதியில் முக்கியத்துவம் பெறும் இந் நகரமானது, யாழ் வவுனியா நெடுஞ்சாலையில் அமைந்துள்ளது. பெரிய நகரம் என்ற ரீதியிலும் அதன் முக்கியத்துவம் அதிகரிப்பதாக உள்ளது. இதனைத் தவிர ஜெயசிக்குறு படை நடவடிக்கை மூலம் வவனியா, கிளிநொச்சி, பரந்தன் பாதையைத் திறப்பதற்கென சிறிலங்கா அரசு மிகப்பெரும் படையெடுப்பினை நடாத்திக் கொண்டிருக்கையில், நட வடிக்கையில் ஓர் அந்தலையாக சிறிலங்கா அரசு குறிப்பிடும் கிளிநொச்சி நகரம் பறிபோனதானது, இராணுவ ரீதியில் மிகப் பெரும் பின்னடை வேயாகும். சிறிலங்கா அரசு தரை வழிப்பாதையைத் திறப்பதன்மூலம் வன்னிப் பிராந்தியத்தை இருகூறாக்க முனைந்து கொண்டிருக்கையில் புலிகள் கிளிநொச்சியைக் கைப்பற்றியதாவது வன்னிப் பிரதேசத்தின் கிழக்கு மேற்குப் பகுதிகளை இணைக்கும் பல குறுக்கு வழிகள், வீதிகள் புலிகளின் கட்டுப் பாட்டுக்குள் கொண்டு வரக் காரணமாகி உள்ளது. இது ஒருபுறம் இருக்க கிளிநொச்சி நகர் வவுனியா – கிளிநொச்சி நெடுஞ்சாலையில் ஒரு பகுதியாக இருந்தமையினால் சிறிலங்கா இராணுவம் அதற்கென தனியான ஒரு இராணுவ நடவடிக்கையை நடாத்த விழைந்தமையானது அந்த நகரத்தின் கேந்திர முக்கியத்துவத்தையும் அதன் அவசியத்தையும் அதற்கு உணர்த்தியிருப்பதன் வெளிப்பாடேயாகும்.

அதாவது, தரைவழிப்பாதை திறப்பிற்கான சமர்களில் கிளிநொச்சிக்கான சமர், தனிப்பெரும் சமராக களநிலைமையைத் தீர்மானிக்கும் ஒரு சமராக அடைந்து விடக் கூடும் என்பதினாலேயே அதனை முன்கூட்டியே ஆக்கிரமித்துக் கொள்ள வேண்டிய அவசியத்தை சந்திரிகா அரசாங்கம் சடுதியாக ஆரம்பித்தமைக்கு முல்லைத்தீவு இராணுவத் தளம் புலிகளிடம் வீழ்ச்சி கண்டமைதான் காரணம் என, அவ்வாறு இருப்பினும் கூட மிகப்பெரிய தோல்வியை அதாவது ஒரு மாவட்டத்தின் தலைப்பாட்டின் வீழ்ச்சியைச் சரிசெய்ய கிளிநொச்சியை அரசாங்கம் தேர்வு செய்தது, கிளிநொச்சி நகரத்தின் முக்கியத்தின் பாற்பட்டதாகும். இந்த ந்கரத்தின் கேந்திர முக்கியத்துவத்திற்கு சிறிலங்கா இராணுவம் கடந்த காலத்தில் இந்நகருக்கு கொடுத்துள்ள விலையே சிறப்பான எடுத்துக்காட்டாகும்.

1996ல் சத்ஜெய நடவடிக்கை மூலம் கிளிநொச்சி நகரை இராணுவம் கைப்பற்றியபோது சுமார் 700 இராணுவத்தினரை அது பலி கொடுத்திருந்தது. பல டாங்கிகளை இழந்ததோடு பெருமளவு ஆயுதத் தளபாடங்களையும் பறிகொடுத்தது. இதன் பின்னர் 1997 ஜனவரியில் விடுதலைப் புலிகள் ஆனையிறவு – பரந்தன் பகுதியில் மேற்கொண்ட ஓர் ஊடறுத்து அழிக்கும் நடவடிக்கையின் போது நேரடியாக கிளிநொச்சியில் இராணுவம் பெரும் பாதிப்புக்கு இலக்காகாது விடினும் இராணுவம் 300க்கும் மேற்பட்டோரை இழந்ததோடு 11 ஆட்லறிப் பீரங்கிகள் உட்பட பெருமளவு ஆயுதத் தளபாடங்களை இழந்தமையானது கிளிநொச்சி முகாமை தப்ப வைத்துக் கொள்வதற்கான ஓர் பாதுகாப்பு ஏற்பாட்டின் ஓர் விளைவே ஆகும்.

இதேசமயம், இவ்வாண்டின் கிளிநொச்சி நகருக்கான சிறிலங்கா இராணுவத்தின் உயிர்ப்பலியானது, 'ஒரு நகருக்காக சிறிலங்கா இராணுவம் கொடுத்த அதிக பட்ச விலை' என்றே கூறலாம். இந்த ஆண்டில் முதல் கொடுப்பனவாக பெப்ரவரி மாத ஆரம்பத்தில் புலிகள் நடாத்திய தாக்குதலின்போது இராணுவம் கொடுத்த உயிர்ப்பலி மிக உயர்ந்ததாக இருந்தது. இதில் 300க்கும் மேற்பட்ட இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். இதேவேளை இரண்டாவது, மூன்றாவது சமர்களில் முறையே 200, 600 என்ற எண்ணிக்கையில் துருப்புக்களை இழந்தது. இந்த நிலையில்தான் செப்டெம்பர் 27, 28ம் திகதிகளில் கிளிநொச்சி நகருக்காக 1500க்கும் மேற்பட்ட இராணுவத்தினரை பலிகொடுத்துள்ளது, ஆயினும் அதனால் கிளிநொச்சி நகரை தக்கவைத்துக் கொள்ள முடியவில்லை. ஒரு பெரும் வரலாற்றுத் தோல்வியை அது சந்திக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. கிளிநொச்சிப் படைத்தளத்தின் விழ்ச்சியானது சாதாரண ஒரு இராணுவ முகாமின் வீழ்ச்சியல்ல, சிறிலங்கா இராணுவ பாதுகாப்பு வியூகங்களுக்கு விழுந்துள்ள மிகப்பெரும் அடியாகும். ஏனெனில், கிளிநொச்சி நகர் இராணுவ முகாமானது ஒரு உச்ச நிலை பாதுகாப்புக் கொண்ட ஒரு பிரிகேட்டின் கட்டளைப் பீடமாகும். கிளிநொச்சி இராணுவத் தளத்தின் பாதுகாப்பானது இருவகைப்பட்டதாகவும் இருந்தது. ஒன்று, ஆனையிறவு பரந்தன் தொடர் அங்கமாக மிகப் பெரும் இராணுவ தளங்களின் ஒரு பகுதியாக அது இருந்துள்ளது. இதன் மூலம் இத் தளம் தனித்தளம் என்ற ரீதியில் கொள்ளப்பட்டதாக இருக்க வில்லை. ஆகையினால் இத்தளத்தின் மீது மேற்கொள்ளப்படும் தாக்குதலானது மேற்கூறப்பட்ட பெரும் தொடர் தளங்களின் மீது மேற்கொள்ளப்படும் தாக்குதலுக்கு ஒப்பானது போன்றதே ஆகும்.

இரண்டாவதாக, கிளிநொச்சிப் படைத் தளம் என்ற ரீதியிலும் அதன் பாதுகாப்பு அரண்களினால் அது சூழுப்பட்டிருந்தது. புல்டோசர் போட்டு அணையாக உயர்த்தப்பட்ட இப் பாதுகாப்பு ஏற்பாடுகள் மிக உச்ச அளவினதாகும். ஒருபுறம் 15 கி.மீ. நீளமான முன்னணிப் பாதுகாப்பு அரண்களினால் அது சூழப்பட்டு இருந்தது. புல்டோசர் போட்டு அணையாக உயர்த்தப்பட்ட இந்தப் பாதுகாப்பு அரண்கள் கண்ணி வெடிகளினாலும் முட்கம்பிகளினாலும் மேலும் பலப்படுத்தப்பட்டிருந்தது. அத்தோடு அரண்களில் நூற்றுக் கணக்கான காவல் அரண்கள் அமைக்கப்பட்டு அங்கு காவலுக்கு என நூற்றுக்கணக்கான துருப்புக்கள் நிறுத்தப்பட்டு இருந்தன. இதைத் தவிர இராணுவத் தளத்தின் முற்பகுதிகளில் பல சிறு முகாம்களும் மூன்று பெரிய படை முகாம்களும் பாதுகாப்பு வியூகங்களுக்கு ஏற்ப அமைக்கப்பட்டு இருந்தன. இவை ஒவ்வொன்றும் தனித்துவமான பாதுகாப்பு ஏற்பாடுகளைக் கொண்டவையாகவும் இருந்?தன. அத்தோடு இத் தளத்தின் தலைமையகம் போல் இருந்த பிரிக்கேட் தலைமையகம் சீமெந்தினால் அமைக்கப்பட்ட பதுங்கு குழிகளைக் கொண்டதாக இருந்தது. இதற்கும் அப்பால் அம் மினி முகாம்கள், பெரிய முகாம்கள், பிரிகேட் முகாம்கள், காவல் அரண்கள் என்பவற்றிற்கும் இடையிலான தவளைப் பதுங்கு குழிகளும் அமைக்கப்பட்டிருந்தன. இவை பல பகுதிகளில் சீமெந்தினால் சீராகக் கட்டப்பட்டவையாகவும் இருந்தன. இந்த வகையில் கிளிநொச்சி நகரப் படைத் தளத்தின் பாதுகாப்பானது நன்கு சீர் செய்யப்பட்டதும், நன்கு ஒழுங்கு செய்யப்பட்டதுமாக மிகவும் உச்ச நிலையிலே இருந்தது. இந்த நிலையிலும் இந்த முகாமை விடுதலைப் புலிகளின் தாக்குதலில் இருந்து தக்கவைக்க முடியாமல் போனமையானது சிறிலங்கா இராணுவத்தின் தொழில்சட்ட திறன் குறித்து கேள்வி எழுப்பும் அதேவேளை,




விடுதலைப் புலிகளின் ஆற்றல் குறித்து ஒரு பிரமிப்பை ஏற்படுத்தும் ஒன்றாக உள்ளது. இது இவ்வாறிருக்க கிளிநொச்சி நகரத்தின் வீழ்ச்சியானது தனியாக அத்தளத்தின் வீழ்ச்சியுடன் சம்பந்தப் பட்டதாக இருக்குமோ என்ற கேள்வியும் இராணுவ ஆய்வாளர்களிடம் உள்ளது. அதாவது கிளிநொச்சியின் வீழ்சியினால் பரந்தன் படைத்தளம் பெரிதும் பாதிப்புக்கு உள்ளாகி அதனால் ஆனையிறவுத் தளமும் நெருக்குதலுக்கு உள்ளாகியதாகவும் அவர்கள் கருதுகின்றனர். இந்த வகையில் பார்க்கையில் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த கிளிநொச்சியின் வீழ்ச்சியானது ஏனைய தளங்களின் பாதுகாப்பு கேள்விக்கு உள்ளாகி உள்ளன.

சிறிலங்கா ஜனாதிபதியும் சரி பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ரத்வத்த சரி ஏன் சிறிலங்கா கூட்டுப்படைத் தலைமையக பொறுப்பதிகாரியான லெப்ரினன்ட் ஜெனரல் றொகான் தலுவத்தையும் சரி விடுதலைப் புலிகள் இராணுவ ரீதியில் மிகவும் பலவீனப்படுத்தப்பட்டுள்ளனர் விரைவில் யுத்தம் முடிவுக்குக் கொண்டு வரப்படும் எனக் கூறிக்கொண்டு இருக்கையில் புலிகளோ மிகப்பெரும் அதிரடித் தாக்குதலை வெற்றிகரமாக நடாத்தி முடித்துள்ளனர்.

புலிகள் நடாத்திய இத்தாக்குதலானது யுத்தம் குறித்து சிறிலங்கா அரசு செய்துவரும் பிரச்சாரத்திற்கு சாட்டை அடி கொடுத்துள்ளது மட்டுமல்ல, விடுதலைப் புலிகளின் போரிடும் ஆற்றல், பலம், அதன் தலைமைத்துவத்தின் வழி நடத்தும் திறன் என்பவற்றை வெளிக்காட்டும் அம்சமாக அமைந்துள்ளது எனலாம். விடுதலைப் புலிகள் கையாளும் போர் யுக்தியானது நீண்டகாலமாகவே இராணுவ ஆய்வாளர்களுக்கு ஆச்சரியம் ஊட்டுவதாகவே இருந்து வந்துள்ளது. ஒரு ரோந்து அணியை வழி மறித்தத் தாக்குவதில் இருந்து பாரிய படைத்தளத்தை தாக்கி அழித்தல் வரை அவர்கள் கைக் கொள்ளும் போர்முனை யுக்திகள் கடந்த காலம் இராணுவ வரலாற்று யுத்தங்களுக்கும் உள்ளாக்கப்படாதன என, இதனைப் பல இராணுவ ஆய்வாளர்களே ஒப்புக்கொள்கின்றனர்.

ஒரு பெரும் தாக்குதலில் கொல்லப்பட்ட படையினரின் எண்ணிக்கையில் பார்க்கையில் இது முல்லைத்தீவுத் தளத்திற்கு அடுத்த நிலையில் முக்கியத்துவம் பெறுவதாக உள்ளது. ஆயினும் இத்தாக்குதல் குறித்து திட்டமிடல், நடந்தேறிய வேகம் துல்லியம் என்ற ரீதியில் முல்லைத் தீவுத் தளம் மீதான தாக்குதலை விட உயர்ந்த நிலையிலேயே உள்ளது எனலாம். அதிலும் கேந்திர முக்கியத்துவம், இன்றைய இராணுவத்தின் பலம் என்ற ரீதியில் இத்தாக்குதலின் முக்கியத்துவம் பெரிதானதாகும். 3 நாட்களில் கிளிநொச்சி நகர் மீதான தாக்குதல் இடம்பெற்றதாகக் கூறினாலும் நேர அடிப்படையில் பார்த்தால் 26ஆம் திகதி இரவே 27ஆம் திகதி அதிகாலைக்கு சற்றுமுன் தொடங்கி 28ஆம் திகதி பிற்பகலில் முடிவிற்கு வந்த தாக்குதலானது சுமார் 36 மணித்தியாலங்களே நீடித்தது எனலாம்.

இந்நிலையில், புலிகளின் தாக்குதல் வேகம்– திறன் என்பன– இதன் மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளது என்றே கூற வேண்டும். அதாவது, கொரில்லாப் பாணியில் ஊடறுப்புடன் தாக்குதல் ஆரம்பித்து, ஒரு மரபு வழி போன்று இராணுவ முகாமைத் தாக்கி அழித்துள்ளனர். இதில் புலிகளின் நகர்வு முறையும் தாக்குதலின் வேகமும் இராணுவ ஆய்வாளருக்கு நிச்சயமாக ஆச்சரியம் அளிப்பதாகவே இருக்கும். இராணுவ ரீதியில் புலிகளினால் இவ்வாறான வரலாற்றுச் சாதனைகளை படைக்க முடிவதற்கு தலைமைத்துவத்தின் நெறிப்படுத்துதலில் உள்ள கூரிய திறன் முக்கியகாரணமாகும்.

விடுதலைப் புலிகளின் தலைமைத்துவத்தின் இராணுவ நுட்பங்களும் ஆற்றலும் ஏற்கனவே உலகினால் அடையாளம் காணப்பட்டதுதான். இதன் வெளிப்பாடாகவே இன்று விடுதலைப் போராட்டத்திற்கு தலைமைதாங்கும் தலைவர்களில் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரனின் நெறிப்படுத்தலில் நடக்கும் தமிழீழ விடுதலைப் போராட்டமானது நடக்கும் இராணுவ வரலாற்றில் பல புதிய சட்டங்களை தொடராக உருவாக்கிக் கொண்டிருக்கிறது. இந்த வகையில், கிளிநொச்சி நகரில் விடுதலைப் புலிகள் ஈட்டிய வெற்றி இராணுவ ரீதியில், வரலாற்றில் இடம்பெறுவது தவிர்க்க முடியாத ஒன்றாகவே நிச்சயம் இருக்கும். அதிலும் விடுதலைப் புலிகள் இயக்கம் அழிந்து கொண்டிருக்கும் என ஆட்சியாளர்கள் பிரச்சாரம் செய்து கொண்டிருக்கையில் ஒரு கேந்திர நகரை விடுதலைப் புலிகள் கைப்பற்றியது மட்டுமல்ல இரண்டாம் உலகப் போரின் பின்னர் குறுகிய நேரத் தாக்குதல் ஒன்றில்—ஒரு அரசின் நவீன இராணுவத்திற்கு பெரும் இழப்பை ஏற்படுத்தி வரலாற்றுப் பதிவை உருவாக்கவும் காரணமாக இருந்து ள்ளார்கள். அத்தோடு இது சிறிலங்கா அரசு விடுதலைப் புலிகளுக்கு எதிராக கைக்கொள்ளும் போர்த் தந்திரோபாயத்தை கேள்விக்கு ள்ளாக்கி உள்ளனர் என்று கூறுவது மிகையானதல்ல. ❃

தமிழீழத்திலிருந்து
ஜெயராஜ்

www.tamilarangam.net



# விடுதலையை நெருங்கி வரும் யாழ். குடா

யாழ் குடாவில் இராணுவ அடக்குமுறைகளை பிரயோகித்துக் கொண்டு வெளி உலகிற்குத் தாம் அங்கு அமைதியை ஏற்படுத்தி உள்ளதாகக் கூறி, அங்கு தாம் அமைத்த அரக்கு மாளிகையை உலகிற்கு அமைதியின் சின்னமாகக் காட்ட சிறிலங்கா முனைந்து வந்தது. வன்னிப் பெரு நிலப்பரப்பிலும் தென் தமிழீழத்திலும் மக்கள் பட்டினிச் சாவை எதிர்நோக்கிக் கொண்டிருக்க சிறிலங்கா அரசு உலகின் கவனத்தை திசை திருப்ப தனது பிரச்சாரத்திற்காக தனது செய்தி ஊடகங்களில் யாழ் குடாவை அதிலும் யாழ் நகரப் பகுதியை அடிக்கடி காண்பித்து அங்கு மக்கள் சகஜ வாழ்வு வாழ்வதாக காட்ட முற்பட்டது.



ஆனால், சிறிலங்காவின் இராணுவ அரசியல் தலைமை, தாம் யாழ் நகரில் கட்டியுள்ள அரக்கு மாளிகை வெகுவிரைவில் அழிக்கப்படும் என்பதை அறிந்தே இருந்தனர். 1995ன் இறுதிப் பகுதியில் பெரும் எடுப்புடன் யாழ் குடாவை கைப்பற்றிக் கொண்ட சிறிலங்கா, அங்கு தனது முழுப்பலத்தின் மூன்றில் ஒரு பங்கு இராணுவத்தை நிறுத்தியிருந்தது. யாழ் குடா ஒரு இராணுவப் பிராந்தியம் போலவே காணப்பட்டது. அப்படி இருந்தும் விடுதலைப் புலிகள் யாழ் குடாவின் சில பகுதிகளில் நிலை கொண்டிருந்தனர். காலத்திற்கு ஏற்றவகையில் இராணுவத்தினருக்கு எதிரான தாக்குதல்களில் ஈடுபட்டனர்.

யாழ் குடாவிலிருந்து விலகிக் கொண்ட விடுதலைப் புலிகள் வன்னிப் பெருநிலப்பரப்பிலும் தென் தமிழீழத்திலும் தமது ஆதிக்கத்தை நிலை நாட்டிக் கொண்டனர். அங்கு சிறிலங்கா இராணுவம் பாரிய தோல்விகளைச் சந்தித்தது. எவ்வகையிலேனும் தென்னிலங்கை மக்களைச் சமாதானப்படுத்த வேண்டிய நிலையில் இராணுவ நடவடிக்கைகளை இப்பகுதியில் சிறிலங்கா மேற்கொள்ள முயன்றது. விடுதலைப் புலிகளின் யாழ் குடா விலகலானது கெரில்லா அமைப்பாக இருந்த படைப்பிரிவுகள் பாரம்பரிய இராணுவம் போல் மாற்றமடைவதற்கும், பெரும் படைக்கலங்களைக் கையாள்வதில் பயிற்சிகளையும் அனுபவங்களையும் பெற்றுக் கொள்ள பெரும் வசதியாக இருந்தது.

இதற்கு சிறிலங்காவின் இராணுவ நடவடிக்கைகளும் ஒருவகையில் காரணம் என்றே கூறவேண்டும். யாழ் குடாவில் வடமராட்சியின் சில பகுதிகளிலும் தென்மராட்சியின் ஒருசில பகுதிகளிலும் விடுதலைப் புலிகள் வெளிப்படையாகவே நடமாடுகின்றனர். அத்துடன் தீவுப் பகுதிகளிலும் தமது நடவடிக்கைகளை மேற்கொண்டு வ்ளனர். ஈழப்போர் இரண்டின் இறுதிப் பகுதியிலும் மூன்றின் ஆரம்பத்திலும் தீவுப்பகுதி சிறிலங்காவின் கட்டுப் பாட்டுக்குள்ளேயே இருந்தது. 1995ம் ஆண்டின் பின் இந்நிலை முற்றிலும் மாறி தீவுப் பகுதிகள் புலிகளின் கட்டுப்பாட்டுக்குள் வந்தது.

அதேபோன்று சிறிலங்காவைப் பொறுத்தவரையிலும் ஆரம்பத்தில் எவ்வாறு யாழ் குடாவில் பாரிய முகாம்களை மாத்திரம் வைத்திருந்ததோ அது போன்ற ஓர் நிலை தற்போது வந்துகொண்டிருக்கின்றது.

விடுதலைப் புலிகளின் வன்னி பெருநிலப்பரப்பில் சிறிலங்கா மேற் கொண்ட இராணுவ நடவடிக்கைகளில் ஏற்பட்ட இழப்புக்களை ஈடுசெய்ய, யாழ் குடாவிலிருந்தே துருப்புக்கள் நகர்த்தப்பட்டன. அத்துடன் விடுதலைப் புலிகளின் நகர்வுகள் யாழ் குடாவில் அதிகரித்தன. தாக்குதல்கள் மேலும் அதிகரித்தன. பல பகுதிகளில் இராணுவத்தின் நடமாட்டம் முடக்கப் பட்டது. சில பகுதிகளிலாவது தனது கட்டுப்பாட்டை நிலை நிறுத்திக் கொள்ளும்வகையில் சிறு முகாம்கள் அப்புறப்படுத்தி பாரிய முகாம்களாக மாற்றிக் கொண்டன. ஆனால், இந்நிலை கூட இன்று இராணுவத்திற்கு சாதக மாக இல்லை என்பதே இராணுவ ஆய்வாளர்களின் கணிப்பாகும்.

அண்மைய கிளிநொச்சி பரந்தன் தாக்குதல்களின் பின் யாழ் குடாவையும் பெருநிலப்பரப்பையும் பிரிக்கும் ஆனையிறவு முகாம் மட்டுமே எஞ்சியுள்ளது. இயக்கச்சியில் அமை ந்திருந்த எறிகணைப் பீரங்கித் தளம் விடுதலைப் புலிகளால் கைப்பற்றி அழிக்கப்பட்டது.

யாழ் குடாவில் சிங்கள அரசின் போலியான அரசியல் கட்டமைப்புக் கூட செயலற்றதாகி வருகின்றது. அண்மையில் அங்கு இடம்பெற்ற பெரும் குண்டு வெடிப்பு இதற்குச் சான்றாக அமைகிறது. இக்குண்டு வெடிப்பு மூலம் சிறிலங்கா அரசின் யாழ் குடாவிற்கான நேரடிப் பிரதிநிதிகளும் (இராணுவம்) அதன் மறைமுகமான பிரதிநிதிகளும் அழிக்கப்பட்டனர். இதன்மூலம் சிறிலங்கா தாம் எடுத்துவைக்கும் ஒவ்வொரு காலடிகளும் ஆபத்தை நோக்கியும் அழிவையும் நோக்கியுமே சென்றுகொண்டிருக்கின்றது என்பதை தெளிவுபடுத்தியுள்ளது.

1995ன் இறுதிப் பகுதியில் சூரியக்கதிர் இராணுவ நடவடிக்கையை மிக வேகமாகவும் பல முனைகளினூடாகவும் சிறிலங்கா இராணுவம் நடத்திக்கொண்டிருந்தது. யாழ் நகரப்பகுதியை நோக்கி அதன் இராணுவ அணிகள் முன்னேறிக் கொண்டிருந்தன. ஓர் மாலைப் பொழுதில் யாழ் நகருக்கு அண்மித்த பகுதி ஒன்றில் நிலைகொண்டிருந்த இராணுவ அணியின் இராணுவத்தினன் ஒருவன் மக்கள் வெளியேறி குண்டுத் தாக்குதல்களால் இடிந்துபோயிருந்த ஒரு வீட்டுப் பகுதிக்குள் கால் வைத்தான். வீட்டு வளவிற்குள் நுழைந்து கதவைத் திறந்தபோது திடீரென்று அந்த வீடு மட்டுமல்ல அப்பகுதியே பாரிய வெடி ஓசையால் அதிர்ந்தது.

அந்தச் சம்பவத்தில் அப்பகுதியில் நிலை கொண்டிருந்த இராணுவ அணியின் பெரும்பாலானவர்கள் கொல்லப்பட்டும் ஏராளமானவர்கள் காயங்களுக்கும் உள்ளானார்கள். இந்தச் சம்பவத்தின் பின் நகர்வை மேற்கொண்ட இராணுவத்தினர் மறந்தும் எதிலும் கைவைக்கவில்லையாம். சென்ற வழியில் ஏராளமான மா மரங்களில் பழங்கள் பழுத்துத் தூங்கிக் கொண்டிருந்தாலும் தொட்டால் வெடிக்குமே என்ற பயம் தான் காரணம். சூரியக்கதிரின் இந்த அனுபவம் அன்றைய செய்தித் தணிக்கையால் வெளியே வராமல் இருந்தது. பின் தணிக்கை அகற்றப்பட்டபோது, இராணுவக் கட்டுரையாளர்கள் சூரியக்கதிர் விளைவுகள் பற்றி எழுதியபோது இச்சம்பவமும் வெளியில் வந்தது. இன்று மீண்டும் அப்படியானதொரு நிலை யாழ் குடாவில் தோன்றியுள்ளது. சிறிலங்காவின் படைகள் அங்கு எங்கு நுழைய முற்படுகிறதோ அங்கெல்லாம் புதிய யுக்தியுடனான தாக்குதல்கள் நடத்தப்படுகின்றன.

அண்மையில் கட்டடத்தின் கூரையில் குண்டு வெடித்துள்ளது. இனி எங்கெல்லாம் எப்படியெல்லாம் வெடிக்கப்போகிறதோ. எதிர்வரும் மாவீரர் வாரத்திற்கு முன் விடுதலைப் புலிகள் தென்மராட்சிப் பகுதியை கைப்பற்றிக் கொள்வார்கள்என கொழும்பிலிருந்த வெளியாகும் சிங்களப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இச்செய்தியில் புலப்படும் உண்மை பரந்தன் தாக்குதல் மூலம் உறுதிப் படுத்தப்பட்டுள்ளது. பத்திரிகைச் செய்தி உண்மையோ பொய்யோ இன்றுள்ள நிலமை யாழ் குடாவிற்குள் நிலை கொண்டுள்ள சிறிலங்காவின் கையாலாகாத இராணுவம் விரைவில் துரத்தியடிக்கப்படும் என்பது நிதர்சனம். ❁

நன்றி: உலகத் தமிழர்

## பேராசிரியர் சாலை இளந்திரையன் மறைவு

அண்மையில் காலமான பேரறிஞர் சாலை இளந்திரையனுக்கு உலகத்தமிழர்கள் தமது அஞ்சலிகளைத் தெரிவித்தனர். ஈழத்தமிழர் போராட்ட வரலாற்றில் இவரது மறைவு பெரும் இழப்பாகும்.

இக்கவிதையானது பேரறிஞரால் 1986 ம் ஆண்டு நடைபெற்ற பேச்சுவார்த்தையை விமர்சித்து 'வீரவேங்கை' பத்திரிகையில் எழுதப்பட்ட கவிதையாகும்.



பேராசிரியர்
சாலை இளந்திரையன்

### களத்தில் நிற்பவன் மேசைக்குப் போனால் களவாணியாவான்!

பேச்சுவார்த்தை நாடகம் துன்பியல் நாடகம்:
பொதுமக்களே அதன் கதாநாயகர்கள்!
சுகவாசிக்கு மற்றொரு சுற்றுக் காப்பி.
ஏழைக்கு இழுபறி, – இதுவே
பேச்சுவார்த்தை!
நாகரிகக் காரர்களின் பொழுதுபோக்கு
நயவஞ்சகர்கள் கண்டுபிடித்தது
பேச்சுவார்த்தை!
பேச்சுவார்த்தையாலும் பயன் உண்டு,–
அது பாதிக்கப்பட்டவர்களுக்கு அல்ல!
பாதிக்கப்பட்டவனை அழைத்து
வைத்துக் கொண்டு
பேச்சு என்ன, வார்த்தை என்ன?–
பேரம் தானே?
கோரிக்கை தெளிவாக இருக்கும்போது,
உண்டு, இல்லை, சொல்லாமல்
பேச்சுவார்த்தை என்ன?
மரம் வெட்டச் சொன்னால் பட்டை
உரிக்கிறான்,–
பேச்சுவார்த்தை என்று பெயர் வைக்கிறான்!
பாராளுமன்ற மயக்கு மோகினிகளில்,
ஒரே ஒருத்தியின் பெயர் 'பேச்சுவார்த்தை'!
போர்க்களத்தில் இறங்க பயந்தவன்
பேச்சுவார்த்தையில் ஏறி முழக்குகிறான்!
பறித்துக் கொண்டவனிடம் ஒப்பந்தம்
உண்டா?
அதற்குப் பேச்சுவார்த்தை என்று ஒரு
பெயரா?
இவன் பசிபசி என்று ஓலமிடுகிறான்,–
பயிரிட நெல் தேர்ந்தெடுக்கிறது,
பேச்சுவார்த்தை!
அறியாத்தனம் அல்ல பேச்சுவார்த்தை,
அறிந்தறிந்தே நடத்தும் கழுத்தறுப்பு அது!
களத்தில் நிற்கவேண்டியவன் மேசைக்குப்
போனால்
களவாணியாகத்தான் திரும்பி வருவான்!

– முனைவர் சாலை இளந்திரையன்

வீரவேங்கை ஆகஸ்ட்டு 1986

www.tamilarangam.net



# மண்ணின் விடுதலைக்காய்

## மேஜர் விடுதலை

மேஜர் விடுதலை, அவள் நல்ல உயரமும் எடுப்பான தோற்றமும் எதையும் விரைவில செய்து முடிப்பேன் என்ற தன்னம்பிக்கையும் போராளிகள் கடமையில் ஈடுபடுகின்ற பொழுதெல்லாம் அவர்களுடன் பம்பல் அடித்து உற்சாகமூட்டி அவர்களுடன் நெருங்கிப் பழகுகின்ற பண்பும் எந்த வேலைகளிலும் அவதானமான ஒரு போராளி.

அவள் இயக்கத்துக்கு வந்து குறுகிய நாட்கள்தான் என்றாலும் அவளின் வளர்ச்சி பெரியது. அவள் நல்ல ஒரு பயிற்சியாசிரியர்.

விடுதலை பாசறை தேடி வந்த சிறிது காலங்களிலெல்லாம் அவளது இடமும் சிங்கள இராணுவத்தினரால் ஆக்கிரமிக்கப்பட்டபோது அவளுக்கும் அவளது குடும்பத்தினருக்குமிடையே தொடர்பு அற்றுப்போய்விட்டது. அவளின் இயக்க வாழ்வின் நீண்ட நாட்களில் அம்மாவை காணாததின் ஏக்கமும் தவிப்பும் அவள் வீட்டைப்பற்றி நினைக்கின்ற பொழுதுகளில் வெளிப்பட்டுத் தெரியும்.

கடைசி நேரத்தில் அவளுக்கு தன் வீட்டுக்காரார் வன்னிக்கு வந்திருந்தது தெரிந்தது. ஆனால், அவள் தன் தளபதியிடம் அதுபற்றி எதுவுமே தெரிவிக்கவில்லை.

"சண்டையிலே நிற்கும் பிள்ளைகள் நீண்ட காலமாகத் தங்கடை குடும்பத்தைப் பாக்காம இருக்க, நான் மட்டும் போகப்போறன் எண்டு கேக்கிறது சரியில்லை"

என்று தோழி ஒருத்தியிடம் சொன்னாளாம்.

தன் தாய்க்கு எழுதிய கடிதத்தில், தனக்கு மூன்று ஆசைகள் இருந்ததாகவும், முதலில் சண்டைக்குப் போகவேண்டும், சண்டையை முடித்துக்கொண்டு தலைவரைப் பார்க்க வேண்டும், அதன் பின் அம்மாவைப் பார்க்க வேண்டும் என்பதே அவை எனவும், அவற்றுள் இரண்டு நிறைவேறிவிட்டதாகவும் குறிப்பிட்டிருந்தாள்.

ஜெயசிக்குறு நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்ட நாட்களில் முதலில் நெடுங்கேணியிலேயே அவளின் அணி நின்றது. இராணுவம் முன்னேறி வரலாமென எதிர்பார்த்துக் காத்துக் கொண்டிருக்க, இவர்களுக்கு பின்புறமாக இராணுவம் நகர, வேகமாக தனது அணியை இடம்மாற்றித் திருப்பிப்போட்டு நிலைப்படுத்திச் சண்டை பிடித்தாள்.

அதுதான் அவளின் முதற்சண்டை. முதல் சண்டையே முதுகுப்புறமாக திடீரென ஆரம்பித்தும், அவள் பதட்டமில்லாமல் சண்டையை எதிர்கொண்டது வெற்றிக்கு வழி வகுத்தது.

அவள் பெருமையுடன் அடிக்கடி சொல்லும் விடயம்.

"எல்லாருமே எனக்காகத்தான் போராடுகிறார்கள். அண்ணையும் எனக்காகத்தான் (விடுதலை) உழைக்கிறார். தளபதிகளும் எனக்காகத்தான் உழைக்கிறார்கள்."

என்பாள் சிரித்தபடியே.

அவளின் பொறுப்புணர்வு அவளது சாவின் பின்னரேயே முழுமையாகத் தெரிந்தது. அவளது உடைப்பையில் தன் தளபதியின் பெயரிடப்பட்ட கடித உறை ஒன்றில், தமது படையணி ஆரம்பிக்கப்பட்ட நாளிலிருந்து நடந்த சம்பவங்களை ஒன்றுவிடாமல் எழுதி வைத்திருந்தாள். சகல நடவடிக்கைகளும் துல்லியமாக பதிவு செய்யப்பட்டிருந்தன.

ஒலுமடுப் பகுதியில் தமது பக்கம் டாங்கிகளுடன் முன்னேற முயன்ற படையினருடனான எதிர்த்தாக்குதலின்போது விடுதலை எம் மண்ணின் விடுதலைக்காக வித்தானாள்.

*கமலவதனி திருநாவுக்கரசு*

*ஆனைக்கோட்டை*

*யாழ்ப்பாணம்.*

*பிறப்பு: 1969–11–16*

*வீரச்சாவு: 1998–04–21*

## லெப். மலையரசி

எப்பொழுதும் எங்கள் மனங்களைத் தொட்டுச்சென்று, எப்படி எப்படி எல்லாம் அந்தச் சண்டைக்களங்களில் நின்றவள். எந்த நேரமும் அமைதியாக ஆழ்ந்து சிந்தித்து ஒரு சில போராளிகளுக்கே தன்னைப் பற்றி வெளிப்படுத்துவாள். எங்கள் மனங்க ளில் நிறைந்துவிட்டாள்.

லெப். மலையரசி ஒரு சின்ன உருவம். உருண்டு புரண்டு அவள் இலகுவாக எடுக்கின்ற பயிற்சிகளில் எல்லாம் நல்ல பொறுப்புணர்ச்சி மிக்க திறமைசாலி. அவள் கதைக்கின்ற ஒவ்வொரு சொல்லும் எங்கள் காதுகளுக்குள் புகுந்து விடுவதில்லை. அவள் கதைப்பதுகூட வெளியில் கேட்காது. தானும் தன் கடமையுமாக. இரவு பகலாக போராளிகளுக்கு பயிற்சி அளித்தபொழுதுகள் எல்லாம் அவளிடம் அசைக்க முடியாத ஆற்றலை நாம் கண்டோம்.

அவளது மரியாதையான பழக்க வழக்கங்களே அவளைப் பயிற்சி ஆசிரியராகவும் அணித் தலைவியாகவும் உயர்த்தியது. ஓய்வொழிச்சல் இல்லாமல் தன் அணியுடன் வேலைகள் செய்வாள். அவளால் பயிற்சி கொடுக்கப்பட்ட போராளிகளுக்கே அணித் தலைவியாக ஓமந்தை ஊடறுப்புச் சண்டைக்குப் போனாள்.

ஒலுமடு களத்தில் அவள் கடமையில் ஈடுபட்டிருந்தபோது எதிர்பாராத விதமாக எதிரியின் ரவைபட்டு வீரச்சாவைத் தழுவிக்கொண்டாள்.

*இளங்கோமதி மாசிலாமணி.*

*விசுவமடு. கிளிநொச்சி.*

*பிறப்பு: 1981–01–15*

*வீரச்சாவு: 1998–04–06*

## மேஜர் திரேசா

அவள் நடந்த சண்டைக்களங்களிலெல்லாம் தன்னுடனேயே ஒன்றிப்போன பி.கே. எல்.எம்.யி ஆயுதத்துடன் திரியும் ஒரு வீராங்கனை.

எந்த நேரமும் தனது பி.கே. எல்.எம்.யியை துப்பரவு செய்தபடி, எந்தக் களத்திலும் எதிரியைக் குறிபார்த்து அதை இயக்கிய பொழுதுகளிலும், வயிறு குலுங்க வாய்விட்டு சிரிப்பதிலும் எல்லோர் மனங்களிலும் நிறைந்துவிட்ட ஒரு போராளி.

பார்ப்பவர்களுக்கு அமைதியான போராளி. பழகினால்தான் அவள் பம்பல்காரி என்று புரியும். தானும் தன் பாடுமாக இருப்பவள். தலைமைத்துவத்தைப் பற்றியும் அரசியல் வேலைகள் எல்லாவற்றையும் பற்றியும் சிந்திக்கும் தன்மை, "அண்ணாவுக்காகத்தான் இருக்கிறன். மனம் குலையமாட்டேன்" என்ற உறுதி— இவைகள் அவளிடம் எப்போதும் இருந்தன.

கடைசி வரைக்கும் நான் பி.கே.எல். எம்.யியுடன் இருந்துதான் சாக வேண்டும் என்ற கனவு அவளிடம் விரிந்துகொண்டிருந்தது. அவள் இயக்கத்துக்கு வந்தகாலம் தொட்டு கனரக ஆயுதங்களுடன்தான் இருந்தாள். அதனால்தான் அவள் அப்படி ஒன்றிப்போனாளோ தெரியாது. அவளின் நீண்ட சண்டைக் கள்ங்களிலெல்லாம் அவளின் பி.கே.எல். எம்.யியும் பொறி கக்கியது. பூபதியும் இவளும் நல்ல நண்பர்கள். நடந்த ஒரு சண்டையில் பூபதி வீரச்சாவடைய அவளின் ஆயுதத்தை தான் வேண்டி வைத்திருந்து, அதோடு ஒவ்வொரு சண்டைக்களமாக அவள் நடந்தாள்.

எப்பொழுதும் அவள் நல்ல சுத்தம். உடுப்பு மடிப்புகள் குலையாது. எந்தச் சண்டை என்றாலும் எறிகணை வந்து விழுந்தாலும் உடைகளை சூட மூத்துவதை நிறுத்துவது கிடையாது. கடைசியாக அவள் நின்ற ஜெயசிக்குறுக் களத்தில் அவள் ஓடி ஓடி பி.கே.எல்.எம்.யி யை போட்டு அடித்த இடங்களிலெல்லாம் சோர்வின்றி உழைத்தாள்.

அன்று புளியங்குளம் மீது ஜெயசிக்குறுப் படைகள் முன்னேற்ற முயற்சியை மேற்கொண்டபோது திரேசா முன்னணி நிலையில் எதிரியின் நகர்வை தடுத்தபடி நின்றாள். கடைசிமட்டும் அடித்தவள், அது பழுதாகி பின்னுக்கு வந்து

# வித்தான மறவர்கள்

ஒழுங்கு செய்து மீண்டும் முன்னுக்கு போய் அடித்துக்கொண்டிருந்தாள். அப்பொழுது எறிகணை ஒன்று அவள் நின்ற அந்தப் பதுங்குகுழிக்குள்ளேயே வீழ்ந்து வெடித்து புகை எழுந்துபோக, எங்கள் திரேசாவின் உயிரற்ற உடலைத்தான் நாம் கண்டோம். கனரக ஆயுதப்பிரிவில் இருந்துதான் சாகவேண்டும் என்ற கனவை நனவாக்கிச் சென்றுவிட்டாள்.

*வாசுகி கந்தையா*

*நெடுந்தீவு*

*யாழ்ப்பாணம்.*

*பிறப்பு: 1975–12–10*

*வீரச்சாவு: 1997–06–23*

## மேஜர் கீதா

பளிச்சிடும் நிறமும் நல்ல உயரமுமாக் பார்த்தாலே ஒரு தலைவி போல இருப்பாள் என்று மேஜர் கீதாவைப்பற்றி அவளின் தளபதி குறிப்பிட்டார். மட்டக்களப்பில் இருந்தபோது, அவள் சிறப்புப் பயிற்சி பெற்றிருந்தாள். சிறப்புப் பயிற்சி பெற்ற அனைத்துப் பெண் போராளிகளினதும் பொறுப்பாளராக இருந்தாள். சிறப்புப் பயிற்சியின்போது இராணுவ உபகரணங்கள், பாரப்பை என்பவற்றுடன் கயிற்றில் ஏறி இறங்குதல், 10 கி.மீ ஓட்டம் இரண்டிலும் பெண், ஆண் போராளிகள் அனைவருக்கும் முதலாவதாக வந்தாள்.

வீட்டில் அவள்தான் மூத்தவள். சரியான செல்லமாக வளர்ந்தவள். இயக்கத்துக்கு வந்த பின்னரும் அவளின் செல்லக் கதை மாறவில்லை. கடுமையாக, கடுமையான பயிற்சிகளை எடுப்பாள். ஆனால், சிறு மனக் கஸ்ரத்தைக் கூடத் தாங்கமாட்டாதவள். சட்டென அழுதுவிடுவாள். வீட்டின் இயல்பு கடைசிவரையிலும் அவளிடமிருந்து மாறவேயில்லை.

இவளுக்கு முதல் தாக்குதல் களம் புலிப்பாய்ந்த கல்லில் அமைந்த இராணுவத்தளம்தான். தாக்குதலில் அவள் திறம்படச் செயற்பட்டாள். தொடர்ச்சியாக அவளின் சண்டைக் களங்கள் குடாப்பொத்தனை, புளுகுணாவி, வவுணதீவு என நீண்டன. எதிலும் வேகத்துடன் ஓயாத புயலாக அவள் நடந்தாள். தன்னைப்போல தன் பிள்ளைகளையும் வளர்க்க வேண்டும் என்ற ஆர்வமும் அவளிடம் நிறையவே இருந்தது.

மட்டக்களப்பில் இருந்து ஜெயசிக்குறுப் படைகளை எதிர்க்க கீதாவின் படையணி புறப்பட்டபொழுதும், சாப்பாடு, தண்ணீர் இல்லாத நீண்ட நடைப் பயணங்களிலும் அண்ணையை சந்திக்க வேண்டும், பார்க்க வேண்டும் என்ற ஆசையுடன் நல்லாச் சண்டை செய்ய வேணும் என்ற உறுதியுடன் இடையில் நடாத்தப்பட்ட எதிரியின் பதுங்கித் தாக்குதல்களிலிருந்து மீண்டு வந்து ஜெயசிக்குறு சண்டைக் களங்களில் அவள் பங்கெடுத்தது ஒரு வரலாறு.

மட்டக்களப்பிலிருந்து வந்தவுடனேயே வரலாற்றுப் போர்க்களமான ஜெயசிக்குறு அவளைத் தன்னுள் வாங்கிக் கொண்டது. நெடுங்கேணிப் பக்கமாக தனது அணியுடன் நின்றவள் ஓமந்தை மீதான ஊடறுப்புத் தாக்குதலுக்காகப் புறப்பட்டாள்.

"சண்டை முடிந்தவுடன் நான் போய் உசன் ஏத்தம் காம்ப் அடிக்க வேணும்" என்று சொல்லிக்கொண்டு புறப்பட்டாள். எல்லோருக்கும் உருமறைப்பு செய்த பின்னரும் 'மாட்டேன்' என்று அடம் பிடித்து கைக்கு அகப்படாமல் ஓடித் திரிந்தவளை அவளின் தளபதி ஒருவாறு பிடித்திழுத்துச் சாயம் பூசிவிட்டார். முகத்தில் மூன்று இடத்தில் கோடுகள் போட்டதற்கே சிணுங்கிக்கொண்டிருந்தாள். சிணுங்கல், செல்லம் எல்லாம் சண்டை தொடங்கும் வரையில்தான்.

ஜெயசிக்குறுவில் முதற்களம் அவளுக்கு அதுதான். தனது பாதையைக் கைப்பற்றி வரிசையாக அமைந்திருந்த காவலரண்களைக் கைப்பற்றியவாறு போனவள், இருளிலே நின்றிருந்த 'பவள்' கவச வாகனத்தை அருகிலேபோன பின்னரேயே கண்டாள். உடனேயே தனது கைக்குண்டை அதற்குள்ளே வீசியபோது எதிரியின் ரவை அவளது நெற்றியைத் தாக்கியது. பலத்த இரத்தப்போக்குடன் களத்தை விட்டு அகற்றப்பட்டவள் வைத்தியசாலையில வீரச்சாவைத் தழுவிக் கொண்டாள். "இருந்திருந்தால் நல்ல ஒரு தலைவியாக எவ்வளவோ எல்லாம் செய்திருப்பாள்." என்றார் அவளின் தளபதி.

*ரேணுகா சோமதாஸ்*

*வாழைச்சேனை*

*மட்டக்களப்பு*

*பிறப்பு: 1979–09–17*

*வீரச்சாவு: 1997–08–02*

www.tamilarangam.net



# கிளிநொச்சி வெற்றி
# தலை நிமிர்ந்தது தமிழீழம்
# தடம் புரண்டது சிங்களம்

கிளிநொச்சியிலிருந்து பார்க்கும் விடுதலைப் புலிகளுக்கு கைதடிப்பாலத்துக்கு அப்பாலுள்ள 'யாழ்ப்பாணம் வரவேற்கிறது' என்ற கல்தூண் மட்டுமே கண்ணில் தெரிகிறது. இவ்வாறு விடுதலைப்புலிகளின் கிளிநொச்சி வெற்றிக்களம் தரும் மதிப்பீட்டுடன் ஆய்வுக்குள் அடியெடுப் போம்...

27–10–1998 அன்று கிளிநொச்சி முதல் பரந்தன் வரையிலான இராணுவத் தளங்கள் மீது விடுதலைப் புலிகள் தொடுத்த ஓயாதஅலைகள் – 2 இராணுவ நடவடிக்கையையின் வெற்றியையும் சிறீலங்கா அரசின் தோல்வியையும் இன்று பல கோணத்தில் ஆய்வுகள் தொடர்கின்றன. ஆயிரக்கணக்கில் இராணுவத்தினரையும் கோடிக்கணக்குப் பெறுமதியான இராணுவ தளபாடங்களையும் சிங்கள இராணுவத்தின் மனஉறுதியையும் இழந்து நிற்கும் சிங்கள அரசு, தன் தோல்விகளை மறைப்பதற்கு செய்த திருகு தாளங்களும் குத்துக்கரணங்களும் கேலிக்கூத்தானவை.

செய்திச் சுதந்திரத்தின் கழுத்தில் சுருக்குக் கயிற்றைப் போட்டுவிட்டு தமிழ்த்தேசம் மீது சிங்கள இராணுவத்தை ஏவிவிட மாமனும் மருமகளும் காத்திருந்த வேளையில்தான்.. .. கிளிநொச்சி மீது பேரிடி விழுந்தது. பெரும் சூறாவளி தாக்கியழித்ததுபோல் சிங்களத்தின் திட்டங்கள் தரை மட்டங்களாகின. இதனால் நிலைகுலைந்த கேணல் ரத்வத்தை தமது இழப்புக்களை இருட்டடித்து பெருமைகொண்டார். பட்டினியிலிருக்கும் செய்தித்தணிக்கையும் கண்முன்னால் பசிக்குத் தீனியிருந்தும் ஒழுங்காக உட்கொள்ள முடியாதிருந்தது. ஆனால் உண்மையான நிலைமைகள் புலிகளின் செய்தி ஊடகத்தினால் உலகுக்கு



உணர்த்தப்பட்டது. இதன் பின்னர்.. .. சிறீலங்கா பாராளுமன்றத்தில் கிளிநொச்சி சமர் விரிகிறது... பத்திரிகைகளில் ஆய்வுக்களங்கள் தொடர்கின்றன...

இந்த வகையில்...

முன்னாள் இந்திய இராணுவத் தளபதி லெப். ஜெனரல் கல்கட் கிளிநொச்சி மீதான புலிகளின் தாக்குதல் பற்றி விவரிக்கின்றார்... கிளிநொச்சி பிரபாகரனுக்குப் பிரதானமானது. கிளிநொச்சி நெடுஞ்சாலையின் ஒரு வீத நிலப்பகுதி கூட புலிகளின் கட்டுப்பாட்டிலிருந்தால் இராணுவ ரீதியாக முழு நெடுஞ்சாலையையும் இழப்பதற்குச் சமன் எனத்தெரிவிக்கிறார். மாங்குளத்தைப் பொறுத்தவரை அது வெறுமனே வன்னி நெடுஞ்சாலையில் அமைந்துள்ள ஒரு நகரம் மட்டுமே. ஆனால் கிளிநொச்சி யாழ் குடாநாட்டின் வாயிலிலுள்ளது. யாழ்ப்பாணம் புலிகளின் நடவடிக்கைகளுக்கு உள்ளாகும் சாத்தியங்கள் உண்டென்றும் கூறுகிறார். அதாவது யாழ் குடாநாட்டுக்கு ஆபத்து வந்துவிட்டதென அலாரம் அடிப்பதுபோல் அவர் சொல்லி வைக்கின்றார். அதுபோல் ஆனையிறவுக்கும் ஆயுள் குறைவென்பதை ஆருடம் கூறியுள்ளார். இலங்கை இனப்பிரச்சனைக்கு இராணுவத்தீர்வு சாத்தியமற்றது அரசியல் தீர்வே பொருத்தமானது இலங்கை அரசும் விடுதலைப்புலிகளும் பேச்சுவார்த்தை நடத்தவேண்டிய காலம் வந்துவிட்டது.. இவ்வாறாக இந்திய இராணுவத்தளபதி கல்கத்தின் ஆய்வு விரிகிறது.

மறுபுறத்தில் சிறீலங்காவின் எதிர்க் கட்சித்தலைவர் ரணில் விக்கிரமசிங்க கிளிநொச்சி இழப்புப் பற்றி பாராளுமன்றத்தில் பட்டியலிடுகின்றார்... கிளிநொச்சி பரந்தன் ஆகிய பகுதிகளில் விடுதலைப்புலிகள் மேற்கொண்ட மிகப்பெரிய தாக்குதலில் 1500 ற்கும் மேற்பட்ட படையினர் கொல்லப் பட்டதாகவும் 2000 ற்கும் மேற்பட்டவர்கள் காயம் அடைந்துள்ளதாகவும் கூறியுள்ளார். இத்தாக்குதலில் விடுதலைப்புலிகள் பலகோடி ரூபாய்கள் பெறுமதியான ஆயுதங்களை எடுத்துச் சென்றதாகவும் பட்டியலிடுகின்றார். அதேவேளை ஐக்கிய தேசியக்கட்சியின் உறுப்பினர் டாக்டர் ஜயலத் ஜெயவர்த்தனா தெரிவிக்கும்போது.. கிளிநொச்சியில் புலிகள் மேற்கொண்ட தாக்குதலில் 4500 மில்லியன் ரூபா ஆயுத இழப்பு ஏற்பட்டுள்ளதாகவும், பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ரத்வத்தை அப்பாவி சிங்கள இளைஞர்களை போர்க்களம் கொண்டு சென்று பலியாக்குகின்றார் என்றும் தெரிவித்துள்ளார்.

இது இவ்வாறிருக்க போரினால் காயமுற்ற படையினருக்கான அமைப்பு கிளிநொச்சியில் அரசு பட்ட தோல்வியை அடுத்து, புதல்வர்களைக் காப்பாற்றுங்கள் என்ற கோசத்தை எழுப்பியுள்ளது. அவ்வமைப்பு வெளியிட்ட அறிக்கையில் மேலும் தெரிவித்ததாவது... போரில் அகப்பட்டு கொல்லப்படுபவர்கள் ஏழைக்குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் என்றும் அவர்களின் சோகங்களைப் பகிர்ந்துகொள்ள இங்கு யாரும் இல்லை எனவே போரை நிறுத்துவோம்... எமது புதல்வர்கள் காப்பாற்றப்படவேண்டும் என்ற அறைகூவல் சந்திரிகாவினதும் ரத்வத்தையினதும் முகத்தில் அறைந்தது போலாகியிருக்கும் என்பதில் எதுவித ஐயமுமில்லை. அதுமட்டுமல்ல தமிழீழத் தேசியத்தலைவர் பிரபாகரன் அவர்களின் போர்த்திறன் தமிழர்களுக்கு சோழர்கள் காலத்தை நினைவுபடுத்தியது. ஆனால்... இன்று சிங்களவர்களுக்கும் அவரின் போர்த்திறன் சோழர்காலத்தை நினைவு படுத்தியுள்ளது. கிளிநொச்சியில் சிங்களம் சிதறடிக்கப்பட்ட பின்னர் சிங்கள அரசியல்வாதியான ரொனி டி மெல் பாராளுமன்றத்தில் பேசும்போது , சோழர்கள் அநுராதபுர இராச்சியத்தை கைப்பற்றியபோது சிங்கள இனத்திற்கு கிடைத்த பாரிய தோல்வியின் பின்னர் இப்போது கிளிநொச்சியில் பாரிய தோல்வி எமது நாட்டுக்கு ஏற்பட்டு விட்டதென இனவாதம் கக்கியுள்ளார்.

இவ்வாறு கிளிநொச்சியில் எழுந்த பேரிடியால் தடம் புரண்ட சிங்களம், வலுவிழந்துபோன தரைப்பாதை அமைக்கும் ஜெயசுக்குறுயின் எதிர்காலம் பற்றி எண்ணிக்கொண்டிருக்கும் அதேவேளை.. .. வெற்றிக்களிப்பால் தலை நிமிர்ந்த தமிழீழம் எங்கும் மக்கள் புதிய உற்சாகத்துடன் காணப்படுகின்றனர். தேசியத் தலைவன் பின்னால் மக்கள் மலையாக நிற்பதை மீண்டும் ஒருமுறை உலகம் அறிந்து கொண்டது. அது மட்டுமல்ல தெற்கிலும் செய்தியறிந்த தமிழர்கள் மகிழ்ச்சியை வெளிக்காட்ட முடியாது மனதுக்குள் மத்தாப்பு கொழுத்தினர். அநுராதபுர சிறைச்சாலையிலும் செய்தியறிந்த தமிழ்க் கைதிகள் வெற்றிச் செய்தியறிந்து சிங்களச் சிறைச்சாலை என்ற உணர்வையும் மறந்து குதூகலித்தனர். அதைவிட புலம் பெயர் நாடுகளில் தமிழன் வீடுகள் யாவும் வெற்றியும் நம்பிக்கையும் வாசலில் வரவேற்கிறது.

இவ்வாறாக தலைநிமிர்ந்த தமிழினம் நாளைய வெற்றிக்காகவும் விடியலுக்காகவும் நம்பிக்கையுடன் நடைபோடக் காத்து நிற்கிறது..

**– மண்மகள். –**



**தமிழீழ பெண்கள் எழுச்சி நாளையிட்டு 10–10.98 அன்று தமிழீழ விடுதலைப் புலிகள் மகளிர் படையணி தமிழீழத்தில் வெளியிட்ட அறிக்கை.**

## 'போராட்டம் இறுதி வடிவம் பெற்றுள்ளவேளை பெண்கள் தமது இடத்தைக் கைப்பற்ற வேண்டும்'

இன்று தமிழீழ பெண்கள் எழுச்சி நாள் எமது சமூகத்தின் பிற்போக்கு தளைகளில் இருந்து விடுபட்டு வெளியேவந்து தேசிய விடுதலையினை வென்றெடுக்கும் மறப்போரில் இரண்டாம் லெப். மாலதி முதற் பெண் மாவீரராகிய நாள். தமிழீழப் பெண்களின் எழுச்சிக்கு முதல் வித்தூன்றப்பட்ட புனித நாள் தமிழீழ தேசிய விடுதலைப் போராட்டம் பெரும் முனைப்படைந்து வருகின்றது. இக் கால கட்டத்திலேயே தமிழீழ சமூக மலர்ச்சிக்கான அடிப்படைக் கட்டு மானங்களையும் உருவாக்கி வருகிறார் எமது மதிப்புக்குரிய தேசியத் தலைவர் அவர்கள்.

உலகம் தாய்மையின் காலடியில் உருளுவதால் நான் பெண்மயைப் போற்றுகின்றேன். எனக்கூறும் எமது தலைவரின் தூரநோக்குப் பார்வை தமிழீழ சமூகத்தில் பெண்களின் எதிர்காலத்தை நிச்சயம் ஒளிமயமாக்கும். ஒரு தனி மனிதன் குடும்பமாகின்றான் குடும்பம் சமூகத்துடன் இணைகின்றது ஒரு தனிமனிதனின் உருவாக்கத்தில் செல்வாக்குச் செலுத்துபவர் பெரும்பாலும் தாய்தான். அந்தத் தாயின் ஆளுமைப் பண்புகள் தான் அவளால் உருவாக்கப்படும் மனிதனின் ஆளுமைப் பண்புகளாக பரிணமிக்கப்படுகின்றது. அது சமூகத்தின் மேன்மையான உருவாக்கத்தைத் தீர்மானிக்கின்றது ஆகவே சமூகத்தின் மேம் பாட்டிற்கு பெண் பெரும் பங்கேற்கிறாள் என்பதே மறுக்க முடியாத உண்மை. அந்தப் பெண்களை சமூகம் எந்த அளவிற்கு பெண் உணர்வுடன் அணைக்கின்றது என்பது தான் இங்கு பிரச்சனைக்குரிய விடயமாகினறது. அவளிடம் அபரிதமாக புதைந்து கிடக்கும் ஆக்க சக்தியையும் வெளிக்கொணர்ந்து ஒட்டு மொதத்தமாக மானிட விடியலைப் பிறப்புவிக்க வேண்டுமானால் முதலில் ஒவ்வொருவரும் தத்தமது மன உலக இருட்டுக்குள் இருந்து வெளியே வர வேண்டும் பிற்போக்குத்தரமான கருத்துலக மாயைத் திரைகளை விலக்கி உண்மையை உணர்ந்து கொள்ளவேண்டும் பெண்மைக்குள் பிரவாகம் எடுக்கும் மனித ஆளுமையை இனங்கண்டு கொள்ளவேண்டும், மதிப்பளிக்கவேண்டும் இதன்மூலம் தான் பெண்ணியம் என்ற பெரும் கருத்தியல் போரில் வெற்றி கொள்ளமுடியும்.

தமிழீழ தேசிய எழுச்சியின் வீச்சு எம் சமூகத்தின் பல முற் போக்குத் தனமான கட்டுக்களையும் விதிகளையும் ஏற்படுத்தியுள்ளது. பெண்கள் தொடர்பான விடயத்தில் இன்று ஏற்பட்டுவரும் மாற்றங்களை வெளியிலிருந்து வெற்றுக் கூச்சலிடுபவர்கள் சிலருக்கு ஏற்றுக்கொள்ள முடியாத விடயங்களாக இருக்கின்றது என்பதை அவாகளின் விசமத்தனமான விசனங்கள் வெளிப்படுத்துகின்றன. ஆனால் சத்திய நெருப்பாக எம்முள் எரியும் விடுதலை வேட்கை உலகத்தின் பார்வையை நிச்சயம் எம்மை நோக்கித் திருப்பும் இலகுப் பிசகாத எம் விடுதலைப் பயணம் விடியலை நோக்கி விரிவாக்கப்படும்.

பெண்களை இரண்டாம் தர குடிமக்களாக்கிவிட்ட சமூகக் களைகளை முற்றாக அறுத்தெறிய வேண்டுமானால் தேசிய எழுச்சியுடன் பெண்கள் பெருமளவு அணிதிரள வேண்டியது தவிர்க்கமுடியாத வரலாற்றுத் தேவையாகும் விழிப்புத் தான் விடுதலைக்கு முதல் படி பெண்கள் தம்மைத் தாமே புரிந்து கொள்ள வேண்டும் தம்மன உலகில் ஆழப் பதிந்து விட்ட பழைய விம்பங்களை அழித்துவிட வேண்டும் இவைதான், இப்படித்தான் என்ற பழைய விதியை மாற்றி தம் சிறகுகளை அகல விரித்து வாழ்வியலின் சிகரத்தை நோக்கிப் பறக்கத் தயாராக வேண்டும்.

எமது விடுதலை இயக்கத்தில் அணிசேர்வதன் மூலம் தான் தமிழீழ பெண்களுக்கு இது சாத்திய மாக முடியும். இன்றைய நிலையில் தமிழீழ தேசிய விடுதலைப் போராட்டம் இறுதி வடிவம் பெற்றுள்ளது. தமிழினமே பெரும் பலமாக எழுந்து நின்று போருக்கு முகம் கொடுக்க வேண்டிய கட்டம் நெருங்கி விட்டது, இதில் பெண்களும் தமது இடத்தைக் கைப்பற்றிக் கொள்ள வேண்டும், வீறு கொண்டு வெளியே வந்து பெண்விடுதலையுடன் கூடிய மண் விடுதலைக்காக தம்மை அர்ப்பணித்து உழைக்கத் தயராக வேண்டும். விடுதலைப் புலிகள் மகளிர் படையணிப்பெண் போராளிகள் முன்னணி சமர்க்களங்களிலும் நிர்வாகத் துறைகளிலும் ஆற்றி வரும் சாதனைக்கு மேலும் மெருகூட்ட வேண்டும். பெணகளின் மகத்தான ஆக்க சக்தி தேசிய விடுதலை எழுச்சியுடன் இணையும் போது தான் தமிழீழ விடுதலை பூரணத்துவம் அடையும். எனவே தமிழீழப் பெண்ணின மே உயர்ந்து நிற்கும் எம் கரங்களுடன் உங்கள் கரங்களை இணைத்துக் கொள்ள, எழுந்திடுவீர் என இந் நாளில் அறைகூவல் விடுகின்றோம்.

' புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம் '

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




# விடுதலை உணர்வு குன்றாத யாழ் குடாவில்
# இராணுவத்தின் கையாலாகாநிலை

யாழ் குடாவை சிறிலங்கா இராணுவம் 1995ஆம் ஆண்டின் இறுதிப் பகுதியில் பெரும் இராணுவ நடவடிக்கை ஒன்றின் மூலம் கைப்பற்றிக் கொண்ட போது அவர்கள் வெறிச்சோடி பாழடைந்து மக்களற்ற பகுதிகளைத்தான் கண்டார்கள். அங்கிருந்த மக்கள் தொகையில் 90 வீதமானவர்கள் தாம் வசித்த பகுதி களைவிட்டு வெளியேறியிருந்தார்கள். அநேகமாக கிராமங்களிலும் நகர்ப் பகுதிகளிலும் குறிப்பிட்ட சில குடும்பங்களே எஞ்சியிருந்தன. ஆனால், யாழ் குடாவில் குவிக்கப்பட்டிருந்ததோ 50,000ற்கு மேற்பட்ட இராணுவம்.

குறைந்தளவு மக்கள் தொகையைக் கொண்டிருந்த யாழ் குடாவில் எஞ்சியிருந்த மக்கள் குடியிருப்புக்களை சிறைக்கூடங்களாக்கி மக்களை அவர்களது வீடுகளுக்குள்ளேயே இராணுவம் சிறைவைத்தது. யாழ் குடாவிலிருந்து வெளியேறியவர்கள் தென்மராட்சி மற்றும் கிளிநொச்சிப் பகுதியிலும் குடியேறினர். யாழ் குடாவைக் கைப்பற்றிய இராணுவம் தனது அடுத்த நடவடிக்கையாக தென்மராட்சி நோக்கி முன்னேறிய போது மக்கள் அங்கிருந்து கிளாலியூடாக வெளியேறத் தொடங்கினர். சிறிலங்காவின் முப்படைகளாலும் இம் மக்கள் சுற்றி வளைக்கப்பட்டு யாழ் குடாவிற்கே திருப்பி அனுப்பப்பட்டனர். திரும்பிய மக்கள் ஏற்கனவே யாழ் குடாவில் இருந்த மக்கள் தொகையுடன் இவர்களை இணையவிடாது இராணுவத்தால் தடுக்கப்பட்டனர். பின்னர் இம்மக்கள் வகைப்படுத்தப்பட்டு இராணுவத்தால் பலத்த சோதனைகளின் பின்னர் தமது இடங்களுக்கு அனுப்பப்பட்டனர். ஆனாலும், இராணுவத்திற்கு இப்பிராந்தியத்தை கண்காணித்துக் கொள்வது இலகுவாக இருந்தது.

யாழ் குடாவில் இயல்பு நிலையைத் தோற்றுவிக்கிறோம்— சிவில் நிர்வாகத்தை அமைக்கின்றோம் — அது நிறைவேறிய பின் அங்கிருந்து இராணுவம் வெளியேறிவிடும் என்ற போலித் தோற்றத்தினை வெளியுலகிற்கு சிறிலங்கா காட்ட முனைந்தது. உண்மையிலேயே யாழ் குடாவில் உணவுத் தட்டுப்பாடு, மருந்து வகைகள் பற்றாக்குறை போன்ற அடிப்படைத் தேவைகள் இல்லாதிருந்தன. அத்துடன் எங்கு பார்த்தாலும் இராணுவ சோதனைச் சாவடிகளும் தடை முகாம்களும்தான் காணப்பட்டன. உண்மையில் சொல்லப்போனால் யாழ் குடா ஓர் இராணுவப் பிராந்தியமாக மாற்றப்பட்டிருந்தது. வெளி உலகிற்கு சிவில் நிர்வாகம் அமைக்கிறோம் எனக் கூறிக்கொண்ட அரசு அதன் பிரதானிகளாக இராணுவத்தினரையே ஏற்படுத்தி இருந்தது. எந்த ஒரு செயற்பாடும் அவர்களுடைய அனுமதியுடனேயே நடைபெற வேண் டும் என்ற நிலையே அங்கு தொடர்ந்தது. ஆனால், போக்குவரத்து பஸ் வண்டிகளை அனுப்புதலும் தெருத் தெருவாக தொலைபேசிக் கூடுகளை அமைத்தலுமே சிறிலங்கா அரசைப் பொறுத்தவரை சிவில் நிர்வாகமாக இருந்தது. அவர்களைப் பொறுத்தவரை யாழ் குடா மக்களுக்கு தொலைபேசித் தொடர்புகளை மட்டும் ஏற்படுத்திக் கொடுத்துவிட்டால் பிரச்சனைகள் தீர்ந்துவிடும் என்ற நிலைப்பாடு இருந்தது.

கிளிநொச்சிப் பகுதியில் குடியேறி இருந்த பல இலட்சம் மக்கள் மீண்டும சிறிலங்கா இராணுவத்தால் துரத்தப்பட்டார்கள். இடம் பெயர்ந்த அவர்கள் மீண்டும் இடம்பெயர்ந்து வன்னிப் பெருநிலப்பரப்பிற்குள் வாழத்தொடங்கினார்கள். உணவுத் தட்டுப்பாடுதான் — உதவி நிறுவனங்களால் இப்பாரிய இடம்பெயரலை கவனிக்க முடியவில்லை. ஆனால், மக்கள் இங்கு சுதந்திரமாக வாழ்கிறார்கள். வெளி உலகை ஏமாற்றிக் கொண்டிருந்த சிறிலங்கா அரசு யாழ் குடாவில் நிகழ்த்திக் கொண்டிருந்த போலி நாடகமானது



வன்னியில் வாழ்ந்துகொண்டிருந்த மக்களிடையேயும் சலசலப்பை ஏற்படுத்தியது உண்மைதான். காடுகளுக்குள் உணவுத் தட்டுப்பாட்டுடன் மருந்துகளும் இல்லாத நிலையில் வாழ்ந்துகொண்டிருந்த மக்கள் யாழ் குடாவில் சிறிலங்கா அரசு தேனையும் பாலையும் அள்ளி ஊட்டுவதாகக் கூறியபோது அதனை சிலர் ஏற்றுக்கொண்டார்கள். அகப்பட்ட வழிகளால் வெளியேறி யாழ் குடாவைச் சென்றடைந்தபோது அந்த மக்களை வரவேற்றது அங்கும் அகதி முகாம்தான்.

சில இலட்சம் மக்கள் தொகை தற்போது யாழ் குடா கொண்டிருந்தது. உலகை ஏமாற்றும் அடுத்த நடவடிக்கையாக அங்கு மாநகராட்சித் தேர்தலை நடத்த சிறிலங்கா முனைந்தது. இத்தேர்தலை யாழ் குடாவின் பெரும்பான்மை மக்கள் ஏற்றுக்கொள்ளாத நிலையில் இது நடத்தி முடிக்கப்பட்டது. இங்கு சிறிலங்கா அரசு எதிர்பார்த்தது போன்று தனது பிரதிநிதிகளான கொழும்பு வாழ்— தமிழர்களை மறந்த— தமிழ்கட்சிகள் நிர்வாகத்தில் அமர்ந்தன. ஆனாலும், அது எதிர்பார்த்தது போன்று எல்லா மாநகர சபைகளும் இயங்க முடியவில்லை. பேருக்காவது உலகை நம்பவைக்க அது மேற்கொண்ட முயற்சிகளால் யாழ் நகர சபை இயங்கத் தொடங்கியது.

சிறிலங்கா தனது அடுத்த கட்ட பிரச்சார நடவடிக்கையை ஆரம்பித்தது. விடுதலைப் புலிகளை தமிழ் மக்கள் நிராகரித்து விட்டார்கள். தமிழ் மக்கள் வேறு. விடுதலைப் புலிகள் வேறு. அவர்கள் செய்யும் யுத்தம் அநாவசியமானது. நாம் தமிழ் மக்களுக்கு தேவையான அமைதியை ஏற்படுத்திக் கொடுத்திருக்கின்றோம் எனக் கூறிக் கொண்டது. அவர்களது விருந்தினர்களாக வெளிநாட்டுத் தூதுவர்களும் இராச தந்திரிகளும் விமான மூலம் யாழ் சென்றனர். அங்கு தேவையான உல்லாச வசதிகள் அவர்களுக்கு ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டன. தம்மால் ஏற்பாடு செய்யப்பட்ட மக்களை மாத்திரமே சந்திக்க வைத்து, தம்மால் யாழ் குடாவில். அமர்த்தப்பட்ட தமிழ்ப் பிரதிநிதிகளுடன் பேச்சுக்களை மேற்கொள்ள வைத்து வெளி உலகிற்கு அதைப் பிரச்சாரத்திற்கு உபயோகித்தனர்.

சென்று வந்தவர்களும் அரசு எதிர்பார்த்ததை விட மிகத் தாராளமாகவே தமது விசுவாசத்தைக் காட்டிக் கொண்டனர். அப்படி இருந்தும் பல தடவைகள் அங்கு சென்ற பத்திரிகையாளர்கள் ஏதோ வகையில் மக்களைச் சந்தித்த போது 1995ஆம் ஆண்டின் பின் நாம் சிறை வைக்கப்பட்டிருக்கின்றோம். எங்கு பார்த்தாலும் இராணுவத்தினர்தான். அடிப்படை வசதிகளில் எந்தவித மாற்றங்களும் செய்யப்படவில்லை. விடுதலைப் புலிகளின் ஆட்சியில் அப்படி இல்லை. பயமில்லை. உணவுத் தட்டுப்பாடு இருக்கவில்லை. ஊரடங்குச் சட்டத்தை அவர்கள் போடவில்லை என ஒருவர் கூறியிருந்தார். மற்றெருவர் அன்று எமது கைகளும் கட்டப்படவில்லை. வயிறு சில சமயம் கட்டப்பட்டது. ஆனால், இன்றோ கைகளும் வாய்களும் கட்டப்பட்ட நிலையில் சுதந்திரமற்று நாம் வாழ்கிறோம். எமது வயிற்றுக் உணவு கிடைத்தாலும் உணர்வற்ற சடப்பொருளாகவே வாழ்கிறோம் என்றார். என்னதான் சிறிலங்கா அரசு குடாநாட்டு மக்கள் பற்றி வெளி உலகிற்குக் கூறிக்கொண்டிருந்தாலும் அம்மக்களின் சுதந்திர உணர்வும் விடுதலை அவாவும் நீறு பூத்த நெருப்பாக தொடர்ந்தும் கனன்றுகொண்டிருந்தன. அவர்களது எண்ணங்கள் எப்போதும் விடுதலைப் புலிகளைப் பற்றியே சுழன்றுகொண்டிருந்தன—சுழன்றுகொண்டிருக்கின்றன. ❇

## ஆரம்பம் ஒரு அதிசயம் அந்தம் மிக ஆனந்தம்

தலைமை முதல் நடக்க
தளபதிகள் பின்தொடர
அணி அணியாய் புலி தொடர
புதியதொரு போர்வெற்றி
புதுமைநிறை புறநகர்வு

ஆரம்பம் ஓர் அதிசயம்
அந்தம் மிக ஆனந்தம்
தொடங்கியது போர்
தொடர்ந்தது படையழிப்பு
முடிவில்
எங்களது அரச அணிகளுடன்
வீதியுலா.
இது வீதியுலா அன்று
விடுதலையின் அரங்கேற்றம்
விடிவிற்கான ஆதவனின்
அதிகாலை வரவு
இருள் கொன்ற
நந்தா விளக்கின் ஒளியூட்டல்
எங்கள்
வெற்றித்திருமகனின்
விலாசத்தின் நிதர்சனம்.

சாதனைமேல் சாதனையாய்
சரித்திரத்தில் புதுப்பதிவு
மறுபடியும் இம் மண்ணை
மறந்தும் மிதிக்கோம் என
பறந்தோடிப் பதுங்கிப்
பலியான எதிரிபடை.
கணக்கெடுப்பு சரியா?
இல்லை
கணக்கிடத்தான் முடிந்திடுமா?
அலை அலையாய்
அணி திரண்ட வரிப்புலியின்
வரலாற்றில்
மீண்டும் ஒரு அற்புதம்
அதிசயத்தின் சிகரம் இது.
அணைகடந்த இரணைமடு
கரை உடைத்தால் எவ்வாறோ?
அதுபோலத்தான் எங்கள்
புலி வீரர் வீரமதும்.
கிளிநொச்சி வயல் விளையும்
நெல்மணிகள் தொகைபோல
எதிரிகளின் உடலமதை
எண்ணிடவும் முடியாதே.
வன்னிக் கறவைகளின் ஓயாத
மடிபோல
ஓயாது போர் செய்யும்
புலிவீரர் படையணிகள்.

அள்ள அள்ளக் குறையாத
ஆயுதங்கள் ஒரு புறமும்
கொள்ளக் கொள்ளக் குறையாத
கொள்கலன்கள் மறுபுறமும்
தள்ளத் தள்ளத் தள்ளாத எம்மக்கள்
பங்களிப்பும்
வெல்ல வெல்ல முடியாத புலிவீரர்
போர் நிகழ்வும்
சொல்லச் சொல்ல முடியாதே
சொன்னாலும் குறையாதே!

– கலாநிதி குலமோ –

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





# தமிழீழ விடுதலைப் புலிகள் தமிழ்த் தேசிய இனத்தின் தன்மானம் காப்பவர்கள்

## திரு. குமார் பொன்னம்பலத்துடன் பிரத்தியேக நேர்காணல்

*கே: தேசிய இனப்பிரச்சினை தொடர்பாக ஆட்சிக்கு வரமுன்னர் இருந்த சந்திரிகாவுக்கும் ஆட்சி அமைத்த பின்பு இருக்கின்ற ஜனாதிபதி சந்திரிகாவுக்கும் இடையிலுள்ள வேறுபாடுகளை விளக்க முடியுமா?*

ப: வேறுபாடுகள் கிடையாது. ஆட்சிக்கு வரமுன்னரும் அவர் ஏமாற்றிக் கொண்டுதான் இருந்தார். இப்போதும் ஏமாற்றிக் கொண்டுதான் இருக்கிறார். குறிப்பாக மே 1ம் திகதி என்று நினைக்கிறேன். வீரகேசரிப் பத்திரிகைக்கு சந்திரிகா ஒரு முழுப்பக்க செவ்வியைக் கொடுத்தார். அதன்போது வீரகேசரி ஆசிரியர் கேட்டார், இனப்பிரச்சினை தொடர்பாக தங்களிடம் ஆக்கபூர்வமான ஆலோசனைகள் இருக்கின்றதா என்று. அதற்கு அந்த அம்மணி சொன்னார், இந்த விடயம் தொடர்பாக நாம் அலசி ஆராய்ந்து கொண்டு வருகின்றோம். மிக விரைவில் நாங்கள் எங்கள் திட்டங்களை வெளிப்படுத்துவோம் என்றார். ஆனால் பொதுத் தேர்தலின்போது ஒரு வார்த்தையாவது இனப்பிரச்சினை சம்பந்தமாக விஞ்ஞாபனத்தில் வெளியிடப்படவில்லை. பின்னர் ஜனாதிபதித் தேர்தலின்போது கூட தேர்தல் விஞ்ஞாபனத்தில் ஒரு வரியாவது தமிழர்களின் பிரச்சினை சம்பந்தமாக குறிப்பிடப்படவில்லை. அப்படியிருந்தும் எங்களின் தமிழ்ச் சகோதரர்கள் தலைகீழாக நின்று இந்த அம்மாவுக்கு வாக்களித்தார்கள். இன்றைக்கு இப்படி வாக்களித்தவர்கள் கவலைப்படுகிறார்கள். ஆனால் நான், சிரித்துக் கொண்டே இருக்கின்றேன். ஏனென்றால், இவ்வாறான ஒருவரை தமிழ் மகன் எடைபோட முடியாமல் இருந்தது எனக்கு ஆச்சரியமாக இருந்தது.

*கே: சந்திரிகா அரசின் தீர்வுப் பொதி பற்றி உங்கள் கருத்தைக் கூறமுடியுமா? சிங்கள பௌத்த பேரினவாதம் இந்தத் தீர்வுப் பொதியை எவ்வாறு நோக்குகிறது?*

ப: ஒரு நேர்மையற்ற அரசாங்கம் செய்த ஒரு தீர்வுப் பொதி சம்பந்தமாக நான் எனது கவனத்தை செலுத்தவில்லை. ஏனென்றால், 1995ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 3ம் திகதி முதலில் ஒரு தீர்வுப் பொதியை வெளியிட்டார்கள். அதாவது தமிழர்களுக்கு எதிராக ஒரு போர் தொடங்கி மூன்று கிழமைக்குப் பின்பு அவர்கள் ஒரு தீர்வுப் பொதியை வெளியிட்டால் அதில் அர்த்தமில்லை என்பதுதான் என்னுடைய நிலைப்பாடு. ஏனென்றால் ஒரு போர் நடந்துகொண்டிருக்கும்போது தமிழ் மக்களுக்காக... தமிழ் மக்களுடைய பிரச்சினையைத் தீர்ப்பதற்குண்டான தீர்வுப் பொதி என்றபடியால் நான் அதைத் திரும்?பிப் பார்க்கவில்லை. அதற்கு பின்பும் 1996 ஜனவரி 16ம் திகதியிலும் 1997 அக்டோபரிலும் இரண்டு தீர்வுப் பொதியை அரசு வெளியிட்டது. அது சம்பந்தமாகவும் நான் திரும்பிப் பார்க்கவில்லை. காரணம், இன்றைக்கு அரசாங்கத்தின் கால்களை நக்கிக் கொண்டிருக்கின்ற தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்களும் அவர்களைச் சார்ந்த கட்சிகளும் அந்தத் தீர்வுப் பொதிகளைப் பற்றி மிகவும் ஏளனமாகக் கதைக்கின்றபடியால், அதை அலசி ஆராய்வதற்கு தேவையில்லை என்று நினைக்கின்றேன். அதேவேளை பெரும்பான்மையான பேரினவாத சக்திகள் இந்த தீர்வுப் பொதியை எதிர்ப்பார்கள் என்பதுதான் என்னுடைய கணிப்பு.

*கே: சிறீலங்காவில் எழுந்துள்ள தேசிய இனப்பிரச்சனைக்கு முடிவுகாண மூன்றாம் தரப்பு நடுநிலையுடன் சிறீலங்கா அரசு தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடத்த வேண்டும் என்ற கருத்து அனைத்துத் தரப்பிலும் வலுப்பெற்று வருகிறது. இதுபற்றி தங்கள் நிலைப்பாட்டைத் தெரிவிக்க முடியுமா?*

ப: இந்த விசயத்தில் என்னுடைய கருந்து கொஞ்சம் வேறுபட்டதாக இருக்கிறது. ஏனென்றால் என்னுடைய நிலைப்பாடு தமிழ்த் தேசிய இனப்பிரச்சினையைத் தீர்த்துவைக்க வேண்டுமென்றால், திம்புக் கோட்பாட்டின் அடிப்படையில்தான் ஒரு தீர்வு வரலாம். தமிழ் மக்களை அந்தக் காலத்தில் அதாவது யூலை மாதம் 1985ல் பிரதிநிதித்துவப்படுத்திய சகல கட்சிகளும் (ஒரே ஒரு கட்சிதான் திம்புவில் இருக்கவில்லை. அது நான் சார்ந்த அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ்) ஒருமித்து நான்கு கோட்பாடுகளையும் முன் வைத்தார்கள். இந்த நான்கு திம்புக் கோட்பாட்டின் அடிப்படையில்தான் எந்தவோரு தீர்வையும் அலசி ஆராய்வதற்கு தாங்கள் தயாராக *இருப்பதாகச் சொன்னார்கள். இன்று நானும்கூடச் சொல்லுவேன் அந்தத் திம்புக் கோட்பாட்டின் அடிப்படையில்தான் தீர்வு வரவேண்டும். அதாவது, தமிழ்த் தேசிய இனத்தின் அபிலாசைகளைப் பிர்திபலிக்கின்ற கோட்பாடுகள் அதுதான். ஆகையால், திம்புக் கோட்பாடுகள் சம்பந்தமாக.. .. சிங்களத் தேசிய இனத்தைப் பிரதிநிதித்துவப் படுத்தும் எட்டுச் சிங்களக் கட்சிகளும் (யு.என்.பி., எஸ்.எல்.எவ்.பி., எம்.இ.பி., ஜே.வி.பி., சி.பி., எல்.எஸ்.எஸ்.பி., டி.யு.என்.எவ்., என்.எஸ்.எஸ்.பி.) ஒன்று சேர்ந்து தங்களுடைய ஒருமித்த நிலைப்பாடு என்ன என்பதை உலகத்திற்கு அறிவிக்க வேண்டும். அதன்பின்னர் சிங்களத் தேசியத்தின் நிலைப்பாடு பற்றி தமிழ்த் தேசிய இனத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழீழ விடுதலைப் புலிகள் அலசி ஆராய வேண்டும். அலசி ஆராய்ந்து மேலும் பேச்சு வார்த்தைகளைத் தொடர்வதால் ஏதாவது பிரயோசனம் இருக்கிறதா எனத் தீர்மானித்தால் பேச்சுக்களை நடத்த முடியும்.

15-10-98 இல் இலண்டனில் சர்வதேச விவகாரங்களுக்கான றோயல் நிறுவனத்தில் தமிழ் மக்களின் அபிலாசைகளையும் அரசியல் தீர்வையும் ஆய்வு செய்யும் கருத்தரங்கு நடைபெற்றது. அக்கருத்தரங்கில் கலந்துகொள்ள வநிருந்த திரு.குமார் பொன்னம்பலம் அவர்களுடனான

ஆனாலும், மேலும் பேச்சுக்களை நடாத்துவதில் ஒரு பிரயோசனமும் இல்லை என்று அவர்கள் கருதினால் இந்தப் போர் நடக்கத்தான் வேண்டும். அது தமிழீழத்தில் வந்து முடியத்தான் வேண்டும். இது தமிழீழ விடுதலைப் புலிகளின் கைகளில்தான் இருக்கிறது.

*கே: தமிழ்த் தேசிய இனம் சிங்கள ஆட்சியாளர்களினால் அழிக்கப்பட்டுவரும் இக்கால கட்டத்தில் அரசுக்கு துணை நிற்கும் தமிழ்க்குழுக்கள் பற்றி உங்கள் கருத்தைக் கூறுங்கள்.*

ப: எதைத்தான் சொல்ல முடியும். என்னத்தைத்தான் சொல்ல முடியும். நக்குண்டார் நாவிழந்தார் என்று சொல்லுவினம். தங்களுடைய வயிறு வளர்ப்பதற்காக இனத்தை மறந்து மனச்சாட்சிக்கு எதிராக

**ஒரு நேர்மையற்ற அரசாங்கம் செய்த ஒரு தீர்வுப் பொதி சம்பந்தமாக நான் எனது கவனத்தை செலுத்தவில்லை. ஏனென்றால், 1995ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 3ம் திகதி முதலில் ஒரு தீர்வுப் பொதியை வெளியிட்டார்கள். அதாவது தமிழர்களுக்கு எதிராக ஒரு போர் தொடங்கி மூன்று கிழமைக்குப் பின்பு அவர்கள் ஒரு தீர்வுப் பொதியை வெளியிட்டால் அதில் அர்த்தமில்லை என்பதுதான் என்னுடைய நிலைப்பாடு.**

இயங்குவதில் பிரயோசனம் இல்லை. தங்களுடைய எஜமான் யார்? தாங்கள் யாருக்கு விசுவாசமாக நடக்க வேண்டும் என்பதை பாராளுமன்றத்தில் இருக்கின்ற தமிழ்ப்பிரதிநிதிகள்... மன்னிக்க வேண்டும் நா்ன் அவர்களை பிரதிநிதிகள் என்றே அழைக்க மாட்டேன். அந்த அங்கத்தவர்களுக்கு தெரியாமல் இருக்கிறது. இதுதான் சாபக்கேடு.

*கே: சிறீலங்காவில் தமிழர்கள் வயது வேறுபாடின்றி கைதுகளும் காணாமல் போவதும் நடைபெற்று வருகிறது. அவற்றைக் கண்காணிக்கவும் உறவினர் சென்று முறையிடவும் உருவாக்கப்பட்ட அமைப்புக்கள் பற்றி நீங்கள் என்ன நினைக்கின்றீர்கள்?*

ப: காணாமல் போனோர் தொடர்பாக குறிப்பாக 1997ம் ஆண்டு முதல் பகுதியில் யூலை மாதத்திற்கு முன்பாகவே 700 பேர் காணாமல் போனபடியால் அதாவது குடா நாட்டில் மாத்திரம்— ஓர் அமைப்பை ஒருவாக்கி ஜனாதிபதி சந்திரிகாவுடன் கதைக்க ஒரு சந்தர்ப்பம் கேட்டார்கள். அந்தச் சந்தர்ப்பம்

**சிங்களத் தேசியத்தின் நிலைப்பாடு பற்றி தமிழ்த் தேசிய இனத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழீழ விடுதலைப் புலிகள் அலசி ஆராய வேண்டும். அலசி ஆராய்ந்து மேலும் பேச்சு வார்த்தைகளைத் தொடர்வதால் ஏதாவது பிரயோசனம் இருக்கிறதா எனத் தீர்மானித்தால் பேச்சுக்களை நடத்த முடியும். ஆனாலும், மேலும் பேச்சுக்களை நடாத்துவதில் ஒரு பிரயோசனமும் இல்லை என்று அவர்கள் கருதினால் இந்தப் போர் நடக்கத்தான் வேண்டும். அது தமிழீழத்தில் வந்து முடியத்தான் வேண்டும்.**

கொடுக்கப்படவில்லை. சந்திப்பும் மறுக்கப்பட்டது. பின்னர் இந்தச் செய்திகள் பத்திரிகைக்கு வந்து காணாமல் போனோர் விடயம் பற்றி பலமாக விமர்சிக்க ஆரம்பித்தபோதுதான் அந்த ஜனாதிபதி என்ற அம்மா இறங்கி அந்தக் குழுவினரைச் சந்திக்க அனுமதித்தார். அதோட அவ்வளவுதான். அக்குழுவினர் சார்பாகக் கேட்ட கோரிக்கைகளை இற்றைவரைக்கும் அரசாங்கமோ ஜனாதிபதியோ எதிர்கொள்ளவில்லை.

*கே: செம்மணிப் புதைகுழி விவகார விசாரணை தொடர்பாக அரசின் தற்போதைய நிலைப்பாடு என்ன? இததொடர்பாக தாங்கள் மேற்கொள்ளும் நடவடிக்கையைக் கூறுங்கள்?*

ப: இந்த செம்மணி விவகாரம் சம்பந்தமாக முதன் முதலில் வெளியிட்டது அந்த கிருசாந்தி குமாரசாமி கொலை வழக்கில் தீர்ப்பு வந்த நாள். அதாவது யூலை மாதம் 3ம் திகதி. சோமரத்ன ராஜபக்ச என்னும் அந்தச் சிப்பாய் வெளியிட்ட தகவல்களை பத்திரிகைகளில் கூட வெளியிடுவதற்கு முன்வரவில்லை. சிங்களப் பத்திரிகைகள் முன்வரவில்லை. தமிழ்ப் பத்திரிகைகள் கூட கொஞ்சம் தயங்கினார்கள். பின்னர் என்னுடைய வற்புறுத்தலின் நிமித்தம் ஒரு சில நாட்களுக்குப் பிறகு பத்திரிகைகள் இதுபற்றி வெளியிட்டன. இதற்குப் பிறகு அரசாங்கம் எந்தவொரு நடவக்கையும் எடுக்கவில்லை. ஆனாலும் சார்க் மாநாடு நடக்கப் போகுதே, இந் நேரத்தில் தமிழன் யாராவது அட்டகாசம் செய்வானே என்று பயந்து சார்க் மாநாடு தொடங்குவதற்கு இரண்டு மூன்று நாட்களுக்கு முன்னர் இந்த அம்மா சி.ஐ.டி.யை இந்த விசயத்தில் ஈடுபடச் சொல்லக் கேட்டார்கள். அதற்குப் பிறகு இன்றுவரைக்கும் சி.ஐ.டி. என்ன செய்தது? என்ன செய்யவில்லை? வாக்குமூலங்கள் எடுத்தார்களா? இல்லையா? ஒன்றுமே தெரியாது. இதுபற்றி கிளர்ச்சி நடந்துகொண்டே வருகிறது. இன்றைக்கு லயன் எயர் விழுந்து நொருங்கினபடியால் பத்திரிகையில் ஒரு செய்தி வந்தது. என்னவென்றால், இன்னும் 3 மாதத்திற்கு ஒன்றுமே நடக்காது. காரணம் விமானப் போக்குவரத்து இல்லை. இன்னுமொன்று மழைக்காலம். இப்படியான சாட்டுக்கள சொல்லப்பட்டு வருகின்றன. அப்படித்தான் செம்மணி பற்றி விசாரிக்க விமானம் மூலமாகப் போகமுடியாது என்றால் கப்பல் மூலமாகவும் போகலாம். ஆனாலும் அந்த ஆர்வம் இல்லை. ஏன்? தமிழ் மக்கள்தான் அந்தப் புதை குழிக்குள் புதைக்கப்பட்டார்கள்.

லயன் எயர் விமானம் நொருங்கினபோது இந்த அம்மாவுக்கு... தமிழ் ஆட்கள் எல்லாம் வரிசையில்நின்று வாக்களித்தார்களே! ஆனபடியால் தான் அந்த அம்மா அந்த விமான விபத்தில் செத்தவர்களுக்குக் கூட மனக்க வலையாவது தெரிவிக்காமல் இருக்கிறார். இது தமிழ் மகனுடைய கண்களைத் திறக்க வேணும். கண்களைத் திறக்காட்டி நான் சொல்லுவன் ஆங்கிலேயன் சொல்லுகிறமாதிரி Save the bloody will right தமிழில் எப்படி சொல்லுகிற என்று எனக்குத் தெரியாது. ===>

www.tamilarangam.net



**எதிரிகளைவிட துரோகிகளே ஆபத்தானவர்கள்**

**தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே.பிரபாகரன்**

# சுமூக நிலை ஏற்படும் வரை ....

யாழ்குடா நாட்டில் சுமூக நிலை மீட்டெடுக்கப்படும் வரை மேயர் பதவி உட்பட நகராட்சி நிர்வாகப் பணிகளிலிருந்து விலகியிருக்க தமிழர் விடுதலைக்கூட்டணி விரும்புவதாக அக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் நீலன் திருட்செல்வம் கூறியுள்ளார். இதனை ஒருவகையில் காலங்கடந்து எடுத்த தீர்மானம் என்று கூடக்கூறலாம்.

ஏனெனில் யாழ்குடாநாட்டில் உள்ளூராட்சித் தேர்தல்கள் நடத்தப்பட்ட போதே அங்கு தேர்தல்கள் நடத்துவதற்கோ அன்றி உள்ளூராட்சிச் சபைகள் செயற்படுவதற்கோ சுமூகமான சூழ்நிலை இல்லையென்றே பலராலும் எச்சரிக்கப்பட்டது. ஆகையினால் அங்கு தேர்தல்களை நடத்துவதும் வேட்பாளர்களை நிறுத்துவதும் சூழ்நிலைக்கு உகந்ததல்ல என்ற நிலையே காணப்பட்டிருந்தது. ஆனால் சந்திரிகா குமாரத்துங்கா அரசாங்கம் உள்ளூராட்சித் தேர்தலை நடத்துவதன் மூலம் யாழ் குடாநாட்டில் சுமூக நிலை ஏற்பட்டுவிட்டது யாழ் குடா நாடு சிறிலங்காவின் கட்டுப்பாட்டில் உள்ளது என காட்ட முனைந்தது. அதுவும் சுதந்திரப் பொன்விழாக் கொண்டாட்டங்களுக்கு— அதாவது 1998 பெப்ரவரி 4ம் திகதிக்கு முன்னராக நடத்துவதன் மூலம் அரசு இலாபம் ஈட்டிக்கொள்ள முனைந்தது.

இதே சமயம், தேர்தலுக்கான சூழ்நிலை சரியானதாக இல்லை எனக் கூறிக்கொண்டாலும் சந்திரிகா குமாரதுங்காவின் விருப்பத்திற்கு ஒத்துழைக்கவும் தமது அரசியல் லாபத்தை நிலை நிறுத்திக் கொள்ளவும் தமிழ்க் குழுக்களும் தேர்தலில் போட்டியிட முன்வந்தன அதாவது அரசிற்கு ஒத்துழைப்பதன் மூலம் சில சலுகைகளைப் பெற்றுக்கொள்ள அவைவிரும்பின. அதே சமயம் தமிழ்க் குழுக்களின் இம் முடிவானது, சந்திரிகா குமாரதுங்கா அரசாங்கத்தை பொறுத்து பெரிதும் வரவேற்கத் தக்கதாக இருந்தது. ஏனெனில் சந்திரிகா அரசின் குறிக்கோள்கள் தமது அரசியல் அபிலாசைகளின் குறிக்கோள்கள் நிறைவேறவேண்டும் என்பதே. அதற்காக அது தமிழ்க் குழுக்களைப் பலியிடவும் தயாராக இருந்தது. ஆனால் இது தமிழ்க்குழுக்கள் விளங்கிக் கொள்ள முடியாத விடயமாகவும் இருக்கவில்லை. ஏனெனில் ஒருபுறம் இராணுவ ஆக்கிரமிப்பின் கீழுள்ள பிரதேசத்தில் தேர்தல்களோ அன்றிச் சிவில்நிர்வாகமோ சாத்தியமில்லையென்பது அவர்கள் அனைவருக்கும் தெரிந்ததே. அதுவும் வடக்குக் கிழக்கில் பல தேர்தல்கள் இராணுவத்தின் உதவியுடன் நடத்தப்பட்டதாயினும் அங்கு சிவில் நிர்வாகம் சீராக அமையவில்லை. இதற்கு ராணுவமும் சரி அரசாங்கமும் சரி ஒத்துழைப்பு வழங்கத் தயாராக இருக்கவில்லை. இதைத் தவிர வடக்குக் கிழக்கில் சிறிலங்கா அரசின் நிர்வாகத்திற்கு அனுசரனையாக அதன் ஏஜண்டுகளாகச் செயற்பட்ட பல அரசியல்வாதிகள் அதிகாரிகள் உட்பட கொல்லப்பட்டதும் இதற்கு அவ்வாறான செயற்பாடுகள் தமிழ் இனத்திற்கு துரோகமான நடவடிக்கையாக அமைவதே காரணமாகும் இவ்வாறான செயற்பாட்டினால் தமிழர் விடுதலைக் கூட்டணியினர் சிலர் பலியாகியுமுள்ளனர். இந்த வகையில் வடக்கு கிழக்கில் உள்ளூராட்சித் தேர்தல்கள் என்பதும் சிவில் நிர்வாகம் என்பதும் சிங்கள ஆட்சியாளர்கள் தமிழ் இனத்துரோகிகளுடன் இணைந்து மேற்கொள்ளும் கூட்டுச்சதி நடவடிக்கையேயாகும். இல்லாத ஒன்றை இலாபம் ஈட்ட முற்படுகையில் தமிழ் குழுக்களோ தமது சுயநலத்திற்காக இனத்தையே காட்டிக்கொடுக்க முற்பட்டுள்ளன எனலாம். ஆனால் தற்போது சுமூக நிலை ஏற்படும் வரை எனக் கூறிக் கொண்டு தமிழர் விடுதலைக் கூட்டணியினர் பின்வாங்க முனைவதானது, யாழ்குடாநாட்டில் இருபெரும் இழப்புக்கள் ஏற்பட்டதன் எதிரொலி என்றே கூறுதல் வேண்டும். ஆரம்பத்திலிருந்தே இவ்வாறு இழப்புக்கள் ஏற்படக்கூடும் என அவர்கள் எதிர்பார்த்திருப்பினும் ஆக்கிரமிப்பு இராணுவம் பாதுகாப்பு வழங்கும் என்று கருதினர். ஆனால் அது சாத்தியமாகவில்லாது விடில் கடந்த டிசம்பரில் சுமூகநிலை ஏற்பட்டு விட்டது எனக் கூறிக் கொண்டு தேர்தலில் குதித்தவர்கள் இன்று சுமூக நிலை ஏற்படும் வரை எனக் கூறிக் கொண்டு பின் வாங்க வேண்டிய தேவை ஏற்பட்டிருக்க மாட்டாது. அதுவும் நீலன் திருச்செல்வம் போன்றவர்கள் கொழும்பில் இருந்து கொண்டு சிங்கள அரசின் ஆக்கிரமிப்புக் கொள்கைக்காக ஒத்தாசை வழங்குவதோடு ஆலாசனை வழங்குபவர்களும் ஆகும். இவர்கள் தமது கட்சியினைப் பலியிட்டாவது அரசியல் ஆதாயம் ஏற்பதற்கு தயங்காதவர்கள். அவர்களே தற்பொழுது சுமூக நிலை தோன்றும் வரை விலகியிருக்க முற்படுகின்றமையானது இன்னும் பாதிப்புகள் ஏற்படுமோ் என்ற அச்சத்தினாலேயே ஆகும். இல்லாது விடின் அவர்கள் தமது அபிலாசைகளை இலகுவில் துறந்து விடக் கூடியவர்கள் அல்ல ❁

—ஈழநாதம்

---

**விடுதலைப்புலிகள்......**

என்று எனக்குத் தெரியாது. உனக்கு இது வேணும். ஏன் நீ நச்சரித்துக் கொண்டு இந்த அம்மாவுக்கு வாக்களிக்கப் போனாயே அதுக்குத் தான் இப்படி உதைக்கிறார்.

கே: *சிறிலங்கா அரசின் தமிழர் பகுதி மீதான நிவாரண வெட்டைக் கண்டித்து வன்னிப் பகுதியில் 5 வாரத்திற்கு மேலாக மக்கள் உண்ணாவிரதம் மேற்கொண்டு வருகின்றனர். அவர்களின் நியாயமான கோரிக்கைகள் தொடர்பாக தாங்கள் என்ன செய்கிறீர்கள்? இதுபற்றி ஏனைய தமிழ்க் கட்சிகளின் செயற்பாடுகள் என்ன?*

ப: நான் இந்த விடயத்தில் ஒன்றும் செய்ய முடியாது. ஏனென்றால் நான் ஒரு தனி நபர். குரலும் எழுப்ப முடியாது. எனக்கு ஒரு மேடையும் இல்லை. அப்படியிருந்தம் உங்களைப் போல் கண்ணீர் ஊற்றிக் கொண்டுதான் இருக்கிறன். ஆனாலும் மேடை இருக்கிறவர்கள் அதாவது பாராளுமன்றத்தில் இந்த விசயத்தை வன்மையாகக் கண்டித்து இந்த அரசுக்கு சொல்லக்கூடிய நிலையில் இருக்கிறார்கள். என்னவென்றால் நீ சரியாகச் செய். அல்லாட்டி உனக்கு மாறாக நாங்கள் வாக்களிக்க போகிறோம். இதையாவது அவர்கள் செய்ய தயாராக இல்லை. நான் என்ன செய்ய முடியும்.

கே: ***அண்மையில் தென்னாபிரிக்காவுக்கு சென்ற ஜனாதிபதி சந்திரிகா தொலைக்காட்சி செவ்வியின்போது, இலங்கைக்குச் சொந்தமில்லாத தமிழர்கள் என்ற கருத்துப்பட கூறியுள்ளார். இக்கூற்றின் உள்நோக்கம் என்ன?***

ப: இந்த விடயத்தைப் பற்றி பகிரங்கமாக குரல் எழுப்பினவன் நான். அதற்காக அவர் சொல்லியிருக்கிறார், நாங்கள் இரண்டாம் தரப் பிரசைகள் என்பதை மீண்டும்.. மீண்டும்.. மீண்டும் உலகத்திற்குக் காட்டவே அவர் இப்படிக் கூறியிருக்கிறார். இதையும்கூட பாராளுமன்றத்தில் இருக்கிற தமிழ் உறுப்பினர்கள் கண்டிக்கவில்லை. இதுதான் மிகவும் கவலைக்குரிய விசயம். ஏன்? சத்திராசியினுடைய தயவில் வாழ்க்கை நடத்துவதற்கு தயாராக இருக்கிறவன் குரல் எழுப்புவானா? ஆனபடியால் தமிழ் மகன் விட்ட ஒரு பிழையினுடைய விளைவு இப்பொழுது நடந்து கொண்டே போகுது...

கே: *இறுதியாக தமிழீழ தேசிய விடுதலைப் போராட்டம் பற்றியும் அதன் வளர்ச்சி பற்றியும் தங்களுடைய கருத்தைக் கூறுவீர்களா? களத்தில் பத்திரிகை ஊடாக புலம்பெயர் தமிழ் மக்களுக்கு தாங்கள் கூற விரும்புவது என்ன?*

ப: தமிழ் தேசிய இனத்தினுடைய தன்மானத்தைக் காப்பாற்றிக் கொண்டு வருவது எங்களது விடுதலைப் புலிகள். ஆனபடியால்தான் நேற்று பெல்ஜியத்தில் இடம்பெற்ற அந்தக் கூட்டத்தில் ஒருவர் விடுதலைப் புலிகள் பற்றி என்னிடம் கேட்டபோது நான் சொன்னேன் LTTE is pray of the Tamil Nation. அதாவது தமிழ் தேசிய இனத்தினுடைய பெருமை தமிழீழ விடுதலைப் புலிகளாகும். அதேமாதிரி அவர்களுடைய வளர்ச்சி மகத்தான வளர்ச்சி. 1983 ல் விடுதலைப் புலிகளின் எண்ணிக்கை மிகவும் குறைவு. ஆனால் இன்றைக்கு ஏறக்குறைய 15 வருடங்களுக்கு பிறகு விடுதலைப் புலிகள் எப்படியானவர்கள், எப்பேர்ப்பட்ட போராட்டத்தை நடத்திக் கொண்டிருக்கிறார்கள் என்பதை தமிழ் மக்கள் பார்த்து உணர்ந்து மகிழ்ச்சியடையக் கூடிய நிலையில் இருக்கிறார்கள். ஆகையால் விடுதலைப் புலிகளுடைய சேவை மகத்தான சேவை. அதனால்தான் இன்னுமொரு பாசறையில் வளர்ந்த நான் இன்றைக்கு அவர்களை ஆதரிக்க வெளிக்கிட்டு இருக்கிறேன். அவர்களுக்கு தலை

**தமிழ் தேசிய இனத்தினுடைய தன்மானத்தைக் காப்பாற்றிக் கொண்டு வருவது எங்களது விடுதலைப் புலிகள். ஆனபடியால்தான் நேற்று பெல்ஜியத்தில் இடம்பெற்ற அந்தக் கூட்டத்தில் ஒருவர் விடுதலைப் புலிகள் பற்றி என்னிடம் கேட்டபோது நான் சொன்னேன் LTTE is pray of the Tamil Nation. அதாவது தமிழ் தேசிய இனத்தினுடைய பெருமை தமிழீழ விடுதலைப் புலிகளாகும்.**

வணங்குகிறேன். என்னுடைய பங்களிப்பை இயலுமானவரை செய்துகொண்டு வருகிறேன்.

புலம்பெயர்ந்த மக்களுக்கு சொல்ல வேண்டியது என்னவென்றால் இன்றைக்கு நிங்கள் சும்மா மெளனமாக இருக்க முடியாது, என்னவென்றால், இன்றைக்கு நீங்கள் விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கு எவ்வளவோ உதவி செய்கிறீர்கள். அதுவும் ஒரு மகத்தான விசயம். ஆனாலும் ஒரு விசயத்திலை நீங்கள் கொஞ்சம் உரிய விதத்தில அரசியல் நிலைப்பாட்டினை நீங்கள் காட்டவில்லை. இன்றைக்கு தீவிலுள்ள தமிழ் தேசிய இனத்தினுடைய அரசியல் இலட்சியம் அரசியல் நிலைப்பாடு அரசியல் அபிலாசைகள் என்ன என்பதை ஏகோபித்து ஒரு குரலில் கூறவேண்டும் என்பதுதான் என்னுடைய அவா. அவ்வாறு கூறுகின்றபோது இதுதான் தமிழ் தேசிய இனத்தினுடைய ஏகோபித்த அரசியல் குரல் என்று உலகத்திற்குக் காட்டலாம். இந்தச் சேவையால் புலம்பெயர் மக்கள் குறிப்பாக 11 நாடுகளில் வசிக்கின்ற மக்கள் ஒருமித்து ஒரே குரலில் ஒரே வடிவத்தில் தமிழ்த் தேசியத்தின் அரசியல் வடிவத்தை, நிலைப்பாட்டை உலகிற்கு முன்வைக்க வேண்டும். இப்படி ஒரே குரலில் அரசியல் நிலைப்பாட்டை முன்வைக்கிறதன் நிமிர்த்தம் உலகமே அதிர்ச்சியடைந்து அடேயப்பா! இவர்களெல்லாம் ஒன்று சேர்ந்திருக்கிறார்கள் என்ற ஒரு தாக்கத்தை உருவாக்குகிற அதேநேரம் அவர்கள் தமிழ்த் தேசிய இனத்தின் அரசியல் குரலாகவும் ஒலிக்கின்றார்கள். அதை நான் காண விரும்புகின்றேன். இந்த விடயத்தில் அவர்கள் ஈடுபட வேண்டும் என நான் தாழ்மையாக கேட்டுக் கொள்ளுகின்றேன்.

திம்புக்கோட்பாட்டை அடிப்படையாகக் கொண்ட அதாவது நாங்கள் வேறுபட்ட தேசியம். எங்களுக்கு ஒரு பாரம்பரிய தனிநாடு இருக்கிறது. எங்களுக்கு சுயநிர்ணய உரிமை இருக்கிறது. அதை யாரும் கொடுக்கவில்லை. நாங்கள் பிறக்கும் போதே இருந்தது. அதேமாதிரி நாங்கள் இன்னொரு இனத்திற்கு அடிமைப்பட்ட ஓர் இனம் அல்ல என்ற இந்த விசயங்களை மனதில் வைத்து வலியுறுத்தி எமது அரசியல் நிலைப்பாட்டை வெளிப்படுத்த வேண்டும். ❁

www.tamilarangam.net



# சகாப்தம் படைத்த ஸ்ராலின்கிராட் 16



மார்ஷல் சுயிக்கோவ்

நகர சண்டையில் ஒவ்வொரு சாலையும் சதுக்கமும் ஒரு குறுகிய போர்க்களமாகும். இது கமான்டர்களிடமிருந்து விசேட கவனத்தையும் சீரிசைவையும் கோருகிறது. இங்கு சாதாரண பலம் மட்டும் போதாது.

செப்டம்பரில் நகரத்தை அணுகிய போது பாசிஸ்டுகள் சகலவித ஆயுதங்களிலும் விஞ்சி நின்றனர். ஒரே அடியில் எங்களை வோல்கா ஆற்றில் தள்ளி விடலாம் என்று எவ்வித சந்தேகமும் இல்லாமல் அவர்கள் நம்பினர். போர்க்களத்தில் அவர்கள் இத்தகைய பலத்துடன் ஒருவேளை தம் திட்டத்தை நிறைவேற்றி, 62வது படையின் தற்காப்பைப் பிளந்திருக்கக்கூடும். அதுவும் இத்தற்காப்பின் ஆழம் அதிகபட்சம் 3–5 கி.மீ.களாக இருந்திருந்தால் இது ஒருவேளை சாத்தியமானதாயிருந்திருக்கலாம். போர்க்களச் சூழ்நிலையில் பத்து மடங்கு பலத்தில் விஞ்சி நின்ற எதிரியை, 62வது படையிடமிருந்த சிறு தற்காப்பை வைத்து தடுத்து நிறுத்தியிருக்க முடியாது. ஆனால், நாங்களோ மூன்று மாதங்களாக, விஞ்சி நின்ற எதிரியின் இடையறா தாக்குதல்களை எதிர்த்து சமாளித்தோம்.

என்ன காரணம்?

எதிரியை விட விரைவாக 62வது படையின் வீரர்கள் நகரச் சண்டை என்றால் என்னவென்று புரிந்து கொண்டனர். நகரச் சண்டையில் தெருக்கள், கட்டிடங்கள், நிலவறைகள், மாடிப்படிகள், தொழிற்சாலைப் புகைபோக்கிகள், வீட்டுக்கூரைகள் ஆகியவற்றை எப்படிப் பயன்படுத்துவது என்று எதிரியைவிட விரைவாகவும் சிறப்பாகவும் இவர்கள் கற்றுகொண்டனர். நகரச் சண்டையின் கலையைக் கற்றதும் படையின் எல்லா உறுப்புகளும் — தலைமையகங்கள், அரசியல் உறுப்புகள், பின்னணி — தாம் கற்றதையும் அனுபவத்தையும் ஆழ்ந்து பரிசீலித்து அவற்றை மேம்படுத்திக்கொண்டன. தெருச் சண்டைக்கலை மாற்றங்களின்றி அப்படியே நிலையாக இருக்கவில்லை. நாங்கள் அதை மேம்படுத்தினோம். ஒவ்வொரு போர் வீரனும் புதிதாக எதையாவது கண்டுபிடிக்க முயன்றான்.

நல்ல வெற்றிகரமான போராட்ட முறைகளை கண்டுபிடித்தான்.

ஸ்டாலின்கிராட்டின் தெருக்களில் நடந்த சண்டைகளில் பொறியியல் பிரிவு வீரர்கள் — இவர்கள் யுத்தத்தில் மறைமுக வீரர்களாயிருந்தனர் எனலாம் — விசேட பங்காற்றினர். இவர்கள் தடையரண்களையும் தற்காலிகப் பாலங்களையும் எழுப்புவதில் ஈடுபட்டிருந்ததோடு கூட படையின் முன்வரிசைகளில் நின்று சண்டையுமிட்டனர். வெடிமருந்தும் கண்ணிவெடிகளும் இந்த வீரம் மிகு பொறியியல் பிரிவு வீரர்களின் கரங்களில் ஆபத்தான ஆயுதங்களாக இருந்தன. எதிரியை ஒன்றும் செய்ய முடியாது என்று தோன்றிய போது பொறியியல் பிரிவு வீரர்கள் வந்து வெடிகுண்டுகளால் அவர்களை ஒழித்துக்கட்டினர். சாதாரண வழியில் எதிரியை அணுகமுடியாதிருந்தபோது, பொறியியல் பிரிவு வீரர்கள் பூமியின் அடியில் சென்று, தரையடி கண்ணிவெடிப்பாதையின் வழியாக எதிரியின் வலுப்படுத்தப்பட்ட மணடலத்தில் நுழைந்து வெடிகுண்டுகளை வெடித்தனர்.

இன்று "தரையடி கண்ணி வெடிப்பாதை" அல்லது "எதிரியைத் தாக்குவதற்கான மறைவு வழி" போன்ற சொற்கள் பழமையானவையாகப்படலாம். ஆனால் 62வது படையின் பொறியியல் பிரிவு வீரர்கள், சென்ற நூற்றாண்டின் நடுவில் செவஸ்த்தோப்பலைக் காத்து நின்ற புகழ் மிகு ருஷ்ய கண்ணிவெடிப் பிரிவு வீரர்களின் அனுபவத்தை எதிரியுடனான போராட்டத்தில் பயன்படுத்தத் தயங்கவில்லை.

இவ்வீரர்கள் வைத்த கண்ணிவெடிகளில் ஏராளமான எதிரி டாங்கிகள் மாட்டிக் கொண்டு வெடித்தன. பொறியியல் பிரிவு வீரர்கள் தாக்குதல் குழுக்களிலும் இடம் பெற்றிருந்தனர்.

இதோ ஒரு சில எடுத்துக்காட்டுகள்.

நகரத்தின் வடக்குப் பகுதியை எதிரி தாக்கிய போது, பொறியியல் பிரிவு வீரர் குழு ஒன்று மேஜர் கெ. என். வனியாக்கின் தலைமையில், மோக்ரயா மேச்சேத்கா பள்ளத்தின் பகுதியில் இரண்டு கண்ணிவெடிக் களங்களை அமைத்தது. எட்டு எதிரி டாங்கிகள் இவற்றில் சிக்குண்டு சின்னாபின்னமாகின.

13வது கார்டு டிவிசனின் பகுதியில் ஓரிடத்தில் எதிரி ஒரே இரவில் இரண்டு முறை தற்காப்பைப் பிளக்க பார்த்தான். இந்த இடத்தை எங்கள் கரங்களில் வைத்திருக்க வேண்டியிருந்தது. லெப்டினன்ட் எஃப். லிவாத்னிய் தலைமையில் ஒரு பொறியியல் பிரிவு வீரர் குழு எதிரியின் குண்டு மழைக்கிடையே 400 கண்ணிவெடிகளை அமைத்தது. எங்களுடைய தாக்குதலாலும் இக்கண்ணிவெடிகளாலும் எதிரிக்குப் பேரிழப்பு ஏற்பட்டதால், தனது தாக்குதலை வேறு திசைகளுக்கு மாற்றும்படி எதிரி நிர்ப்பந்திக் கப்பட்டான்.

தற்காப்புப் பிரதேசம் ஒன்றிலிருந்த டிரான்ஸ்ஃபார்மர் கூண்டைக் கைப்பற்றிய எதிரி, அங்கிருந்தபடி எங்களைக் கண்காணித்தான். எங்கள் மீது சுட்டான். 8வது கார்டு பட்டாலியனைச் சேர்ந்த பொறியியல் பிரிவு வீரர் குழு ஒன்று ஒருநாள் இரவு ரகசியமாக அக்கூண்டை அணுகி, அதிலிருந்த பாசிஸ்டுகளோடு சேர்த்து அதை வெடி வைத்துத் தகர்த்தது.



மண் சுவரால் சுற்றி மூடப்பட்ட எண்ணெய் சிண்டிகேட் தொழிற்சாலைப் பிரதேசத்தில் எதிரி ஒரு வலுவான ஆதாரத்தளத்தை ஏற்படுத்தியிருந்தான். அங்கிருந்து பாசிஸ்டுகள் பான்னிய் பள்ளத்தையும், வோல்கா கரையையும் சுட்டனர். அத்தொழிற்சாலை பிரதேசத்திலிருந்த பெட்ரோல் சிலிண்டர் ஒன்றில் எதிரி இல்லையென வேவுப் பிரிவு கண்டுபிடித்தது. 8வது கார்டு பட்டாலியனைச் சேர்ந்த பொறியியல் பிரிவு வீரர்குழு ஒன்று தோல்கி பள்ளத்திலிருந்து இந்த கிடங்கின் அடிப்பாகம் வரை ஒரு சுரங்க வழியை ஏற்படுத்தி, அடிப்பகுதியில் வெடிகுண்டுகள் மூலம் துவாரங்களை உண்டாக்கி, அதில் இரண்டு சுடுமிடங்களையும் கண்காணிப்பிடத்தையும் உருவாக்கியது. சாதாரண மற்றும் மார்டர் பீரங்கிகள் சுட்டு இக்குழுவிற்குப் பாதுகாப்பளித்தன. பெட்ரோல் சிலிண்டரைப் பிடித்ததும் எதிரியின் ஆதாரத்தளம் செயலிழந்து போனது.

"கிராஸ்னி அக்தியாபர்" தொழிற்சாலையின் ஊதலைப் பிரிவின் மீது திடீர்த் தாக்குதலுக்கு தயாரான போது, பொறியியல் பிரிவு வீரர்கள் 39வது கார்டு டிவிசனின் இடத்தில் வெடிகுண்டுகளின் உதவியால் நடைபாதைகளை ஏற்படுத்தினர். இதனால், கை எறிகுண்டை வீசும் தொலைவிற்கு எதிரியை நன்கு தாக்கி, பெரிதும் வலுப்படுத்தப்பட்ட எதிரியின் ஆதாரதளத்தைப் பிடிக்க முடிந்தது.

"கிராஸ்னி அக்தியாபர்" தொழிற்சாலைக்கு வடமேற்கே 45வது டிவிசனின் இடத்தில், 102.0 என்ற இடத்தின் அடிப்பகுதியில் எதிரிக்கு ஒரு சுடுமிடம் இருந்தது. இங்கிருந்து பாசிஸ்டுகள் எங்கள் நிலைகள் மீது சுட்டனர். பொறியியல் பிரிவு வீரர்கள் ஒரு பீப்பாயில் வெடிமருந்தை நிரப்பி, திரியில் நெருப்பு மூட்டி, அச்சுடுமிடத்தை நோக்கி சாய்வாக உருட்டி விட்டனர். வெடியோசை கேட்டது. அந்த இடமும் அங்கிருந்த பாசிஸ்டுகளும் அழிக்கப்பட்டனர்.

எதிரிகள் ஒரு பெரிய கட்டிடத்தின் நிலவறையில் புகுந்து கொண்டு, எங்களுடைய யூனிட்டுகள் கட்டிடம் முழுவதையும் பிடிக்க இடையூறாக இருந்தனர். தாக்குதல் குழுவிலிருந்த பொறியியல் பிரிவு வீரர்கள் ஜூனியர் லெப்டினன்ட் பி. தி. இவனீத்ஸ்கி தலைமையில் 260 கிலோகிராம் வெடிகுண்டகளை வைத்து வெடித்தனர், போர்க்கைதிகள் கூறிய தகவல்களின்படி 150க்கும் மேற்பட்ட பாசிஸ்டுகள் கொல்லப்பட்டனர்.

பொறியியல் பிரிவு வீரர்கள் எல்லா விதமான துருப்புகளிலும், அவற்றோடு ஒன்று சேர்ந்து இயங்கினர். இவர்களின் போர்க்களப் பணிகள் படையின் மொத்தப் பணிகளின் ஒரு அங்கமாக இருந்தன. ஆனாலும் புதிது புனையும் ஆற்றலும் சமயோசித உணர்வும் பொறியியல் பிரிவு வீரர்களிடம்தான் நன்கு வெளியிடப்பட்டன என்பதைக் கூறாமலிருக்க முடியாது. இவர்களா்ல் வெற்றிகரமாக சமாளித்து மீளமுடியாத விடயமே இல்லை என்று தோன்றிது.

போறியியல் பிரிவு வீரர்கள் ஆற்றைக் கடக்கும் வழிகள் நன்கு இயங்க உதவினர். ஏதிரி கைப்பற்றிய கட்டிடங்களின் மீது திடீர்த் தாக்குதல்களைத் தொடுத்தனர். எங்களுடைய துருப்புகளின் நிலைகளை வலுப்படுத்தினர். பதுங்கிடங்கள், மறைவிடங்கள், காப்பிடங்களைக் கட்டினர்.

பனிக்காலம் வந்து கொண்டிருந்தது. போர்க்கள நிலவரம் எவ்வளவு கடினமானதாக இருந்த போதிலும் போர்வீரனுக்கு கதகதப்பை வழங்க வேண்டியிருந்தது. , அவர்களுக்குக் குளியல் வசதிகளை ஏற்பாடு செய்ய வேண்டியிருந்தது. போரிட்டுக் கொண்டிருந்த நகரத்தில் பொறியியல் பிரிவு வீரர்கள் நீராவிக் குளியலறைகளைக் கட்டினர். போர்வீரர்கள் இதற்காக இவர்களுக்கு நெஞ்சார நன்றி கூறினர்.

வோல்காவின் கரையில் நடந்த மாபெரும் சமர் முடிவடைந்து விட்டது. சுற்றி வளைக்கப்பட்ட பாசிஸ்டுகள் ஓரளவிற்கு அழித்தொழிக்கப்பட்டனர். ஓரளவிற்கு கைது செய்யப்பட்டனர். புதிய சமர்களுக்கு தயாராவதற்காக 62வது படை நகரத்திலிருந்து வெளியேறியது. ஆனாலும், நகரத்தில் இன்னமும் நீண்ட நேரத்திற்கு வெடியோசைகள் கேட்டன. கண்ணிவெடிகள், வெடிக்காமலிருந்த குண்டுகள், விமானக் குண்டுகளை பொறியியல் பிரிவு வீரர்கள் அழித்ததால் ஏற்பட்ட ஓசைதான் அது.

சண்டைகள் முடிந்ததுமே, இடிபாடுகளில் கிடந்த நகரத்தையும் தொழிற்துறையையும் புனரமைக்கும் பணி துவங்கியது. இந்த மாபெரும் செயலில் பொறியியல் பிரிவு வீரர்கள்தான் முன்னணியில் நின்றனர். அபாயம் மிக்க பல்லாயிரக் கணக்கான கண்ணிவெடிகள், குண்டுகளை அகற்றிய இவர்கள், புனரமைப்பு வேலைகள் நகரத்தில் உடனடியாகத் துவங்குவதற்கான சூழலை ஏற்படுத்தினர்

தொடரும்......

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# வாழ்வே போராக . . .

> 'ஜெயசிக்குறு' சமரில் எமது போராளிகள் வெளிப்படுத்திய மனவலிமையும், செயலாற்றலும், அபாரமான சகிப்புத்தன்மையும் பெரிதும் பாராட்டத்தக்கது. எமது வீரர்களின் இந்தத் தலைசிறந்த போர்ப்பண்புகளைக்கண்டு நான் பெருமை கொள்கிறேன்.
>
> — தமிழீழத் தேசியத் தலைவர்

காட்டுமரங்களின் நடுவே இருப்பதே தெரியாமல் எதிரியின் இடத்திலிருந்து 75–100மீ இடைவெளிக்குள் உருமறைக்கப்பட்ட காவலரண்கள். அவற்றுக்குப் பெயர்தான் காவலரணே தவிர உண்மையில் அவை அரண்மனைகள். பனங்காமத்து வன்னிமையின் தொடர் காவற்கோட்டைகளை விட இவை பலமும் அழகும் மிகுந்தவை. இந்த அரண்மனைகளை நிர்மாணித்து அரசாண்டு கொண்டிருக்கும் இள வரசிகளின் பட்டியல் நீளமானது. அவர்களின் படையணிகளும் நீள மானவை. அவர்கள் ஜெயசிக்குறு சமர்க்களத்தில் காவல் செய்யும் எல்லைகளும் நீளமானவை. அவர்களின் சாதனைகளும் நீளமானவை. நம்புவதற்குக் கடினமானவை.

"வீட்டிலை அம்மா எங்களை மண்வெட்டி பிடிக்கவே விடுறதில்லை. இந்த பங்கர் செற்–அப் நாங்கள் செய்ததுதான்"

என்று சிரித்தாள் ஒரு போராளி.

"வீட்டிலை இருந்த நேரம் ஆரையாவது அடிச்சா என்ரை கைதான் நோகும். இப்ப ஆருக்காவது அடிச்சனெண்டால், அடி வாங்கிற ஆளுக்கு எலும்பு உடையும்"

என்றாள் தன் மெல்லிய, நீண்ட, வலுவான கரங்களைக் காட்டிச் சிரித்தபடி.

உருவத்துக்கும் வீரத்துக்கும் என்ன தொடர்பு? கடற்கரும்புலி அங்கயற்கண்ணி, இளையவள், செவ்வானம், தரைக் கரும்புலிகள் ஆசா, உமையாள், செங்கதிர்– இவர்களின் உருவத்தின் அளவுக்கும் வீரத்தின் அளவுக்கும் எவ்வளவு இடைவெளி?

*பூவையாய் பாவையாய்*
*புவியினில் அடிமையாய்*
*இருந்தவள் புயலானாள்*
*இருளோடு இருளாக*
*இயலாதிருந்தவள்*
*புலியாகி புவியில் நிமிர்ந்தாள்.*
*(நன்றி–தமிழவள்)*

*பூக்களின் மென்மையில்*
*பூத்தது பெண்மையின்*
*பூவுடல் என்றவரே–உங்கள்*
*பாக்களை தீயினில்*
*தூக்கி எறியுங்கள்*
*கப்பலை வென்றனரே..*

[நன்றி–புதுவை இரத்தினதுரை]

சங்கப் புலவர்களின் கண்ணில் காந்தள் மெல்விரல்களை உடையவர்களாகத் தென்பட்டவர்கள்தான் இன்று தம் எல்லைக்குள் முன்னேறி வரமுயலும் எதிரிகளின் கைவிரல்களை ஒடித்துக் கொண்டிருக்கிறார்கள்.

அவர்களின் காவலரண்கள் அரண்மனைகள் என்றால், அவர்கள் ஒவ்வொரு காவலரணுக்கு அண்மையிலும் காட்டுக்கொடிகளாலும் இலைகுழைகளாலும் இழுத்து வளைத்துப் போட்டிருக்கும் பந்தல் வசந்தமாளிகை. அதற்குக் கீழ் காட்டுத் தடிகளை குறுக்கும் நெடுக்குமாகப் பிணைத்து அமைத்திருக்கும் தட்டி சிம்மாசனம். அங்கே அவர்கள்தான் அரசிகள். அங்கு உயர்ந்திருப்பது அவர்களின் செங்கோல். சண்டையென்றால் சண்டை, ஒய்வு என்றால் படிப்பு, பொழுதுபோக்கு, கலந்துரையாடல், புதிய தந்திரோபாயங்களைத் தீட்டல் என்று நேரம் போகும்.

அவர்களுக்கு வருகின்ற சமைத்த உணவுகள் மீண்டும் ஒருமுறை சமைத்து அவற்றுக்குவேறு உருவம் கொடுத்துவிடுவார்கள். இறைச்சிக் குழம்பு திடீரென இறைச்சிப் பொரியலாக மாற்றம் பெறும்.



பால்கறிகள் காவலரணில் வந்து குழம்புக்கறியாக அவதாரமெடுக்கும்!

"தேத்தண்ணி கூடப் போடத் தெரியாமத்தான் நான் இயக்கத்துக்கு வந்தனான்."

என்றாள் ஒருத்தி. வெங்காயம், மிளகாய் தாளித்த சட்டிக்குள் பாணைச் சின்னச் சின்னத் துண்டுகளாகப் பிய்த்துப் போட்டுக் கிளறியவாறே.

"இப்ப அம்மா என்னைப் பாத்தா ஆச்சரியப்படுவா. வெள்ளைச் சட்டை தோய்க்கிறதிலயிருந்து, சப்பாத்துக்குப் பொலிஷ் போடுறதுவரை எல்லாம் அம்மாதான். இப்ப என்ரை உடுப்பை அயேர்ன் பண்ணுறதே நான்தான்."

காவலரணில் நாவுக்குச் சுவையாகச் சமைத்துச் சாப்பிடுவது மட்டுமல்ல, உடைகளை அழகாக சுத்தமாக தூடமுத்தித்தான் அணிந்து கொள்வார்கள். கசங்கிய உடையுடனோ, சோர்ந்த முகத்துடனோ அவர்களைக் காணவே முடியாது.

கட்டையாக வெட்டப்பட்ட தன் முடியை அழகாக வாரியவாறு அவள் சொன்னாள்.

"நித்திரையாலை எழும்பிற நேரமே தலை இழுக்கத் தொடங்கி விடுவன். எங்கடை அண்ணா நான் வீட்டுக்குப் போனபோது என் தலையைப் பார்த்துவிட்டு "அதென்னெண்டு உங்களுக்கு மட்டும் வளர்ந்தாலும் தலை வடிவா இருக்குது? வெட்டினாலும் தலை வடிவா இருக்குது?" என்று கேட்டார்.

என்று சிரித்தாள்.

"நான் வீட்டுக்குப் போனால் ஒரு சதச் செலவுமில்லாமல் அம்மாவுக்கு வீடுகட்டிக் குடுப்பன். எப்படித் தெரியுமோ? இது மாதிரி ஒரு பங்கர் வெட்டுவன். காட்டுத் தடியை குறுக்காலை போட்டு, அதுக்குமேலே மண்மூடை போட்டு, அதைமூடி கிடுகாலை கூடாரம் போடுவன். மழைக்கும் பிரச்சினையில்லை வெயிலுக்கும் பிரச்சினையில்லை. கொஞ்சம் தள்ளி தடியாலையே ஒரு குட்டிக் கொட்டில் போட்டு, அதுக்குள்ளை வரிச்சுத் தடியாலை தட்டி செய்து வைப்பன். ஆரும் வந்தா அதிலை இருந்து கதைக்கலாம். ஒருதருக்கும் கரைச்சலிராது. காசும் மிச்சம், பொம்மரடிக்கும் பயமில்லை, செல்லுக்கும் பயமில்லை."

என்றாள் இன்னொரு போராளி.

இது தன்னம்பிக்கையின் உச்சம். நம்பிக்கைதான் மனிதரை வாழ வைப்பது. எந் நெருக்கடிக்குள்ளும் வாழமுடியும் என்ற நம்பிக்கையை, பலத்தை இந்தச் சமர்க்கள அனுபவங்கள் எங்களுக்குத் தருகின்றன. இந்தக் களத்துல பல சுவையான, வீரம் செறிந்த சம்பவங்கள் நிகழ்ந்திருக்கின்றன.

நம் மக்கள் தம் பேரன்புக்குரிய புலிவீரர்களுக்கு அடிக்கடி உலர் உணவுகளை, சுவையான பானங்களை அனுப்புவார்கள். அவற்றுக்கெல்லாம் இவர்கள் பெயர் மாற்றி விடுவார்கள். களத்துக்கு வரும் றிச் கேக் ஜெயசிக்குறு கேக்காவிவிடும். தமிழ் பலகாரங்களெல்லாம் ஜெயசிக்குறு பலகாரங்களாகிவிடும். அவர்கள் தயாரிக்கும் தேநீருக்குக் கூட ஜெயசிக்குறு ரீ என்றுதான் பெயர்.

மக்கள் அனுப்பிய உணவைச் சாப்பிட்டதும் நம்மவர்களுக்கு உற்சாகம் பிய்த்துக்கொண்டு வரும். காவலரணில் நின்றவாறு 75–100மீ இடைவெளியில் இருக்கும் எதிரியின் காவலரணை நோக்கி,

"பண்டார, பண்டார"

என்று உரத்துக் கூப்பிடுவார்கள். என்னவென்று எட்டிப்பார்க்கும் இராணுவத்தின் கதை சரி.

ஜெயசிக்குறு ஆண்டு நிறைவான 1998.05.13 அன்று மக்களிடமிருந்து களத்துக்கு லொறி, லொறியாக வந்து குவிக்கப்பட்ட உணவுப் பண்டங்களின் சுவையிலும், மக்களின் அன்பிலும் போராளிகள் மூழ்கிப் போனார்கள். வடபகுதியின் மூலை முடுக்கிலிருந்து பெரிசுகளும் இளசுகளும் சிறுசுகளுமாக வெற்றிக்கொடிகளை ஏந்தியவாறு அஞ்சலோட்டமாக மாங்குளம் நகருக்கு ஓடிவந்து போர்முனைத் தளபதிகளிடம் கையளித்துவிட்டு சண்டையில் நிற்கும் போராளிகளின் கைகளில் முத்தமிட்டு அவர்களைத் தூக்கித் தோளில் வைத்து ஆனந்தக் கூத்தாடி, தமது நல்லாதரவைச் சொல்லிவிட்டுச் சென்ற உற்சாகத்துடன் களத்தின் ஓராண்டை நிறைவு செய்து இரண்டாம் ஆண்டில் கால் வைத்தனர்.

இதற்கு நேர்மாறாக பதட்டத்துடனும் சாவச்சத்துடனும் இராணுவத்தினருக்கு அந்த நாள் ஒரு பெரும் யுகமாகக் கழிந்தது. சிங்களம் தெரிந்த ஒருத்தி எமது காவலரணிலிருந்து எதிரியின் காவலரணை நோக்கிக் கூவினாள்.

"ஓய் பண்டா, எங்களுக்கு எங்கடை சனத்திட்டையிருந்து சாப்பாடு வந்திருக்குது. உங்கடை பாடு என்ன மாதிரி?"

நீண்ட மௌனத்தின்பின் சலிப்புடன் பதில் வந்தது.

"இரவு பதினொரு மணிக்குப் பிறகு புளிச்ச சாப்பாடு வரும்...."

எங்கடை சனம் எல்லா இடத்தில இருந்தும் மாங்குளத்துக்கு ஓடி வந்து எங்களுக்கு வாழ்த்துச் சொல்லிவிட்டுப் போயிட்டினம்."

மிக ஆச்சரியத்துடன் வந்தது பதில்.

"உண்மையாவோ சனம் வந்து வாழ்த்துச் சொன்னதோ? எங்கடை தளபதிகள் கூட எங்களை வந்து எட்டிப் பார்க்கவில்லை."

சலிப்புடன் பதில் முடிந்தது.

தமக்கு வந்த சிற்றூண்டிகள், இனிப்புகளை சிறு சிறு பொதிகளாகக் கட்டி, எதிரி இராணுவக் காவலரண் பகுதிக்குள் எறிந்து, ஆண்டு நிறைவைக் கொண்டாடினர் போராளிகள்.

இந்த உற்சாகம், மகிழ்வு, வீரம், தன்னம்பிக்கை எல்லாவற்றுக்கும் பின்னால் இன்னொரு பக்கமும் இருக்கிறது. அந்தப் பக்கம் எங்கள் மனங்களை நெகிழச் செய்யும். எங்கள் தலைவனின் கண்களை நனையச் செய்யும். ஆயிரத்து முந்நூறுக்கு மேற்பட்ட போராளிகளின் உயிர்கள், முந்நூற்றறுபத்தைந்து தூக்கமில்லாத இரவுகள், மழைகாலங்களில் நனைந்தும், வெயில் காலங்களில் நாவரண்டும் கழிந்த நாட்கள், மர இலைகளிலிருந்து வழியும் நீரை பொலித்தின் பைகளில் சேகரித்துக் குடித்த நாட்கள், இராணுவம் நகரும் திசைகளையெல்லாம் எதிர் நோக்கி பதுங்கு குழி அமைத்த நாட்கள். நீண்ட தொலை தூர நடைபயணங்கள், ஓயாத சண்டையால் உண்டான உடல் களைப்பு எல்லாவற்றையும் கடந்துதான் இந்த நிலையை வந்தடைந்திருக்கிறோம். இவை எல்லாவற்றையும் கடந்துதான் வெற்றி நோக்கிய பயணம் தொடர்கிறது.அதோ! புதிதாகப் பயிற்சியை முடித்துக்கொண்டு உற்சாகமான இளம் வீராங்கனைகளின் அணி ஒன்று வருகிறது. அதில் ஒருத்தி தளபதி கருணா அம்மானிடம் கேட்கிறாள்:

*"எந்தப் பக்கம் சண்டை நடக்குமோ, எங்களை அந்தப் பக்கம் விடுங்கோ."* ❋

# போரே வாழ்வாக . . .

www.tamilarangam.net



# சிறுகதை

இரவு எட்டு மணியிருக்கும். களப்பங்கரையோரம். சவக்காலை ரோட்டில் திடீரென வெடித்த பேரொலியில் ஊர் ஒருதரம் ஊஞ்சலாடி வந்தது. பேரொலி அடங்குமுன் 'கரண்ட் லைன்களும் கட்டாகி கும் என்ற இருட்டு.' இருளைக் கிழித்துக்கொண்டு ஊர் நாய்கள் போட்ட சத்தம் மேலும் பீதியை நீடித்தது.

சிறிது நேரத்தின் பின் முகாங்களுக்கு மட்டும் ஒளி வந்தது. சவக்காலை ரோட்டிலிருந்து வந்த சிங்கள ஓலங்கள் மெய்சிலிர்க்க வைத்தன. ஊரில் அனேகம் பேருக்கு இதயத்துக்கு உள்ளேயே குண்டு வெடித்துவிட்ட பிரமை. அங்குமிங்கும் அமைந்திருந்த முகாங்களின் அதிரடிப்படை, அட்டகாசக் குரலெழுப்பி சம்பவ ஸ்தலத்துக்கு விரைந்தது.

'இதில் கோடாலியும் அகப்பட்டிருக்கக்கூடாதா' என்ற பரிதவிப்பு சத்தம் கேட்டிருந்த அத்தனை மனித மனங்களிலும் நிச்சயமாக எழுந்திருக்கும். விடிந்தால் ரவுண்டப் இது எதிர்பார்த்த ஒன்றுதான்.

அதிகாலையிலேயே ரவுண்டப். நிலம் தெளிய விடிவுதற்குள் ஊரை வடித்து கோயில் வீதியில் கொண்டு வந்தாயிற்று. எழுந்து விழித்தது விடியா மூஞ்சிகளில். இன்று முழுத்தும் கோயில் முன்றலில் நிறையப் பேருக்கு பூசையாகக் கிடைத்தது. ஐயருக்கு இந்தத் தடவை அதிகமில்லை.



## ஊர் வேட்டம்

கோயில் முன்வீதியில் ராணுவ வாகனங்கள் வரிசையாக நிறுத்தப்பட்டிருந்தன. கடைசியாக வந்த ஜீப்பில் 'கோடாலி' வந்திருந்தான். இரவு சம்பவத்தில் அவன் அகப்படவில்லை. நான்காவது தடவையும் தப்பித்துவிட்டான். தற்செயலாக இரவு ஜீப்பில் வந்து மாட்டியவர்கள் சிறிசேன மாத்தையாவும் இன்னுமொருவரோடு, பெண்டுகளுக்கெல்லாம் கண்டமாதிரி கையெறியும் ஒரு கறுப்பு உயர்ந்தவனும்.

கோடாலி கோயில் வீதிக்குள் வரவில்லை. எவரையும் விசாரிக்கவுமில்லை. அடிக்கவுமில்லை. இன்றும் இராணுவ உடையின்றியே வந்திருந்தான். வைத்த 'கிளாமோர்' யாருக்கென்று அனேகமாக அவனுக்குத் தெரிந்திருக்க வேண்டும். இருந்தும் அமைதியாக ஜீப்பில் சாய்ந்தபடி நின்றிருந்தான். அவனுடைய கையிலும் இப்பொழுதெல்லாம் கோடாலி இருப்பதில்லை.

கோடாலியின் சொந்தப்பெயர் வீரக்கோன் முனசிங்க. ஒரு சில வருடங்களுக்கு முன்பு கோடாலியும் கையுமாக மனித வேட்டையாடித் திரிந்ததனால் அவனுக்கு கோடாலி என்றே ஊரில் பெயர். அழும் குழந்தைக்கு 'கோடாலி வாறான்!' என்றாலே போதும். வாயைப் பொத்திக்கொண்டு தாயைக் கவ்விக்கொள்ளும் குழந்தை. இப்பொழுது அவன் திருந்திவிட்டான். அல்லது இந்தப் போராட்டத்தின் யதார்த்த நிலையை உணர்ந்துவிட்டான். இப்படிக் கருதுவது எவ்வளவுக்கெவ்வளவு உண்மையோ தெரியாது. இருப்பினும் முன்பு ஒரு நாள், ஒரு இடத்தில், நூற்று முப்பத்தைந்து இளைஞர்களின் தலையை தன் கோடாலியால் வெட்டி சாக்கிலடைத்து தம்பட்டைக்களப்பில் தள்ளிவிட்டவன் இவன். அரசாங்கம் இவனுக்கு ஆக்கமும் ஊக்கமும் பதவியும் சலுகையுமென்று வழங்கி மகிழ்வித்தது. உலகப் பார்வை இங்கு செல்லுபடியாகவில்லை.

இப்பொழுது மட்டும் ஒன்றும் ஆகவில்லை. அவனுக்கு எதுவித தடையுமில்லை. அவன்தான் ஏனோ கோடாலியை தூக்கவில்லை. ஒரு வேளை இனவெறி என்ற பசி அவனுக்கு அடங்கியிருக்கலாம். வேறு, துடிக்கப் பதைக்க கொலைத் தொழிலை வருடக்கணக்கில் செய்வதில் மனச்சலிப்பு அல்லது விரக்தி ஏற்பட்டிருந்தால் அது ஏதோ செயல். இவைகளைவிட கோடாலி, காலியில் கலியாணம் வேறு செய்திருக்கிறானாம். கர்ப்பிணியாக இருக்கும் அவனுடைய மனைவி, தனது சிசுவில் ஆணையிட்டு சத்தியம் வேண்டியிருக்கிறாளாம், உயிர்க் கொலை செய்யக்கூடாதென்று. உயிர், தமிழ் பேசினால் அவசரகால விதி, தலை விதியாகிவிடும் என்பது வேறுவிடயம். கைக்கோடாலியையும் கையோடு வேண்டி விட்டாளாமவள். இப்படி ஊர்க்கதை உலாவியது. கதை உண்மையாக இருந்தால் அவள் மனதுக்குள் புத்தர்தான் புகுந்திருக்க வேண்டும். ஆனாலும், விடயம் பிக்குவிற்கு தெரியவே கூடாது.

'அடிவிழுந்ததெல்லாம் ஈசனைக் கேட்டுக் கேட்டுத்தான். ஈசனை எப்படியாவது காட்டித்தராவிட்டால் எவரும் ஊரில் இருக்க முடியாதாம். இரவு கூட தங்களில் ஐவருக்கு யமனானவன் இந்த ஈசன்தானாம்.'

நல்லகாலம் ஊர்க்கோயில் அம்மன் கோயிலாய்ப் போனது. சிவன் கோயிலாய் இருந்திருந்தால், 'ஈசன் எங்கே இறுக்கி' என்று கேட்டு விழுகிற உதையின் உறைப்பில் சிலர் கோயிலையே காட்டினாலும் காட்டிவிடுவார்கள். கோயிலைக் காட்டினால் நிலைமை தலைகீழ். தற்பொழுது கோயில் மூலத்தானத்திற்குள் ஈசன் இருப்பது கணேஸ்வர ஐயருக்கும் பூபாலபிள்ளை வாத்தியாருக்கும் தெரியும். பூபாலபிள்ளை வாத்தியாரை விசாரித்த ஓ.ஐ.சி. ஈசன் தெரியும்? என்று கேட்டபோது 'ஓம் சேர் நல்லாவே தெரியும், ஆனா அவர் இப்ப எங்கே இருக்கிறாரென்று தெரியாது. ஆளைக்கண்டால் உங்களுக்கு உடனேயே தகவல் தருவேன்.' அவர் சுத்தமாகக் கூறினார். சத்தியமாகச் சொல்லு என்று ஓ.ஐ.சி. ஆணித்தரமாகக் கேட்க, 'சத்தியமாகத்தான் சேர்' வாத்தியார் கூறித்தப்பினார். கோயிலையும் சும்மா பார்த்துக்கொண்டார். பிறிதொரு இடத்தில் ஒரு சிறுவனை வளைத்து நின்ற அதிரடிச்சிப்பாய்கள், ஆளுக்கொரு கேள்வி கேட்டு உருட்டியெடுத்தார்கள். 'அண்ணன் எல் ரீ ரீ' என்று உறுக்கினான் ஒருவன். இல்லை மாத்தையா அண்ணனை கோடாலி மாத்தையாதான் வெட்டிப்போட்டார்' சிறுவன் பதில் சொன்னான். ஒருவன் 'நீ எல்ரீரீ போறது' எனக் கேட்டான். 'இல்லை இல்லை' சிறுவன் பதில் செல்னான். மல்லி என்று அவனே மீண்டும் அன்புத் தோரணையில் கேட்க, மீண்டும் சிறுவன் 'இல்லையில்லை' என்றான். இன்னொருவன் 'எல்ரீரீ லொக்கா பேர் என்னா'. என்று தெரியாத மாதிரிக் கேட்டான். 'வே. பிரபாகரன்' என்று சிறுவன் அழுத்தந் திருத்தமாகக் கூறிவிட, அடுத்தநின்ற சிப்பாய்'இன்ன சொல்லு இன்ன சொல்லு' என்றான். தனது நாக்கில் வராத பெயரை அந்தச் சிறுவன் உச்சரித்தவிதம், ஆவலாகவும் ஆச்சரியமாகவும் இருந்தது அவனுக்கு. சிறுவன் 'வே. பிரபாகரன்' என்று மறுகாலும் அச்சில் வார்த்தான். 'மல்லி உம்மெய் சொல்றது நல்லங் நல்லங்' என்று கூறிக் கலைத்தனர் சிப்பாய்கள்.

விசாரணைகள் நேரத்தைக் கடத்தியதே தவிர ஆக்க பூர்வமான தகவல்கள் ஒன்றையும் தரவில்லை. விசாரணைகளை நிறுத்திவிட்டு ஊர்ச்சனங்கள் அனைவரையும் வம்மி மரங்களுக்கு கீழ் அமரவைத்து கூட்டம் ஆரம்பமானது. கூட்டத்தில் ஓ.ஐ.சி. மாத்தையா பேசினார். தமிழில் ஒருவரால் மொழி பெயர்க்கப்பட்டது. 'ஈழம் வேண்டுமென்று போராடிய அனைத்துக் குழுக்களும் எம்மோடு மோத முடியாதென்று வந்து சரணடைந்து விட்டார்கள்'. உதாரணத்திற்கு பக்கத்தில் நின்ற இரு தேசவிரோதிகளை கை நீட்டிக் காட்டினார். 'எல்ரீரீஈ மட்டும் தான் அர்த்தமில்லாமல் அதுவும் மட்டக்களப்புக் காட்டிலும் யாழ்ப்பாணத்தில் ஒரு சில இடங்களிலும் இருந்துகொண்டு எம்மோடு மோதுகிறார்கள். இந்த வருட முடிவிற்குள் அவர்களின் கதையும் சரி. வருகிற சனாதிபதித் தேர்தல் நாடு பூராவும்தான் நடக்கும். எனவே எல்ரீரீஈஐ நம்பி எம்மால் வீணாகச் சாகாதீர்கள். ஈசனை நீங்கள் ஆதரிப்பதால்தான் அவன் ஊருக்குள் வருகிறான். அண்மையில் எல்ரீரீஈ இன் மாவீரர் நாளன்றுகூட நாம் ஈசனை எதிர்பார்த்து சில முக்கியமான இடங்களில் காத்திருந்தோம். ஈசன் வரவில்லை. ஆயினும் நடு ஊருக்குள் சோடனைகள் கட்டப்பட்டு, சுவரொட்டிகள் ஒட்டப்பட்டு இருந்தன. இவற்றை யார் செய்தது? பேய் வந்ததா? இந்தச் சேட்டைகள் இனி நடந்தால் துப்பாக்கிதான் பதில் சொல்லும், மிகவும் கவனம்! மீண்டும் கூறுகிறேன், 'ஈசனைப்பற்றி தகவல்கள் தருபவர்கட்கு தேவையான பணம் தருவோம். சிறிதும் பயப்படத் தேவையில்லை. எதற்கும் நாமிருக்கிறோம். நாம் பெயரெதையும் வெளியிடமாட்டோம். 'ஓ.ஐ.சி இன் பேச்சும் உபதேசமும் தொடர்ந்தது....'

ஈசனுக்கு ஓ.ஐ.சி. பேசுவது தெளிவாகக் கேட்டது. சத்தமிட்டுச் சிரிக்க வேண்டும் போல் இருந்தது. சிரித்தால் அவ்வளவுதான். மேலும் பேசுவதை அவதானித்துக் கொண்டிருந்தான் அவன். அந்த இருட்டறை இதமாக இருந்தது அவனுக்கு. அதில் இருந்து விடுபட்டு ஒரு தரம் எழும்பமுயன்று பார்த்தான். இடதுகால் நெருநருவென்று சிறிதும் அசைக்க முடியவில்லை ஒரு 'பீஸ்' வசமாகத் தாக்கி சிக்கலுடைவை ஏற்படுத்திவிட்டது.

இரவு ஈசனோடு வந்திருந்த மற்றப் போராளி, இரவு போய் குறிப்பிட்ட அந்த இடத்தில் சேர்ந்து ஈசனுக்காக அரைமணி நேரம் காத்திருந்திருப்பான். ஈசன் வராது போனதால் ஆபத்து என்பதுதான்? தீர்மானம். அவன் மற்றொரு குறிப்பிட்ட இடத்திற்கு போய்விட வேண்டும். அவன் மனம் இருப்புக் கொள்ளாது இன்றிரவுக்கு எப்படியாவது ஈசனின் தொடர்பைப்பெற மீண்டும் வருவான்.

மூலஸ்தானத்தில் வீசிய சந்தன மணம் புத்துணர்வைத் தந்தது. ஈசன் சிறிது சாய்ந்து படுத்திருந்தான். முன்பெல்லாம் கோயில் வளவிற்குள்ளேயே விளையாட விடமாட்டார் ஐயர். இன்று கோயில் மூலஸ்தானத்திற்குள் கொண்டு வந்துவிட்டிருக்கிறார். ஈசன் சிந்தித்துப் பார்த்தான். இரவு, ஊர் ஆழ்ந்து அயர்ந்துகிடந்த நேரம். ஐயர் வீட்டிற்கு வந்து சேர்ந்ததே பெரும் பாடானது. 'நான் ஈசன் வந்திருக்கிகேன், ஈசன் வந்திருக்கேன். 'ஈசனுக்கு இங்கு இடமில்லை இங்கு இடமில்லை' என்று மொத்தமாக கூறி விட்டார். இது ஏதொ சதி என்பது அவர் எண்ணம். பின்பு அவர் மகன்தான் 'ஈசன் மாமா'தான் எனக் கூறி குரலை மதித்தான். ஐயர் கதவைத் திறந்து வந்து பார்த்த உடன் அதிர்ந்துபோனார். ஈசன் ரத்தக் காயத்துடன் சோர்வுற்றுக் கிடந்தான். காயத்திற்கு மருந்து கட்டுவதென்பது சாத்தியமற்ற விடயம். இருப்பினும் நாளைய சுற்றிவளைப்பில் இருந்து எப்படியும் காப்பாற்ற வேண்டும். ஊரில் எஸ்ரீஎவ். கிண்டாத இடமுமில்லை கிளறாத இடமுமில்லை. இப்படியிருக்க ஈசனை, 'எங்கு.....' சிந்தித்தவர் 'கடவுளே' என்றபோது ஞாபகம் வந்தது. அவர் பூசை செய்கின்ற கோயில்தான். இதனால், கடவுள் தந்த இடம்தான் கோயில் என்று ஒரே முடிவாக கோயில் மூலஸ்தானத்தில் கொண்டு வந்து விட்டுவிட்டார். இங்கு அவன் நிச்சயம் காப்பாற்றப்படுவான் என்பதில் கணேஸ்வர ஐயருக்கு அதிக நம்பிக்கை. மேலும் கோயிலை சோதனையிட இராணுவத்திற்கு சட்டமில்லையோ சந்தேகமிட மறந்ததனால் வழமையாக விட்டு வைத்தார்கள்.

போன வெள்ளியன்று இரவு நடந்த ஒரு சம்பவத்தில் ஈசன் செத்துவிட்டான் என்ற செய்தி ஊர் முழுவதும் பரவியிருந்தது. இரவு நடந்த சம்பவம் அதை பொய்யாக்கியது. அன்று நள்ளிரவு இருக்கும் தனியாளாகவே ஊருக்குள் வந்திருந்தான் ஈசன். ஊரில் கால், அரைக்கால் என்று சேர்த்து வைத்துக் கொடுத்த பொருட்களுள் சிலவற்றைப் பெற்றுக்கொண்டு, வேறு சில அலுவல்களையும் முடித்துக் கொண்டு புறப்படுகின்றான். ஒரு மைல்வரை நடந்திருப்பான், ஊர் கழிந்து, சேறும் சகதியுமாக தில்லை ஆறு வருகின்றது. கையில் இருந்த சாமான்களைத் தூக்கித் தலையில் வைத்து, துப்பாக்கியையும் சீராகக் கழுவிவிட்டு ஆற்றைக்கடப்பதற்கு நடையிலேயே தயாராகிறான். 'சடக்' என்ற சின்னச்சத்தம் நடையை நிறுத்தியது. அது...துப்பாக்கி சுடு நிலைக்கு வந்த சத்தம். திக் என்றது. நிதானமாக நின்று பார்வையை இருளுக்குள் புதைத்தான் திடீரென அடித்த போக்கஸ்லைற்றுடன் தாக்குதலும் துவங்கியது. போக்கஸ்லைற்றில் சூரியன் தோற்றுவிடும். ஒலியும் ஒளியும் திடீர் அதிரடி. ஈசன் மின் வெட்டியது போல் விறுக்கென்று ஆற்றுக்குள் பாய்தவன், ஆளில்லை. ஓட்டம் மிகவும் மந்தமாகவுள்ள, சல்வீனியாப் புல்லும் ஆற்றுவாளையும் மூடிப்பரந்த ஆறு, தில்லையாறு. ஆற்றுக்குள் எஸ்ரீஎவ் இறங்கவில்லை. முதலையென்றால் அவர்களுக்கு கிலி. ஆயினும் ஏற்கனவே அக்கரையிலும் சில அணிகள் விடப்பட்டிருந்தன. விடியவிடிய அந்த இடத்தை விட்டு நகரவில்லை எஸ்.ரீ.எவ். ஆற்றுக்குள் அகப்பட்ட ஈசனுக்கு வெடி பிடித்திருக்கலாம் அன்றி முதலை பிடித்துவிடும். அதிலும் தப்பி இருந்தானாயின் விடிந்தவுடன் ஆளைப்பதம் பார்க்கலாம். இதுதான் அவர்கள் ஊகம்.

விடிநிலவு எழப்போகிறது. ஈசன் மிக லாவகமாக சிறிது தூரம் நகர்ந்திருந்தான். தலையை சற்று உயர்த்தி கரையைப் பார்த்து கடக்க முயன்றான். முடியவில்லை. விடிந்தால் அவனுக்கு சாவுதான். அதிலும் ஒரு நம்பிக்கை. அதற்கிடையில் கூதல் கொன்றுவிடப்பார்த்தது.

விடிந்துவிட்டது.

ஈசன் இல்லவே இல்லை. வெறும் ஊகத்தை வைத்தும் உறுதிப்படுத்திவிட முடியாது. தனது அடுத்?த வலையை வீசியது எஸ்.ரீ.எவ். ஊர்ச்சனங்களை எல்லாம் திரட்டி வந்து ஆற்றில் இறக்கிவிட்டு 'ஈசன் ஆத்துக்குள்ளை இறங்கிப் பிடிங்கே' என்று கூறி, ஒரு படலம் ஆரம்பமானது. ஆண், பெண் சகலரும் இறங்கி ஆற்றைக் கிளறித் தள்ளினார்கள்.

ஈசன், மூக்குத் துவாரத்தை மட்டும் வெளியில் வைத்துக் கொண்டு கடைசி இத்தி மரத்துக்கு முன்னால் உள்ள பற்றையோரமாக சல்வீனியாவிற்குள் புகுந்து படுத்திருந்தான். எவரும் அந்தப் பக்கமாக வரவில்லை. சிறிது நேரத்தில் பள்ளி மாணவர்களையும் கொண்டு வந்து இறக்கிவிட்டது எஸ்.ரீ.எவ். அதில் இரு மாணவிகள் எதிர்மாறாக அந்த இத்தி மரத்தடிக்குச் சென்று பற்றைப் பக்கம் பார்த்துவிட்டார்கள். அங்கே....? திடுக்குற்றவர்கள், பின் சகஜ நிலைக்கு வந்தார்கள். ஈசன் அசையாமல் கிடந்தான். ஆளையாள் இனங்கண்டுவிட்ட நிலைமை. சுற்று முற்றும் பார்த்த அந்த மாணவிகள், எதையோ தங்களுக்குள் கதைத்துக் கொண்டனர். ஒரு மாணவி ஆற்றுக்குள் மெதுவாக இறங்கி வந்து பொருளொன்றை எடுப்பதற்கு குனிவது போல் குனிந்து இன்னும் சல்வீனியாவை அள்ளியள்ளி ஈசனின் உடை தெரிந்த இடத்திற்கு போட்டு மறைத்துவிட்டார்கள். அவ்விடத்தில் நின்று தாமதிக்காமல் விறுக்கென்று இருவரும் திரும்பிவிட்டனர்.

இந்த பகுதியில் துறையல் நடந்து கொண்டிருந்தது. வந்த மாணவிகள் 'அந்தப் பக்கமாகப் போகாதீர்கள் அங்கு நாங்கள் ஒரு முதலையைக் கண்டோம்' என்று ஒரு பீதியை கிளப்பிவிட்டு எல்லோரும் சேர்ந்து எஸ்.ரீ.எவ். முன்னால் ஆற்றைக் குடை ந்தார்கள்.

அன்று காலை 'ஈசனை முதலை பிடித்துவிட்டது' எனும் கதை ஊரில் பரவியது. இன்று நடந்த சுற்றிவளைப்பில் எவரையும் முகாம் கொண்டு செல்லவில்லை. ஊரே முகாம்தானே.

ஊர் அடங்கிவிட்டது. மூன்றாவது அணியும் ஊருக்குள் நின்று முகாம் திரும்பியநேரம். ஐயருக்கு 'சீவன் அங்கு கூடு இங்கு' என்றிருந்தது. இந்த இடைவெளியில் மீண்டும் ஒரு தரம் கோயிலுக்குப் போய் வந்து விட்டார். அடுத்த அணி உள்படுமுன் ஈசனை ஊரில் இருந்து அப்புறப்படுத்துவதற்கு இது நல்ல தருணம்.

ஐயர் கட்டிலில் சாய்ந்தபடி காத்திருந்தார். நேரம் செல்லச் செல்ல சித்திரவதை செய்வது போல் இருந்தது.

சிறிது நேரத்தில் பூபாலபிள்ளை வாத்தியாரும் சில போராளிகளும் அவசரக்குறியோடு வந்திறங்கினார்கள். தாமதித்தால் தவிக்க நேரிடும் உடனேயே கோயிலுக்கள் சென்று ஈசனை தூக்கி எடுத்துக்கொண்டு தயாராகினார்கள். இருளடைந்து கிடந்த முன்னொழுங்கை யூடாக மெயின் வீதியைக் கடந்து நேராகப் பிடித்தால் சரி.

வீதியோரம் நின்ற மரங்கள் மேலும் இருளால் மறைந்துவிட்டது. பழக்கமில்லாத ஊர்நாய்கள் கூட கப்பசிப் என்று வழிவிட்டன. ஊர்த்தொங்கல்வரை பூபால பிள்ளை வாத்தியாரும் ஐயரும் போராளிகளுடன் வந்தார்கள். அதில் நின்று அவர்களை வழியனுப்பிவிட்டு இருவரும் நிம்மதி மூச்சு விட்டனர். பின்னர் அந்த இடத்தில் இருந்து வந்தது போல் திரும்புகின்றனர். எதிரே வந்த ஒரு சந்தி அவர்களைப் பிரிக்கின்றது. ஐயர் தனிவழியே கோயிலை நோக்கி நடந்தார்.

ஐயர் மனதிற்குள் கோயில் மணி டாங்டாங் என ஒலித்தது. அவர் மனம் கடவுளுக்கு செய்த தொண்டிற்கு கிடைத்த பலன் இதுவெனக் கண்டார்.இங்குள்ள அப்பாவி ஆலயங்களெல்லாம் இதுவரைக்கும் ஐந்தாறு தடவைகள் உடைந்து உடைந்து உயிர் பெற்றவை. இன்னும் சில இருந்த இடமுமில்லை. தனதூர்க் கோயில் இன்று செய்த பணி மிகச் சரியானது. என அவர் மனச்சாட்சி அடித்துக்கூறிற்று.

நாளை கோயிலுக்கு பிராயச்சித்த கிரியை செய்து பொங்கல் படைக்க வேண்டும். வருகிற அதிரடிப்படைக்கு பிரசாதமும் வழங்கி நாம் உங்கள் பக்கம் என்பதையும் மீண்டும் தெரிவித்துவிட வேண்டுமென எண்ணிக்கொண்டு நிமிர்ந்தார். ❁

– கோளாவிலூர் கிங்ஸ்லி –

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# கைவிட்டுப்போனோர் கணக்கா?

*'நாட்டைக் காக்க அரிய சந்தர்ப்பம்?. தண்டனை இல்லாமல் - மீண்டும் பணிதொடர நல்ல வாய்ப்பு'*

இது சிறீலங்காவின் சனாதிபதியும் முப்படைகளின் மூத்த தளபதியுமான சந்திரிகா அம்மையார் தெரிவித்தது. படையில் இருந்து தலைமறைவான இராணுவத்தினரை மீண்டும் வந்து இணையுமாறு வேண்டுகோள் விடுத்து, அம்மையார் தெளித்த அரிய கருத்து. கிளிநொச்சிப் பெரும் தளத்தை, விடுதலைப் புலிகளின் ஓயாதஅலைகள் இரண்டு அள்ளிச் சென்றதற்குப் பின்னால் தற்போது தலைமறைவாகிய இராணுவத்தினருக்கு, அறிவிக்கப்பட்ட பொதுமன்னிப்பு அறிவித்தல்அல்ல இது. இது கடந்த பெப்ரவரி மாதம், தாக்குதல் நடத்தி கிளிநொச்சியின் மையப்பகுதிவரை விடுதலைப் புலிகள் மீளப்பெற்ற கையோடு, அறிவிக்கப்பட்ட பொதுமன்னிப்பு அறிவித்தலில் அம்மையார் உதிர்த்த அழகு வசனம்.

பெப்ரவரி நாலாம் திகதி, சிறீலங்காவின் சுதந்திர தினப் பொன் விழாக் கொண்டாட்டங்களுக்கு முன்னதாகவும் கிளிநொச்சியில் தாக்குதல் நடத்தப்பட்டதும், பெருமளவிலான இராணுவத்தினர் கொல்லப்பட்டதும், சுதந்திரநாள் மலிவுவிற்பனைபோல, தலைமறைவான படையினருக்கு பொதுமன்னிப்பு அழித்து படையில் சேர வேண்டுகோள் விடுத்ததும் பழைய செய்திகள்.

பெப்ரவரியில் அறிவிக்கப்பட்ட, தலைமறைவான இராணுவத்தினருக்கான பொதுமன்னிப்பு அறிவித்தல் பின்னர் மே மாதமும் புதிப்பிக்கப்பட்டு, பின்னர் மேலதிகமாக சில நாட்களுக்கு நீட்டப்பட்டும் கூட, தலைமறைவான இராணுவத்தினர் தொடர்ந்தும் தலைமறைவாகித்தான் இருந்துள்ளனர்.

அப்போதும் தலைமறைவான இராணுவத்தினரின் எண்ணிக்கை பதினையாயிரம் என்றுதான் கூட்டப்பட்டது.

முதல் பொதுமன்னிப்புக் காலத்திலும், பின்னர் அடுத்தடுத்து வழங்கப்பட்ட சந்தர்ப்பங்களிலும் பெருவாரியான இராணுவத்தினர் படையில் வந்து இணைந்துகொண்டுள்ளனர், அல்லது கைதுசெய்யப்பட்டுள்ளனர் என, சிறீலங்கா பாதுகாப்பமைச்சகம் தெரிவித்தது. அது கொடுத்த தகவல்களின்படி, மூவாயிரத்திற்கும் உட்பட்ட இராணுவத்தினரைத் தவிர மற்றைய எல்லோரும், படையில் மீண்டும் இணைந்தோ அல்லது கைது செய்யப்பட்டோ உள்ளனர்.

அதேகதை மீண்டும் தற்போது அரங்கேறியிருக்கிறது. தற்போதைய கிளிநொச்சிப் பெரும் தாக்குதலையடுத்து, சுமார் இரண்டாயிரத்தை நெருங்கும் அளவிலான படையினர் கொல்லப்பட்டு, மேலும் இரண்டாயிரம் வரையில் காயமடைந்திருப்பதால், சிங்களப்படைக்கு, ஆள்பலத்தில் பெரும் நெருக்கடி நிலை ஏற்பட்டுள்ளது.

அதையீடுகட்ட தற்போதும், தலைமறைவான இராணுவத்திற்கு பொதுமன்னிப்பு அறிவிக்கப்பட்டுள்ளது. இப்போதும் தலைமறைவான இராணுவத்தினர்குறித்து அரசாங்கம் வெளியிடும் எண்ணிக்கை பதினையாயிரம் என்பதுதான் வேடிக்கை.

கடந்த ஏழாம் திகதி, தேடிக்கைது செய்யும் நடவடிக்கையை இராணுவமும் பொலிசும் கூட்டாக ஆரம்பித்துள்ளதாக அறிவிக்கப்பட்ட பின்னர் பத்துநாளில், பொதுமன்னிப்புப் பற்றிய அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது. சரணடைவதற்காக மூன்றுநாட்கள் வழங்கப்பட்டுள்ளன. இக்கால எல்லை பின்னர் நீட்டப்படலாம். அல்லது இடைவெளிவிட்டு பிறிதொரு தேதியில் மீண்டும் பொதுமன்னிப்புப் பற்றிய அறிவித்தல் விடுக்கப்படலாம்.

இதில் இன்னொரு விடயம் என்னவென்றால், விடுதலைப் புலிகளால் நடத்தப்படும் பெரும் தாக்குதலின் போது பெருமளவிலான இராணுவத்தினர் கொல்லப்படுவதுடன், இந்தப் போரின் யதார்த்தம் பயங்கரமாக மிரட்டுவதால் தலைமறைவாகும் இராணுவத்தினரின் எண்ணிக்கை கொல்லப்படுபவர்களின் எண்ணிக்கையிலும்விட அதிகமாக மாறிவருகின்றது என்பதாகும்.

இடைவெளியில் புதிதாகக் காணாமல் போயுள்ளனர்.

இதில் நியாயபூர்வமாக சந்தேகம் கூடவே எழுகின்றது. அதாவது கிளிநொச்சியில் கொல்லப்பட்டவர்கள் ஆயிரத்தைத் தாண்டி இரண்டாயிரத்தை நெருங்கும் இலக்கத்தில் இருக்க, இராணுவ இழப்பின் தொகையை ஒன்பதில் ஆரம்பித்து, ஓரிரு நூறு எண்ணிகையிலேயே மடக்கி மறைக்க சிறீலங்காஅரசு முயற்சிக்கின்றது. கையேற்கப்பட்ட சடலங்களே அறுநூறைத் தாண்டியிருந்தபோதும், அதில் நூற்றிச்சொச்ச இராணுவத்தினரே அடையாளம் காணப்பட்டுள்ளனர் எனவும்,

போதும், விடுதலைப் புலிகள் அதோகதி என்று சிங்களம் சந்தோசம் கொண்டு கத்திக்கூத்தாடியது. வன்னிக்களமுனையில் ஜெயசிக்குறு இராணுவ நடவடிக்கையை ஆரம்பித்த போதும் விடுதலைப் புலிகளின் இறுதிக்கட்டம் நெருங்குகின்றது என்றும் சிங்களம் புல்லரித்துக் கொண்டது.

ஆனால் யுத்தகள யதார்த்தம்வேறு. விடுதலைப் புலிகளின் பலமோ பலமடங்காய் அதிகரித்துச் செல்ல, சிங்களத்தின் போர்வலுவுடன் மனோவலுவும் உதிரஆரம்பித்துள்ளது.

முல்லைத்தீவு முகாம் தாக்கியழிப்பின்போது இறுதிக்கட்டத்தில் இருக்கும் புலிகள் விரக்தியில் நடத்திய தாக்குதல் என்று, சிங்களம் அன்று சொல்லி சாந்தியடைந்தது.

முக்கியகட்டத்தில் யுத்தம் நிற்கின்றது.

# காணாமல்போனோர் கணக்கா..?

அவர்களே கொல்லப்பட்டவர்கள் கணக்கில் இடம்பெறுவர் என்பதும் சிறீலங்காவின் வாதம். அதாவது இதன்மூலம், கொல்லப்பட்ட இராணுவத்தினரின் குடும்பங்களுக்கு சேரவேண்டிய, கொடுப்பனவுகளை, காப்புறுதித் தொகையை கொடுக்காமல் முடக்குவதற்காக அரசாங்கம் கைக்கொள்ளும் கேவலமான தந்திரமாகவே இதைக் கொள்ளலாம்.

தலைமறைவான இராணுவத்தினரின் எண்ணிக்கையில், இத்தகு வறிய குடும்பத்து இராணுவ வீரர்களின் இழப்பும் இணைக்கப்பட்டு, யாருக்காக தம்மை இழந்தார்களோ அவர்களாலேயே அவமரியாதைக்கு ஆளாகும் நிலைக்கு இந்த சிங்கள இளைஞர்கள் தள்ளப்பட்டுள்ளனர் என்பதே யதார்த்தமாகும்.


யாவற்றையும் கூட்டிக்கழித்துப் பார்த்தால், சிங்களப்படையின் ஆள்பலம் வெகுவாக அருகிவருகின்றதென்ற உண்மை வெளிப்படும். இதில் கொல்லப்பட்டார்களா அல்லது தலைமறைவானார்களா என்ற எமக்குத் தேவையற்ற வாதப் பிரதிவாதங்களுக்கு அப்பால், சிங்கள இனவெறி அரசுகளின் இராணுவ இயந்திரம் பலவீனப்பட்டுப் போகின்ற தென்ற உண்மை தெளிவாகின்றது.

முடிவடையும் கட்டத்தில் யுத்தம் நிற்கின்றது என்று சிங்களம் அண்மைக்காலமாகக் கூறிக் கொண்டிருக்க, முக்கியமான நேரத்தில் முக்கியமான பகுதியில் விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தியிருக்கின்றனர். விரக்தியில் நடத்தப்பட்ட தாக்குதலாக விரக்கியடைந்துள்ள சிங்களம் இதனைக்கூறிக்கொள்ள முனையலாம். ஆனால் கேட்பதற்கு ஒரு சிங்களப்பொதுமகன்கூட தயாராக இல்லை என்பதுதான் நிலவரம்.

இந்த யுத்தத்தை வருட இறுதிக்குள் முடித்துக்காட்டுகின்றேன் என, இந்த வருட ஆரம்பத்தில் சபதம் செய்த சந்திரிகாவின் வார்த்தைகளிலும், விடுதலைப் புலிகள் இறுதிக்கணங்களில் நிற்கின்றனர், யுத்தம் விரைவில் முடித்துவைக்கப்படும் என, கிளிநொச்சிப் பெருந்தாக்குதலுக்கு பத்து நாள்களுக்கு முன்னரேயே சூழுரைத்த ரத்வத்தையின் வார்த்தையிலும் சிங்கள மக்கள் உண்மையைத் தேடுவர் என்பது ஏற்புடையதல்ல.

அரங்க நாயகர்களின் நகைச்சுவைத் துணுக்குகளே இவைகள் என்ற வகையில் நம்மைப்போலவே சிங்கள மக்களும் எடுத்துக்கொள்ள பழகியிருப்பர்.

*மேமாதம் சிறீலங்காப் பாது காப்பமைச்சக அதிகாரிகளின் கண க்கின்படி, மூவாயிரத்திற்கும் குறை வானவர்களே தொடர்ந்து தலைமறைவாகியிருக்கின்றனர் என இரு ந்தது. ஆனால் ஐந்துமாத இடைவெயில், தற்போது சிறீலங்காஅரசு தெரிவித்த தகவல்களின்படி பதினையாயிரம்பேர் தலைமறைவாகியிருக்கின்றனர்.அதாவது பத்தாயிரத்திற்கு மேற்பட்ட படையினர் இக்குறுகிய ஐந்துமாதகால இடைவெளியில் புதிதாகக் காணாமல் போயுள்ளனர்.*



# குழம்பிக் குழப்பும் சிங்களம்

அல்லது யுத்தமுனையில் கொல்லப்படுபவர்கள், யுத்தத்தில் காணாமல் போனோர் பட்டியலில் கொண்டு இணைக்கப்படுவதால் ஏற்படும் தப்புக்கணக்காகவும் இது இருக்கலாம்.

மேமாதம் சிறீலங்காப் பாது காப்பமைச்சக அதிகாரிகளின் கணக்கின்படி, மூவாயிரத்திற்கும் குறைவானவர்களே தொடர்ந்து தலைமறைவாகியிருக்கின்றனர் என இருந்தது.

ஆனால் ஐந்துமாத இடைவெயில், தற்போது சிறீலங்காஅரசு தெரிவித்த தகவல்களின்படி பதினையாயிரம்பேர் தலைமறைவாகியிருக்கின்றனர்.

அதர்வது பத்தாயிரத்திற்கு மேற்பட்ட படையினர் இக்குறுகிய ஐந்துமாதகால

தலைமறைவான படையினர் மீண்டும் இணையத் தவறினால், கட்டாய இராணுவச் சேவை என்பது தவிர்க்கமுடியாததென, சில மாதங்களுக்குமுன் பிரதிப் பாதுகாப்பமைச்சர் ரத்வத்தை தெரிவித்ததும், பாடசாலைகளில் ஆள்சேர்க்க வலை விரித்ததும், தற்போது ஓய்வுபெற்ற பொலிசாருக்கு மீண்டும் அழைப்பு விடுத்திருப்பதும் சிங்களத்தின் சிக்கலை வெளிப்படுத்துகின்றது.

யாழ்குடாநாட்டை சிங்கள இராணுவம் ஆக்கிரமித்து கொடியேற்றியபோதும், பின் சத்ஜெயக்களை நடத்தி கிளிநொச்சியை தன்னகப்படுத்திய

முன்னாள் அதிரடிப்படை உறுப்பினரும் இந்நாள், காயமடைந்த படையினரின் அமைப்புக்கான தலைவருமான அசோகதயாரத்தினா கூறுவதுபோல், அரசியல்வாதிகளால் உருவாக்கப்பட்ட இந்த யுத்தம் வெல்லப்படமுடியாத தொன்று என்பதும், அதேநேரத்தில், அரசியல்வாதிகளின் பிள்ளைகள் யுத்தத்தில் ஈடுபடுவதில்லை, மாறாக ஏழைகளின் பிள்ளைகளே போர்முனையில் மடிகின்றனர் என்ற உண்மையை, சிங்களமக்கள் இனியும் அறியாமலும் உணராமலும் இருப்பர் என எதிர்பார்க்கமுடியாது. ❁

– சுப்பு –

www.tamilarangam.net



# தாயகம் நோக்கிய பயணம்

## முதலாம் பாகம்

### அத்தியாயம் இருபத்திநான்கு

(தொடர்ச்சி)

டொவ் லண்டவ்வும், வேறு அறுபது பேருடன் ஒரு திறந்த கொண்டோலா (வெனிஸ் நகர நதிகளில் ஓடும் படகுகளைக் குறிக்கும் பெயர்) கார்களில் ஏற்றப்பட்டான். வெளி உதவியில்லாமல் அவன் ஐந்து மாதங்கள் வார்சோ சேரியின் இடி பாடுகளுக்கிடையில் வாழ்ந்திருந்தான் என்பதைக் கெஸ்டாப்போ நம்ப மறுத்தது. அவர்களிருந்த புகையிரதம் பனிபடர்ந்த கிராமப்புறங்களுக்கு ஊடாக, சரியான முன்பனிக் காலத்தில் ஓச்விற்சை நோக்கி நகர்ந்தது.

பெர்லின் யேர்மனி 1940.

யூதர் பிரச்சினைக்கான இறுதித் தீர்வைச் செயற்படுத்தும் பணி வழங்கப்பட்டிருந்த எஸ்.எஸ். கேணல் ஈச்மனின் காரியாலயத்துள் எஸ்.எஸ். லெப்டினன் கேணல் கார்ல் கோளஸ் நுழைந்தான். எல்லா நாசி உயர திகாரிகளினதும் மூளைகள் சேர்ந்து உருவாக்கியிருந்த பெரும் திட்டத்தை ஈச்மன் கோளஸ்க்கு காட்டினான். மான சில பிரச்சினைகள் ஏற்படும் என உணர்ந்தார்கள். இதன் காரணத்தினால்தான் கொளஸ் பெர்லினுக்கு அழைக்கப்பட்டிருந்தான். மேற்கு ஐரோப்பாவின் மனித ஒழிப்பு முகாம்களை நிறுவி நடத்துவது மிகவும் கஸ்டமென்று நாசிகளுக்குத் தெரியும். மேலும், பால்க்கனையும், மேற்கு ஐரோப்பாவையும் பொறுத்து கிட்டத்தட்ட மத்தியில் போலந்து இருந்தது. ஒரு 'மாதிரி' முகாமாக செயற்படக்கூடிய பெரிய இறுதி முகாமொன்று தேவையாக இருந்தது. தீர்த்துக் கட்டப்படுவதற்கு, யூதர்களோடு கூட, ரஸ்யர்கள், பிரெஞ்சுக்காரர்கள், வேறு போர்க் கைதிகள், சுதந்திரப் போராளிகள், ஆக்கிரமிக்கப்பட்ட நாடுகளின் அரசியல் எதிரிகள், மதவெறியர்கள் — விசேடமாக கத்தோலிக்க மதத்தைச் சார்ந்த கிறிஸ்தவர்கள், நாடோடிகள், குற்றவாளிகள், பரஸ்பர உபகாரிகள் சங்கத்தினர்,மார்க்சிஸ்டுகள், போல்ஸ் விக்குகள், சமாதானம் — மிதவாதம் — தொழிற்சங்கவாதம் — தோல்விவாதம் பேசும் யேர்மனியர்கள் ஆகியோர் இருந்தார்கள். மற்ற நாடுகளின் உளவாளிகளாகச் சந்தேகிக்கப்படுவோர், விபச்சாரிகள், தன்னினச் சேர்க்கைக்காரர் இன்னும் பல விரும்பத்தகாத பிரிவினர் இருந்தனர். ஆரியர்கள் வாழத்தகுந்த இடமாக ஐரோப்பாவை மாற்ற இவர்கள் எல்லோரும் ஒழிக்கப்பட வேண்டும்.

முழு ஐரோப்பாக் கண்டமும் சித்திரவதை முகாம்களாலும், அரசியல் சிறைகளாலும் தொடர்பு படுத்தப்பட்டிருந்தது. எல்லா ஆக்கிரமிப்பு நாடுகளும், கொஸ்டாப்போ நிறுவனங்களால் நிறைந்திருந்தன. இன்னும் முந்நூறு கூட்டு முகாம்களின் தொடர் ஒன்றும் இருந்தது. அவற்றில் அரைவாசி யூதர்களுக்காக ஒதுக்கப்பட்டிருந்தது.

இன ஒழிப்புக்காகச் செயற்பட்டிருந்த துல்லியமான திட்டமிடல் பற்றி எஸ்.எஸ். லெப்டினன் கேணல் கோளஸ் மிகவும் திருப்தியடைந்தான்.

இப்படியாகக் கவனமாகத் தெரிவு செய்யப்பட்ட இடங்களில் இருந்த முகாம்களிலிருந்தும் கூட, இதை திட்டமிட்டவர்கள், தங்களுக்கு விசேட ஈச்மன் குறிப்பிட்டது போன்ற ஒரு முகாம் இப்படியானவர்களைக் கையாளும். கோளஸ்சின் இவ்வளவு வருடகால நாசிகளுக்கான விசுவாசமான சேவைக்கான பரிசான அவனுக்கு இப்படியான முகாமொன்றுக்கு பொறுப்பு வழங்கப்படுவதாக ஈச்மன் சொன்னான். செக்கோசிலாவாக்கியா எல்லைக்கருகே இருந்த சிறு போலந்து நகரை ஈச்மன் வரைபடத்தில் சுட்டிக்காட்டினான். அது ஓச்விற்ஸ் என்று அழைக்கப்பட்ட ஒரு நகரமாகும்.

டொவ் லண்டவ்வைச் சுமந்து கொண்டு ஓச்விற்சுக்காக தெற்கு நோக்கி ஓடிக்கொண்டிருந்த புகையிரதம் ஒரு புகையிரதச் சந்திப்பான கிறக்கோவில் நின்றது. நகரின் வெளிப்புறத்தில் ஓரிடத்தில் இருந்த உபபாதைகளில் இருந்து மேலும் பல பெட்டிகள் இந்தத் தொடரில் இணைக்கப்பட்டன. பிரான்ஸ் கிறீஸ் நாட்டைச் சேர்ந்த யூதர்களைச் சுமந்து கொண்டு கால் நடைகளுக்கான பெட்டிகளும் யூகோஸ்லாவியா ஒல்லாந்து நாட்டு யூதர்களைச் சுமந்து கொண்டு நிலக்கிரப் பெட்டிகளும் இத்தாலியைச் சேர்ந்த யூதர்களைச் சுமந்து கொண்டு திறந்த கொண்டோலாப் பெட்டிகளும் இருந்தன. குளிர் பயங்கரமாயிருந்தது. திறந்த கொண்டோலா பெட்டியில் இருந்த டொவ்வை ஊடுருவிச் செல்லும் குளிரும் உறை பனியும் சாட்டையாலடிப்பது போல் வாட்டின. அதிலிருந்து அவனைக் காப்பாற்றியதெல்லாம் கிழிந்திருந்த அவனது மேலாடையும் சூழ இறுக அடைக்கப்பட்டிருந்தவர்களிடம் இருந்து கிடைத்த சிறிய அளவு உடல் வெப்பமுமதான்.



பெர்லின், யேர்மனி 1940 — 41

அமையப் போகும் பிரதான காலி செய்யும் இடமும், இல்லாதொழிக்கும் தொழிற்கூடமுமான ஓச்விற்சுக்கு கோளஸ்சைத் தெரிந்தெடுத்தபோது, அவனுடைய செயலாற்றும் திறமையைப் பற்றி நாசி அதிகாரிகளுக்கு நன்றாகத் தெரிந்தேயிருந்தது. 1934 களில், கிட்லர் முதலில் பதவிக்கு வந்த காலத்தில் இருந்து சித்திரவதைத் தடுப்பு முகாம்கள் பலவற்றில் தொடர்ந்து சேவையாற்றிய அனுபவம் அவனுக்கு இருந்தது. கடைசியாக சச்சென்கோசன் முகாமில், உதவிப் பொறுப்பாளனாகக் கடமையாற்றி இருந்தான். கோளஸ் நேர்த்தியாகத் திட்டமிட்டுச் செயலாற்றுபவனாகவும், இடப்படும் கட்டளைகளை எதுவித கேள்விகளுக்கும் கேட்காமல் நிறைவேற்றுபவனாகவும் இருந்தான். அதையும் விட கடுமையான வேலைகளிலீடுபடத் தயங்கியவனுமல்ல.

வயல் நிலங்களும், கிராமப் புறங்களையும் உள்ளடங்கிய இருபதினாயிரம் ஏக்கர்கள் கொண்ட ஓச்விற்சின் நிலப்பரப்பு முழுவதும் சுத்தம் பண்ணப்பட்டு சுற்றிவர வேலியும் போடப்பட்டது. இருந்ததில் திறமை வாய்ந்த நிர்மாணத்துறைசார் நிபுணர்கள், பொறியியலாளர்கள், விஞ்ஞானிகள், போக்குவரத்துத்துறை நிபுணர்கள், அதிரடிப்படைப் பிரிவுகளின் சிறந்த வீரர்களும் அந்தப் பெரும் திட்டத்தில் வேலை செய்ய வந்து குவிந்தனர். ஓச்விற் பிரதான முகாமில் இருந்து இரண்டு மைல் தொலைவில் இருந்த பேர்க்கினோ என்ற இடம் விசவாயு கூடங்களுக்காகத் தெரிவு செய்யப்பட்டது. பேர்க்கினோ நல்ல ஒதுக்கிடமொன்றிலும், தனக்கேயுரிய புகையிரதப் பெட்டிகளைக் கழற்றி இணைக்கும் உப பாதைகளையும் கொண்டிருந்தது. மேற்கு ஐரோப்பா, தெற்கு ஐரோப்பா, கிழக்கு ஐரோப்பா ஆகிய இடங்களில் இருந்து புகையிரதப் பாதைகளின் மூலம் வந்து போக வசதியான இடத்தில் இருந்ததாலேயே இவ்விடம் தெரிவு செய்யப்பட்டது. சைலேசியன் சுரங்கத் தொழில் மாவட்டத்தின் நுழைவாயிலில் நிரந்தரமாகச் சேறுப் படலத்தில் மூழ்கியிருந்த ஓச்விற்சுக்கு அதுவரை எதுவித முக்கியத்துவமும் இல்லாமலேயே இருந்தது. இப்படியான ஒரு முகாம் தொகுதியை அமைப்பதற்குத் தங்கள் சகாக்களிடம் இருந்தே எதிர்ப்பையும் எதிர்கொள்ள வேண்டியிருந்தது.

கிழக்குப் போர் முனையில் போரை நடாத்திச் செல்ல கிடைக்கக்கூடிய எல்லா புகையிரத மார்க்கங்களும் உருண்டு செல்லும் வண்டிகளும் யேர்மன் இராணுவத்திற்குத் தேவையாக இருந்தது. ஐரோப்பா எங்கு மிருந்தும் யூதர்களைக் கொண்டுவரும் பயணற்ற வேலைக்கு மதிப்பு மிகுந்த புகையிரத வசதிகளை பாவிப்பதை அவர்கள் விரும்பவில்லை. போரை நடத்துவது போன்று யூதர்களுக்கான இறுதித் தீர்வைச் செயற்படுத்துவதும் முக்கியமானதொன்றே என்பதில் நாசிகள் பிடிவாதமாயிருந்தனர். பிரச்சினை கடைசியாக கிட்லரிடம் சென்றபோது அவன் யேர்மன் இராணுவத் தலைமைப் பீடத்துக்கு மாறாக, எஸ்.எஸ்.டி கெஸ்டாப்போ மற்றும் நாசி அமைப்புக்களின் விருப்பத்தையே சார்ந்திருந்தான்.

கொளஸ் ஓச்விற்சின் பொறுப்பை ஏற்றுக்கொண்ட கையோடு ரெப்லிங்காவுக்குப் போய் அழிப்பு முறைகளைப் பார்வையிட்டான். அவன் ரெப்லிங்காவின் பொறுப்பதிகாரி எஸ்.எஸ். கேணல் வேர்த் ஒரு சீரற்ற முறையில் காரியமாற்றும் கற்றுக்குட்டி என்று தீர்மானித்து அதை வெளிப்படையாகவும் கூறினான். ரெப்லிங்காவில் கொலைகள் காபன் மொனக்சைட் வாயுவைக் கொண்டே நிகழ்த்தப்பட்டன. இது ஒரு செயல்திறன் குறைவான முறையாகும். அத்தோடு இயந்திரங்களும் அடிக்கடி பழுதடைந்ததோடு இம்முறை பெறுமதிமிக்க பெற்றோலை விழுங்கி வந்தது. இவற்றைவிட வேர்த் ஒரு திட்டமிட்ட அடிப்படையில் செயலாற்றுபவனாக இல்லாதிருந்ததும் வஞ்சகத்தனமான வழிமுறைகளைப் பின்பற்றாததும் யூதர்கள் எப்போதும் குழப்பம் செய்வதை எதிர்நோக்க வைத்தது. முந்நூறு பேருக்கு மேல் ஒரே நேரத்தில் கொல்லப்பட முடியாத அளவிற்கு திறனற்ற முறையில் ரெப்லிங்கோ அமைக்கப்பட்டிருப்பதாக கொளஸ் உணர்ந்தான். ஓச்விற்சின் விசவாயுக் கூடங்கள் ஆயத்தமான

லியோன் யூரிஸ்

போது ஆரம்ப 'விருந்தாளிகளை' வைத்து கொளஸ்சும் அவனது விஞ்ஞானிகள் கூட்டமும் விரிவான பரிசோதனைகளை நடத்தினார்கள். சைக்கிளோன் பி என்ற ஒருவகை மசகு பிறஸிக் அமில வாயுவே இவ்வேலையைத் திறம்படச் செய்யும் என முடிவெடுத்தனர். கம்பேர்க்கின் சர்வதேச கிருமி நாசினி நிறுவனத்திடம் பிரமாண்டமான அளவில் இவ் வாயுவை விநியோகிக்கும் கட்டளைகளை கோளஸ் இட்டான். பேர்க்கினோவின் கூடங்கள் ஒரே நேரத்தில் மூவாயிரம் பேரைக் கொல்லக்கூடியதாக வடிவமைக்கப்பட்டிருந்ததோடு, காலநிலை சீராக இருக்கும் பட்சத்தில் திறமையாகச் செயற்பட்டால், ஒரு நாளைக்குப் பத்தாயிரம் பேர்வரை கொல்லப்படக் கூடியதாக இருக்கும்.

தொடரும்...

## வாசகர் கவனத்திற்கு !

இங்கு பிரசுரிக்கப்பட்டுள்ள தலைப்பிற்குப் பொருந்தக்கூடிய வகையில் எட்டுவரிகளுக்கு மேற்படாமல் ஆழ்ந்த கருத்துள்ள கவிதைகளை எதிர்பார்க்கிறோம். உங்கள் ஆக்கங்களை 13 - 11 - 1998 இற்கு முன்பாக எமக்குக் கிடைக்கக்கூடியவாறு கீழ்தரப்பட்ட முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

**மண்ணையும் கொஞ்சம்....**

கவிதை அனுப்ப வேண்டிய முகவரி:

**'Kalathil',**

**Eelam House, 202 Long Lane, London SE1 4QB.**

www.tamilarangam.net



## இரு வாரத்துக்கொருமுறை கடிதம் மூலம் சந்திப்போம்!

அன்புச் சகோதரமே !

என்னையும் உன்னையும் பெற்று வளர்த்து ஆளாக்கிய எங்கள் பெற்றோர்கள்– நாம் கட்டித் தழுவி வளர்ந்த சகோதர சகோதரிகள்– கூடி வியைாடி ஆடிப்பாடி மகிழ்ந்த தோழர்கள்– சுற்றி வர துப்பாக்கி ஏந்திய இராணுவத்தினர் மத்தியில் தனிப்பட்ட வாழ்வு உரிமை என்பதே இல்லாமல் உண்பதும் உறங்குவதும் கூட இராணுவத்தினர் சுற்றி நிற்கும் பரிதாப நிலையில் தவிக்கின்றார்கள். எங்கள் இளம் மொட்டுக்கள் சிங்கள இராணுவத்தின் இனவெறியினாலும் காமவெறியினாலும் கருக்கப்பட்டு வாழ்வும் உயிரும் இழக்கும் சோகக்கதைகள் எம் மண்ணின் நாளாந்தக் காட்சிகளாக இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றன. கண்ட இடத்தில் தாம் சுட்டுக் கொல்லும் நினைத்த நேரத்தில் தாம் கைது செய்து சித்திரவதைகள் செய்யும் மனிதக் கூட்டமாக எம் உடன்பிறப்புக்களை கருதும் சிறிலங்காப் படைகளின் மனிதாயத்திற்கு எதிரான குற்றங்களை அடுக்கடுக்காக எழுதிக் கொண்டே செல்லலாம். என்னையும் உன்னையும் எம் அன்னை பெற்றுத் தவழ விட்ட தாய்மண் – எங்களுக்கு உருவும் அறிவும் வாழ்வும் தந்த தாய்நாடு நாளும் பொழுதும் இடிக்கப்பட்டும் தகர்க்கப்பட்டும் உருக்கலைக்கப்பட்டு சிங்கள இராணுவத்தின் குண்டுப் பொழிவில் குலுங்கி நடுங்கி பிடுங்கி வீசப்பட்டுக் கொண்டிருக்கின்றது. இவை எல்லாவற்றையும் பார்த்தும் கேட்டும் உணர்வுகளே செத்து விட்ட மனிதர்களாக நாம் உலகெல்லாம் அகதிக் கூட்டமாக உலக வலம் வந்து கொண்டிருக்கின்றோம். ஆனாலும் காக்கைக் கூட்டு குயில்களாக குதூகலமாக நாம் வாழலாம். காக்கைகள் அடையாளம் காணும் நேரங்களில் வான்வெளி வரை அவை குயில்களைக் கொத்திக் கலைத்த காட்சிகளை நாம் பார்த்த சம்பவங்களை மறந்திருக்கலாம். சொத்தும் சுகமும் பதவியும் பட்டமும் பலதும் பெறும் வாழ்வில் எம் உடன்பிறப்புக்களை உயிர் தந்த நாளங்களை உணர்வு தந்த சொந்தங்களை மனிதராக்கிய தாய் நாட்டை நாம் நினைத்துப் பார்க்க அவர்களுடைய்– அதனுடைய விடுதலைக்காக உழைக்க எமக்கு நேரம் இல்லாமல் இருக்கலாம். மனம் இல்லாமல் இருக்கலாம். வீண்வதண்டா வாதங்கள் பேசியும் நடந்த முடிந்த நேற்றை இன்றாக்கி விமர்சித்தும் நாம் செய்ய வேண்டிய கடமைகளில் இருந்து நழுவுவதற்கு நியாயங்கள் கற்பித்து நம்மை நாம் ஏமாற்றலாம். ஆனால் சிங்கள பேரினவாதிகளுக்கு நாம் தாம் நாம் புலிகளாக வாழாவிட்டாலும் புலிகளுக்கு ஆதரவு கொடுக்காவிட்டாலும் நாம் புலிகளே. ஒவ்வொரு தமிழனும்– அவன் சிங்களத் தலைமைகளின் காலைக் கழுவினால் என்ன சிங்கள இராணுவத்தின் கூலிப்படைகளாக குற்றேவல் செய்தால் என்ன ஊரில் வாழ்ந்தால் என்ன உலகில் எங்கு வாழ்ந்தால் என்ன– அவன் சிங்களப் பேரினவாதிகளைப் பொறுத்த வரை அழிக்கப்பட வேண்டிய பொருள். சிங்களப் பேரினவாதம் தமிழரின் எந்த விதமான வளர்ச்சியையும் தனது பேரினவாதப்போக்கினைத் தடுக்க கூடிய ஒன்றாகவே கருதுகின்றது. அதனால் தான் ஊரில் தமிழரின் பொருளாதாரத்தை உட்கட்டுமானங்களை யுத்தத்திற்கு முன்னும் பின்னும் பலவிதங்களில் அழித்தொழிக்கும் சிங்களப் பேரினவாதத்தின் பிரதிநிதித்துவ அரசான சிறிலங்கா அரசாங்கம் தற்பொழுது உலகெங்கும் தமிழர்களுக்கு எதிரான உண்மைக்கு மாறான பிரச்சாரங்களைக் கட்டவிழ்த்து விட்டு அவற்றை மக்கள் மயப்படுத்த பணத்தையும் சட்டபூர்வ அரசாங்கம் எனக் காலனித்துவம் சூட்டி வைத்துள்ள மகுடத்தையும் பயன்படுத்தி வருகின்றது. இதனை சந்தை நலன்கள் மேலும் தென்னாசியாவில் இராணுவ வல்லாதிக்க பெருக்கத்தின் மேலும் ஆயுத விற்பனைகள் மேலும் நாட்டம் கொண்ட கழுகுகள் தமக்குத் தீனியாகக் கருதி சிங்களப் பேரினவாத்தின் சர்வதேசக்குற்றச் செயல்களுக்குத் துணைபோவது மட்டுமல்லாது தமிழர்களுக்கு எதிரான சிங்கள அரசாங்கத்தின் போரையும் பிரச்சாரத் தேரையும் தாமும் வடம்பிடித்து இழுத்து முன்னேற்ற முயற்சிகள் எடுக்கலாம். இந்த முயற்சிகளின் விளைவுகளில் ஒன்றாக ஐக்கியநாடுகள் சபையினதும் உலக அமைப்புக்களினதும் நடுநிலையான நடவடிக்கைகள் தமிழர்களுக்கு கிட்டுவதில் பலத்த சிரமங்களும் காலதாமதங்களும் கூட ஏற்படுத்தப்படலாம். நாம் வாழும் நாடுகளில் தமிழ் மக்களுக்கு எதிரான போக்குகள் சட்டவாக்கங்கள் அரசியல் தஞ்ச நிலை நிராகரிப்புக்கள் திருப்பி அனுப்பல்கள் ஊக்குவிக்கப்படலாம். இதன் வழி தமிழ் மக்கள் எங்கு வாழ்ந்தாலும் அவர்களின் வாழ்வை வளத்தை சிதைக்க வேண்டும் என்ற சிங்களப் பேரினவாதத்தின் இலக்கை எய்த சிறிலங்கா அரசாங்கம் இலங்கைத் தீவையே சந்தைக் கழுகுகளின் தீனியாக்கலாம். திறந்த பொருளாதார அமைப்புக்கள் நிறைந்த ஊக்குவிப்புச் சலுகைகள் ஏன் எந்தக் குழந்தையாக இருந்தாலும் கூட உடலின்பம் பெறுவதற்கான வழிமுறைகள் எல்லாமே நிறைந்த நாடாக இலங்கைத் தீவினை பண்டாரநாயக்கா குடும்பம் உலகிற்கு கையளிக்கலாம். ஆனால் இவற்றை எல்லாம் முறியடித்து உண்மையை யதார்த்தத்தை எம் மக்களுக்கு இழைக்கப்படும் கொடுமைகளை சர்வதேச நிறுவனங்களின் அலட்சியங்களை எடுத்துரைத்து எம் மக்களதும் எமது எதிர் கால வாழ்வினதும் வெற்றிகளை ஆக்கங்களை உறுதிப்படுத்த வேண்டியவர்களாக நானும் நீயும் இங்கு புலம்பெயர் தமிழர்களாக தமிழீழ மக்களின் தூதுவர்களாக பொறுப்பினைச் சுமந்து நிற்கின்றோம். இந்த எங்கள் பொறுப்பினை எமக்கு நினைவூட்டும் சம்பவமாக வன்னி மக்களின் சாத்வீகப் போராட்டங்கள் அமைகின்றன. சிந்திப்போம். செயற்படுவோம். ஒற்றுமையாய் ஓரணியாய் தமிழீழ தேசத்தில் உயிர் பெற்றவர்கள் என்ற பொறுப்புணர்வுடன் தமிழீழத் தேச மக்களின் விடுதலை இயக்கமான தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பின் தலைமையில் நாம் நாமும் நம் தமிழீழ உடன்பிறப்புக்களும் ஒளிமயமான எதிர்காலத்தில் வாழ்வதற்காக அவர்களின் சாத்வீகப் போராட்டத்திற்கு பதில் கிடைப்பதற்கும் அவர்களின் விடுதலைப் போராட்டத்திற்கு விடை கிடைப்பதற்கும் சர்வதேச சமுகத்தினரிடை தமிழீழ மக்களின் சுயநிர்ணய உரிமையை ஏற்கும்படி சொல்லாலும் செயலாலும் வற்புறுத்துவோம். அதே நேரம், இன்றைய தேச அரசுக்கள் பெரும்பாலும் யுத்தத்தின் மூலமே தோன்றியவை என்ற உலக வரலாற்றை மறவாது– தேச அரசாக இலங்குவதற்கு யுத்தங்களை எதிர் கொள்வதற்கான இராணுவ முன்னாயத்த நிலை ஒரு நிபந்தனையாக உள்ளது என்பதை மனதிருத்தி மீட்கப்பட்ட நிலையிலுள்ள எங்கள் தமிழீழத்தேசத்தின் பகுதிகள் உறுதிப்படுத்தப்படவும் மீட்கப்பட வேண்டிய நிலையிலுள்ள எங்கள் தமிழீழத் தேசத்தின் பகுதிகள் விடுதலையை விரைவாக அடையவும் தமிழீழ விடுதலைப் புலிகளின் இரணுவப் பலத்தை அதிகரிக்க வைக்கவும் நாம் மதியும் நிதியும் உணர்வும் உழைப்பும் அளிக்க வேண்டியவர்களாக உள்ளோம்.

அன்பின் ஆசிரியர்

## பிரித்தானியாவில் மகளிர் எழுச்சி தினம்

10–10–98 அன்று இலண்டனில் விடுதலைப்புலிகளின் முதல் பெண் மாவீரரான 2ம் லெப். மாலதியின் நினைவு நாளும் தமிழீழப் பெண்களின் எழுச்சி நாளும் விடுதலைப்புலிகளின் மகளிர் அமைப்பு பிரித்தானியக்கிளையினரால் கொண்டாடப்பட்டது. இந்தக் கலை நிகழ்வு பற்றிய கவிதை இது.

*மாற்றான் நிழலில்*
*மானங் கருகி விழ*
*ஆற்றாது நொந்து*
*அரற்றி யழுத நிலை*

*கொடிய இராணுவத்தின்*
*கூரிய கரங்களினால்*
*வடிந்த குருதிக்கும்*



*நேற்றோடு போனதென*
*நிமிர்ந்த தமிழச்சி..*
*மூச்சோடு கலக்க*
*முடிவு செய்தார்*
*லண்டனிலே!*

*காற்றோடும் கடலோடும்*
*கலந்து மறைந்த கண்ணீர்*
*ஊற்றுக்குத் தடைபோட்டு*
*உயர்ந்த தமிழ்ப் பெண்ணை*
*பாட்டால் கலையால்*
*பக்தியுடன்*
*நெஞ்சணைத்துப்*
*போற்றி மகிழ்ந்து*
*புத்துணர்வு தந்திட்டார்!*

*எங்கள் நிலத்தில்*
*எக்காளமிடுகின்ற*
*சிங்களப் படையின்*
*சிறுமைத் தனம் உலகின்*
*எங்கணும் வெளிக்க*
*எழுந்தார் தமிழ்ப்பெண்கள்!*
*தங்கள் தாயகத்தின்*
*தாகம் ஒலித்து நின்றார்!*

*வாழ்விழந்த*
*பொண்களுக்கும்*
*மடியிற் கருவாய்*
*மாய்ந்த உயிர்களுக்கும்*
*பிடியில் கதறிப்*
*பிணமாகிச் செம்மணியின்*
*அடியிற் புதைந்த*
*எங்கள் உறவுகட்கும்*
*முடிவு தர இங்கே*
*மூச்சோடு*
*திரண்டுவிட்டார்!*

*கவிதைகள் உயிர்த்தன!*
*கலையும் உயிர்த்தது!*
*காலத்தின் தேவையின்*
*கரங்கள் உயர்ந்தன!*

*செவிகள் சிவக்க*
*சிந்தனைகள் துவக்காக*
*குவியும் உதவியெனக்*
*கூறி யெழுந்தார்கள்!*

–புலவர்–

வன்னியில் நடைபெறும் உணவுப்போராட்டத்தை ஆதரித்து பிரித்தானியா[redacted]பிரதி வெள்ளிக்கிழமை தோறும் சுழற்சி முறையில் அமைதிப்போராட்டம் ஐக்கிய நாடுகள் உயர்ஸ்தானிகராலயம், சர்வதேசச் செஞ்சிலுவைச்சங்கம், பிரித்தானிய பிரதமரின் அலுவலகம் ஆகியவற்றின் முன்னால் நடைபெறுகிறது. இதன்படி கடந்த வெள்ளிக்கிழமை சர்வதேசச் செஞ்சிலுவைச்சங்க அலுவலகத்தின் முன்னால் அமைதிப் போராட்டம் நடைபெற்றது.




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

# மீண்டும் தாய்மடி சேர்ந்த பூரிப்பில்.....

அன்னை மடி தவழும்
ஏதும் அறியா மழலையாய்
சிறுபிஞ்சுக் கரமெடுத்து
தாயவள் புழுதிபடப் புரண்டெழுந்து
பின்னேவரும் கடமையெல்லாம்
பிள்ளைப் பருவத்தின்
மணவிளையாட்டில்
செய்துகாட்டி.... மகிழ்ந்திருந்து...
சொந்த—பந்தம் மதித்து
பண்பாட்டில் மிளிர்ந்து
கஞ்சியோ கூழோ
கண்ணியமாய் உழைத்துக் குடித்து
அழகுக் கலைகள் பேணி
தென்றலையும் நிலாவையும்
காதலுக்குத் தூதுவிட்டு
இயற்கையுடன் ஒன்றி....
இணைந்து, போற்றி
மனிதச் சிகரங்களாய்
வாழ்ந்திருந்து.....!
இடையிலே உருவெடுத்த
இனவாதப் பூதங்களால்
இடப்பெயர்வுகளும்
வறுமையும் பிணியும் உயிரிழப்பும்
துன்பத்தின் வடிவமெல்லாம்
பல்வேறு திசைகளிலும்
துளைக்க....
அல்லற்பட்டு, நொந்து களைத்து
உயிர்பூவின் இருப்புக்கே ஊசலாடி...
அன்னை மடிபிரிந்து இருந்தவர்க்கு
மீண்டும் அவள் தாலாட்டை
செவிவழி பருகிடும் பேறு என்றால்....
சொல்லவே இனிக்கின்ற சேதிதானே!
இதைக் கண்டு மகிழ்ந்திடும்
மாந்தர்தம் களிப்பை—
அவர்தம் ஆனந்தக் கூத்தை
எண்ணிப் பார்த்திட
மனம் துள்ளும்தானே!

ஓயாத அலைகள் வந்து
தழுவிச் சென்ற
கிளிநொச்சி—பரந்தன் எங்கள்
தாயகத்தின் பசியசோலை!
ஆதரவு அற்றுப்போனவரை
அரவணைத்து பசிபோக்கும்
அன்னைக்கு ஈடாகும்.
விவசாயம், கைத்தொழில்,
வர்த்தகம் என்றுபல
தொழில்வளமும் மலிந்த பூமி
ஏழையாய் வந்தவரும்
உழைப்பால் உயர்ந்துவிட்ட
வரலாறு பலகண்ட
வளமான ஊர்களிது.
பாலும் தேனும்
பசுஞ்சுனையும்
தாகந்தீர்க்கும் இளநீரும்
பார்க்கும் இடமெங்கும் தோன்றும்
பச்சைப்பசேலன கண்குளிரும்
நஞ்செயும்
தாராளம் தாராளம்.

இந்தச் சோலையிலே
வியர்வை சொரிந்து வளர்த்தவரை
கழுத்தை நெரித்து
மரத்தின் அடியில்
புதைத்தவன் வெறியன்—
பாலுக்கழுத குழந்தையைப்
பிடுங்கி, நாற்றுப் பாத்திக்குள்
போட்டு மிதித்தவன் வெறியன்!

நேற்றுவரை,
நீர்வார்க்க ஒருவரில்லை.
வளைந்து வாடிக்
கருகின பயிர்களா?
பிஞ்சும் பூவுமாய் கிடந்தவை
போயின.
மிச்சம் மீதிகள் கூட
அலியனுக்கும்
கொம்புக்கு மண்ணெடுத்த
எருமைக்கும்
இரையாகி துவம்சம்பட்டுக்
கிடந்தன.
எத்தனை நாள்தான்
எங்கள் வாசல்களில்
ஓணான்கள் உலாவும்?
எத்தனை பொழுதுகள்
எங்களின் கண்முன்னால்
அரக்கன் உலாவரலாம்?
ஆக்கிரமிப்பாளன் முகாமிட்டு
அட்டகாசம் செய்வதனை
எத்தனைநாள் பொறுத்திடலாம்?
இடியும் மின்னலுமாய்
எண்திசையும் எதிரொலிகள்
கிழக்கிலா மேற்கிலா
இல்லை இல்லை...வடக்கிலா?
பூமி பிழந்ததுவோ!
கடல் அலைதான் எழுந்ததுவோ!
அதிகாலைப் பொழுதின்
கண்ணயர்வு போக்கி
விழித்துப் பார்ப்பதற்கு
எதிரிக்கு விநாடிகள்
இருக்கவில்லை.
எங்கள் சோலையை அழித்து
கோட்டை அமைத்திருந்தான்
கற்பனைக்கு மிஞ்சிய
காப்பு ஏற்பாடாய்
எத்தனையோ காப்பரண்கள்,
சிறுமுகாம்கள், பெருமுகாம்கள்,
ஆட்டிலறித் தளத்தோடு—



மண்
அணையெழுப்பி
முள்வேலி,
பூமியே வெடித்தாலும்—இது
வெடிக்காது என்றிருந்த
பதுங்குகுழி அமைப்பு,
புலிகளையும் அவர்
நிழல்களையும்
பார்த்திருக்கத்தக்க ஆட்பல
எண்ணிக்கை...!
விமானங்கள், டாங்கிகள்—
ஊர்ந்துவரும் யானைகள்....!
'சூரசம்காரம்' எழுத்தில்தான்
கற்றதுண்டு.
அசுரர்களை அழித்தொழிக்கும்
தர்மயுத்தம் இங்கு கண்ணெதிரில்
பார்த்துவிட்டோம்.
எத்தனை இன்னல்கள் வந்திடினும்
தயங்கமாட்டோம் என்றும்
துணிவுடன்
இவர்களைத்தான் நாம் பெற்ற
குழந்தைகள் என்றுரைப்போம்
கட்டித் தழுவிடுவோம்
ஆர ஆணைத்தெடுத்து
முத்தம் செய்திடுவோமா?

பிஞ்சுடலில் முறுக்கேற்றி
சீறும் புலியினது பலம்பெற்று
தமிழீழம் பெற்ற தவப்
புதல்வனின் வழிநடந்து
எங்கள் இடர் உடைக்க
உயிர்கொடுத்தார்
பூவை என்று பூட்டிவைத்த
மடமை உணர்ந்துகொண்டோம்
புயல்கள் இவர்களென
புரிந்துகொண்டோம்
பருவக் கோளாறில்
பேதலிக்கும் காலத்தில்
வேங்கையாய் உருவெடுத்த
வீரர்களின் தியாகத்தில்
முல்லையில் எழுந்த அலை
கானகமும் தாண்டி
கிளிநொச்சியில் வீசியதே!
ஆங்காங்கு பாறைகளை
அள்ளியே சென்றதுவே!
எதிரிவிட்ட எச்சங்களாய்
எலும்புக்கூடுகளும்
மண்டை ஓடுகளும்
மலக்குழிப் பிணங்களுமாய்...
சிலகால அட்டகாசத்தில்
சின்னாபின்னப்பட்ட
தாயகக் கோலம்!
நீண்டு நிலைத்தானாகில்
நினைக்கவும் முடியவில்லை......

ஓயாது...இந்த அலை
ஒரு பிடி மண்ணேனும்
எதிரிவசம் இருக்கும்வரை
முறைக்கு முறை
வந்துமோதும்
எழுந்துவரும்
அலையோட
மக்கள் அலை சேரும்
எங்கள் பூமியைத் தீண்டிய
சிதறிய உடலங்கள்
தீயினில் சாம்பராகும்
தாயகம் மீதினில்
நிம்மதி தந்திட
தென்றலும் வந்துபோகும்
அதில் பட்டொளி வீசிடும்
புலிகளின் மணிக்கொடி
பறந்து நிதம் ஆளும்!

— வதனிலா —